www.padippakam.com

MARXISM, OPPORTUNISM &
THE BALKAN CRISIS.

# மார்க்சிசமும்– சந்தர்ப்பவாதமும், பால்கன் நெருக்கடிகளும்

## சுலோட்டரின் தொழிலாளர் புரட்சி கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு எப்படி உதவுகின்றது?



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை.
5. MAY. 1994.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

MARXISM, OPPORTUNISM &
THE BALKAN CRISIS.

# மார்க்சிசமும் — சந்தர்ப்பவாதமும், பால்கன் நெருக்கடிகளும்

சுலோட்டரின் தொழிலாளர் புரட்சி கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு எப்படி உதவுகின்றது?



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை,
5. MAY. 1994.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஒரு பிரமாண்டமான துன்பியல் பால்கனில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மிகவும் துன்பத்துக்குள்ளாக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் இன்று மீண்டும் ஒரு முறை இரத்த வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுப்பப்பட்ட பிரமாண்டமான பிரச்சனைகள் எங்களுடைய இற்றை நாள் வரையிலும் தீர்க்கப்படாமல் இருப்பதுடன் மட்டுமல்லாமல், வெடித்துச்சிதறும் சக்தியுடன் மீளெழுச்சியடைவது வரலாற்றின் இரக்கமற்ற ஓர வஞ்சங்களில் ஒன்றாகும்.

முன்னைநாள் பால்கன் யுத்தத்தைப் போலவே, பெரும் வல்லரசுகள் தங்களது கைகளை நெருப்பில் எரித்துக் கொள்கின்றன. அவர்கள் ஒவ்வொருவரும் சேர்பியர், முஸ்லீம்கள், குரோஷியர் அனைவரையும் ஒருவரை ஒருவர் படுகொலை செய்யத் தூண்டிவிடுவதுடன், யூகோஸ்லாவியாவை இராணுவத் தலையீட்டுக்கான பரிசோத னைக் களமாகவும் பாவிக்கின்றனர். எல்லா வேளையிலும் வாஷிங்டன், பொன், லண்டன், பாரிஸ் ஆட்சியாளர்கள் யூகோஸ்லாவியாவை வன்முறை ரீதியாகத் துண்டாடுவதன் மூலம் தங்களது சொந்த மூலோபாய பொருளாதார நலன்களை முன்னெடுக்க முயல்கின்றனர்.

தங்களது சக்தியையும் போரிடும் தன்மையையும் மீண்டும் மீண்டும் வெளிக்காட்டிய யூகோஸ்லாவிய தொழிலாள வர்க்கம், கசப்பான விதத்தில் காட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது. முன்னாள் ஸ்ராலினிச அதிகாரத்துவங்களான சேர்பியாவின் **Slobodan Milosevic**, குரோஷியாவின் **Franjo Tudjman**, சுலோவினியாவின் **Milan Kucan** போன்றோர் பொஸ்னியாவின் **Alija Izetbegovic** போன்ற வகுப்புவாத அரசியல் வாதிகளுடன் இணைந்து இனவாத சோவனிச நெருப்பை வேண்டுமென்றே தூண்டி விடுகின்றனர். ஆழமாகிச் செல்லும் வறுமை, அதிகரித்துச் செல்லும் வேலையின்மை போன்ற அதிகாரத்துவத்தின் சொந்த முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகளால் சிருஸ் டிக்கப் பட்டவற்றிற்கு எதிராக, யூகோஸ்லாவியத் தொழிலா ளர்களால் நடாத்தப்படும் ஓர் ஐக்கியப்பட்ட போராட்டத்தை தடுப்பதே அவர்களது நோக்கமாகும்.

மார்க்சிஸ்டுகள், இன்றய முட்டுச் சந்திலிருந்து வெளியேறு வதற்கான ஒரு வழியைக் கண்டுகொள்வதற்கு, பால்கன் தொழிலாளர்க்கு உதவும் விதத்தில் ஒரு முன்னோக்கினை அபிவிருத்தி செய்யவேண்டும். யூகோஸ்லாவியப் பாட்டாளிக ளின் பலமான சர்வதேசப் பாரம்பரியங்களை புரட்சிகர வேலைத்திட்டத்தினதும், விஞ்ஞான பூர்வமான ஆய்வுக ளின் அடிப்படையிலுமே புத்துயிர்ப்படையச் செய்யமுடியும்.

பொஸ்னியாவில் நடத்தப்படுகின்ற பாரிய கொடூரங்களுக்கு பெல்கிரேட்டிலும், சாகிரேப்பிலும், சரஜேவோவிலும் உள்ள பரந்துபட்ட தொழிலாளர்களின் ஆதரவு உண்டென்று நம்புவதற்கு எந்த ஒரு காரணமும் கிடையாது. அவர்க ளது பழைய தலைமைகளது காட்டிக் கொடுப்பும், அதன் விளைவான குழப்பமும்– உலகின் ஏனைய பாகங்களில் உள்ள தொழிலாளர்களுடன் இணைந்த விதத்தில்– அவர் களை, எந்தவிதமான சுதந்திரமான அரசியல் பதிலீடும் இல்லாமல் விட்டுவைத்துள்ளது.

என்னதான் இருந்தபோதும், அப்படியானதோர் பதிலீடு இருந்துவருகிறது. அதுதான் சோசலிச சர்வதேசியவாதத் தின் வேலைத்திட்டம். இது மட்டும்தான் முதலாளித்து வத்தால் உருவாக்கப்பட்ட நெருக்கடிக்கு ஓர் முற்போக் கான தீர்வை வழங்க முடியும்.

## சர்வதேச முக்கியத்துவம்

பால்கனில் இந்த முன்னோக்குக்கான போராட்டம் பரந்து பட்ட சர்வதேச முக்கியத்துவம் உடையதாகும். பொஸ்னி யாவில் உள்ள இனரீதியான யுத்த அல்லோல கல்லோலங்கள் தனியே பால்கனுக்கே மட்டும் உரிய விசேட தோற்றப்பாடு அல்ல.

முன்னாள் சோவியத் யூனியனின் தென்பிராந்தியம், எதிர் தேசிய, இனக் குழுக்களுக்கிடையேயான மோதுதல்களினால் சிதறுண்டு போயுள்ளது. ஜோர்ஜியா உள்நாட்டு யுத்தத்தால் பிளவுண்டு போயுள்ளது. நாகோர்ணோ– கரபாக் (**Nagorno-Karabakh**) மீதான ஆறு வருடப் பழைமை வாய்ந்த போராட்டம் ஆசேரிஸ்களதும் (**Azeries**) ஆர்மேனியர்களதும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்டுள்ளதுடன் கண்ணுக் கெட்டியவரையில் எந்தவொரு முடிவுமின்றித் தொடர்கிறது.

**1948** துண்டாடலின் (Partition) போது பரந்துபட்ட இரத்தக் குளியலின் காட்சியிடமாகிய இந்தியத் துணைக்கண்டம் மீண்டும் ஒரு முறை இன, மத வாத மோதுதல்களினால் பயமுறுத்தப்படுகின்றதுடன், ஆபிரிக்காவில் இனக்குழு ஆத்திரமூட்டல்கள் பரந்துபட்ட கொலைகளை விளை வாக்கிக் கொண்டுள்ளது.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் கூட சோவனிசமும், இனவாதமும் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. கனடாவில், பிரெஞ்சு பேசும் ஆங்கிலம் பேசும் கனடியர்களிடையே பிரிவினை வாதம் ஊக்குவிக்கப்படுகின்றது. வெளிநாட்டோர் மீதான தாக்குதல்களும், வெளிநாட்டவர் வெறுப்பு வார்த்தை முழக்கங்களும் ஐரோப்பா பூராவும் பரவியுள்ளது. அத்தோடு ஐக்கிய அமெரிக்காவில் இரண்டு முதலாளித்து வக் கட்சிகளும் அனுசரிக்கும் அரசியல் என்றுமில்லாத அளவில் வெளிப்படையாக வம்சாவழியை அல்லது இனத்தை (Race) அடிப்படையாகக் கொண்டதாகும்.

**முதலாளித்துவத்தால் ஒடுக்கப்படுகின்ற எல்லோர்க்கும் தேசிய, இன, மத வித்தியாசங்களைக் கணக்கில் எடுக்கா மல் ஒரு அழைப்பு விடுக்கின்ற ஒரு பலம்மிக்க சோசலிச தொழிலாள இயக்கத்தின் வருகையின்மையின் மத்தியில், இந்தப் பூகோளத்தின் மேற்பரப்பிலுள்ள எந்த ஒரு மக்கள் கூட்டமும், தற்போது பொஸ்னியாவில் இடம்பெற்று வரும் வகையிலான படுகொலைகளுக்குள் மூழ்கடிக்கப்படும் அபாயத்தை முகங் கொடுக்காமல் இருக்கவில்லை.**

இவ்வாறு முதலாளித்துவத்தினாலும் அதன் ஏஜன்சிகளான முன்னாள் ஸ்ராலினிஸ்ட்டுக்களாலும், குட்டி முதலாளித்துவ வார்த்தை ஜாலக்காரர்களாலும் பரப்பப்படுகின்ற தேசியவாத விஷத்திற்கு எதிரான விட்டுக்கொடுப்பற்ற போராட்டம் நான்காம் அகிலத்தின் பணியாகின்றது. இன்று அவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் பயங்கரமான தாக்குதலுக்குப் பதிலீடாக, பரந்துபட்ட தொழிலாளர்களதும், ஒடுக்கப்பட் டோரதும் புரட்சிகரப் பொறுப்பினது, எல்லாவற்றிற்கும் மேலான ஆழமான தன்மையில் கொண்ட நம்பிக்கையுடன் நான்காம் அகிலம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பதாகையை உயர்த்தவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கடந்த பல வருடங்களின் பயங்கரமான நிகழ்வுகள், தாங்களாகவே ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிவைப் பிரதிபலித்தவர்களுக்கும், வந்துகொண்டிருக்கும் புரட்சிகரப் போராட்டங்களுக்கு தயார் செய்யும் நோக்குடன் கடினமான படிப்பினைகளை உள்ளீர்த்துக் கொள்ள முயற்சித்தவர்களுக்கும் இடையே ஒரு பாரிய இடைவெளியை உருவாக்கியுள்ளது.

சம்பவங்களின் தாக்கங்களின் கீழ், கடந்தகாலங்களில் ஸ்ராலினிச அதிகாரத்துவங்களின் மீது சார்ந்திருந்த குட்டி முதலாளித்துவ இடதுசாரிகளின் தட்டுகள், தங்களது அரசியல், மார்க்சிசத்தின் தத்துவார்த்தப் பாரம்பரியத்தினையோ அல்லது அரசியல் தோற்றப்பாடுகளை ஒரு வர்க்க நிலைப்பாட்டிலிருந்து அணுகுவதையோ அடிப்படையாகக் கொள்வதாகப் பாசாங்கு செய்வதைக் கூட கைவிட்டு விட்டனர். இந்தப் போக்கினது ஓர் விசேடமான கடைகெட்ட வெளிப்பாட்டை பிருத்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் (WRP) மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளில் காணக்கூடியதாக உள்ளது.

அதனது அரசியல் செயலாளர் கிளீவ் சுலோட்டரினால் **(Cliff Slaughter)** தலைமை தாங்கப்படும் தொழிலாளர் புரட்சிக் கட்சி கடந்த யூனில் பொஸ்னியாவுக்கு ஒரு தொழிலாளர் உதவியை **(Workers Aid for Bosnia)** ஆரம்பித்தது. கிட்டத்தட்ட ஒரு வருடமாக தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பிரதான அரசியல் வேலையை உள்ளடக்கி இருந்த இப் பிரச்சாரத்தின் வேஷதார நோக்கம், கிழக்கு பொஸ்னியாவின் ஒரு நகரமான ருஷ்லாவில் **(Tuzla)** வசிப்பவர்களுக்கு மருத்துவ, உணவு உதவியை எடுத்துச் செல்ல ஒழுங்கு படுத்துவதாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு ஆலாபரண அழைப்புகளுக்கும், பரோபகார பாசாங்கு முகமூடிக்கும் பின்னால், சுலோட்டர் தொழிலாளர் உதவியை முதலாளித்துவத் தேசிய வாதத்தை ஊக்குவிப்பதற்கும், பொஸ்னிய, குரோஷிய அரசாங்கங்களுடனும், ஏகாதிபத்திய சக்திகளுடனும் நேரடிக் கூட்டுடன் பால்கனில் தடையற்ற ஆத்திரமூட்டல்களில் ஈடுபடவும் பாவிக்கின்றார்.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பிரச்சாரத்தின் அடித்தளங்களாவன, ***(1) பொஸ்னிய முதலாளித்துவ ஆட்சியின் ஜனாதிபதியான Izetbegovic ஐ விமர்சிக்க சோசலிஸ்ட்டுகளுக்கு எந்த உரிமையும் இல்லையென வற்புறுத்தல். (2) யூகோஸ்லாவியா ஓர் அரை டசின் இன அடிப்படையிலான அரச துண்டுகளாக உடைந்துபோய்க் கொண்டிருப்பது, தேசிய சுயநிர்ணயத்தின் வரலாற்று யதார்த்தமாதலையும், பால்கன் மக்களின் விடுதலையையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சச்சரவு செய்தல் என்பனவாகும்.***

## பால்கன் பற்றிய பிரிட்டன் வாதம்

தொழிலாளர் புரட்சிக் கட்சியினது அரசியலுக்கு ஒரு புறநிலையான சமூக அடிப்படை இருக்கின்றது. இதை விளங்குவது, இந்த அரசியல் எழுந்து வருகின்ற தேசிய அரசியல் சூழ்நிலைமைகளை ஆய்வுசெய்வதை வேண்டி நிற்கின்றது.

மூன்று வருடங்களுக்கு மேலாக பிருத்தானிய பூர்சுவாசி தனது பால்கன் மூலோபாயத்தை கூர்மையாக விவாதித்து வருகின்றது. 1991ல் சுலோவினிய, குரோஷிய குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனத்தின் ஆரம்பத்துடனும், அவற்றிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான ஜேர்மனியின் விரைவுடனும் உருவான யூகோஸ்லாவியாவின் துண்டாடலை, பிருத்தானிய டோரி **(Tory)** அரசாங்கம் ஆரம்பத்தில் எதிர்த்தது.

பிருத்தானிய அலுவலகத்துள்ளான பேரளவிலான பகுதியினர், லண்டனின் முன்னாள் சேர்பியக் கூட்டாளி பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவது ஒரு மட்டத்திலான ஸ்திரத்தன்மையை வழங்குவதையும், பிருத்தானியச் செல்வாக்குக்கான மிகச் சிறந்த வாகனமாகவும் கண்டனர். இந்த கொள்கை, குரோஷியத் தேசியவாதத்திற்கு அதனது ஆதரவின் மூலம் சம்பந்தப்பட்ட ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் குறிக்கோளை ஈடுசெய்வதாகவும் கொண்டது.

எப்படியிருந்தபோதும், இப் பிராந்தியம் தொடர்ச்சியாக நொருங்கிக் கொண்டுபோக, பிருத்தானிய ஆளும் வர்க்கத்தின் மூலகங்கள் லண்டன் சேர்பியாவுடனான அதன் பிணைப்புகளை அறுத்துக்கொண்டு, இராணுவ ஆரம்பிப்புகளை முன்னெடுக்க வேண்டுமென அழைப்பு விடுத்தன.

பால்கன் மூலோபாயம் மீதான பிளவுகள், டோரி, தொழிற் கட்சி ஆகிய இரண்டினுள்ளும் அண்மைய வருடங்களில் பிளவுகளை உருவாக்கிய அதிகரித்த உறுதியான வித்தியாசங்களை வெளிப்படுத்தியது. ஆளும் வர்க்கத்தினுள் ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய யூனியனில் ஒருங்கிணைவது தொடர்பாகவும், விசேடமாக ஐரோப்பியக் கண்டத்தின் மீது ஜேர்மனியின் பொருளாதார மேலாண்மை பற்றியும் அதாவது இது "பிருத்தானிய நலன்களை" அபாயத்திற்குள்ளாக்கும் என்ற கெட்டியான பயம் நிலவிவருகின்றது. பூர்சுவாசிகளின் பகுதிகளினால், ஜேர்மன் மூலதனத்திற்கு அதனது பொருளாதார ரீதியான கீழ்ப்படுதலை ஈடுசெய்யும் ஒரு மார்க்கமாக பிருத்தானிய இராணுவ பலத்தினது உயர்ந்த சக்திமிக்க பாவனை கருதப்படுகிறது.

இந்த விவாதத்தின், வாதிடும் தரப்புக்கள் கட்சி எல்லைகளைக் கடந்து பரவியிருந்தன. சேர்பியாவுக்கு எதிரான இராணுவத் தலையீட்டுக்கு அழைப்பு விடுப்பதில் பிருத்தானிய "இரும்புப் பெண்" மார்க்கிரட் தாட்சர், தொழிற் கட்சி "இடதுகள்" உடன் இணைந்து கொண்டார்.

பொஸ்னியாவுக்கான தொழிலாளர் உதவி பிருத்தானிய பூர்சுவாசிகளினுள் உள்ள சேர்பிய எதிர்ப்பு முகாமினது உத்தியோகபூர்வ இடது அணியாக உதித்தது. இது பொஸ்னிய, குரோஷிய ஆட்சியாளர்களின் பகிரங்க ஆதரவையும், **T.U.C** இன் (பிருத்தானிய **A.F.L - C.I.O**) பொதுச் செயலாளர் John Monks இனதும், ஐக்கிய அமைப்பினதும் தலைவர் Alan Tuffin இனதும் பின்னணி ஆதரவைக் கொண்டுள்ளது.

சேர்பியா மீதான குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு வக்காலத்து வாங்கிய முதலாவது பிருத்தானிய அரசியல்வாதியான முன்னாள் தொழிற் கட்சித் தலைவர் Michael Foot, செப்டம்பரில் ஐரோப்பாவினுள் எடுத்துச்செல்லலாக தொழிலாளர் புரட்சிக் கட்சி முன்னெடுத்த ஒன்றுதிரளலின் எதிர்காலம் மிக்க பேச்சாளராக விளங்கினார்.

பிருத்தானிய ஆளும் வட்டாரங்களிலிருந்தும் சாகிரப், சராஜேவோ முதலாளித்துவ ஆட்சியாளர்களிடமிருந்தும் தொழிலாளர் உதவி வென்றுகொண்ட ஆர்வம் மிக்க பின்னணி ஆதரவு, இந்தப் பிரச்சாரத்தின் பின் மறைந்திருக்கும் அரசியலின் ஓர் அளவீடாகும். தொழிலாளர் புரட்சிக் கட்சியினது ருஷ்லாவுக்கான எடுத்துச் செல்லலானது, சோசலிசத்தை வெளிப்படையாக நிராகரிப்பதனூடாகவும், முதலாளித்துவத் தேசிய வாதத்தைப் பகிரங்கமாகத் தழுவிக் கொள்வதனூடாகவும் கருத்தியல் ரீதியாகத் தயார் செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## ஓர் 'அடிப்படை உண்மை'

இங்கு அடிப்படை உண்மை என்னவெனில், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பாரிய காட்டுமிராண்டித்தனமான யுத்தங்களுடன் தேசிய சோவனிச விஷத்தினுள் பால்கன் மூழ்கிவருகின்ற நிபந்தனையின் கீழ், இந்தப் பிராந்தியத்தில் தேசியவாதம் இயற்கையாகவே முற்போக்கான பாத்திரம் வகிக்கிறது என்ற நிலைப்பாட்டிற்கு தொழிலாளர் புரட்சிக் கட்சி வந்துள்ளது.

**1993**ஆலை **31**ல் **Workers Press** ஆசிரியத் தலையங்கத்தில், "இந்த யுத்தம் ஒரு அடிப்படை உண்மையினால் இயல்பாக்கம் செய்யப்படுகின்றது: சேர்பியா என்ற ஒடுக்கும் தேசம், பொஸ்னியா, ஹேர்செஜோவினா என்ற ஒடுக்கப்படும் தேசத்தின் மீது மேற்கொள்ளும் யுத்தமாகும். இதில் சோசலிஸ்ட்டுக்களது பணி பொஸ்னியாவின் சுயநிர்ணயத்துக்கான உரிமையைப் பாதுகாத்தல் அதாவது ஒடுக்குகின்ற தேசத்திற்கு எதிராக ஒடுக்கப்படும் தேசத்தின் உரிமையைப் பாதுகாத்தல் ஆகும். அதனால் அங்கும் தேசிய வாதம் இருப்பதால் இங்கும் தேசியவாதம் இருக்கிறது. மாபெரும் சேர்பியாவில் பாரிய தேசியவாதம் இருப்பதால், தனது சொந்த விடையங்களைத் நிர்ணயம்செய்து கொள்வதற்கான அதனது உரிமைக்கான பொஸ்னியாவின் போராட்டமும் இருந்து வருகிறது."

"ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்கள்" "சுயநிர்ணயம்" போன்ற பதங்களை அவற்றின் வரலாற்றுச் சூழ்நிலைக்கு (Historical Context) வெளியே எடுத்து, சுலோட்டர் பொஸ்னிய முதலாளித்துவ ஆட்சியாளர் Ijetbegovic இன் பின்னான தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அணிவகுப்பை நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்."

சுலோட்டர் இப் பதங்களை மார்க்சிச அகராதியில் இருந்தன்றி, ஒழுக்க சீலர்களான லிபரல்களது (ஜனநாயக முதலாளித்துவ வாதிகளின்) அரசியல் பிதற்றல்களில் இருந்தே இரவல் வாங்கிக் கொண்டார். அவை சேர்பியப் பிசாசுக்கு எதிரான பொதுவான வெறுப்பையும், நல்லொழுக்கம் மிக்க பொஸ்னியாவுக்கான ஆதரவையும் குறிப்பவையாகும்.

இந்த நூற்றாண்டின் முதல் பகுதியின் பால்கன் யுத்தங்களின் போது லியோன் ட்ரொட்ஸ்கி எழுதியதாவது; "அரசியலிலும் அதேபோல் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அறநெறியைக் காட்டிலும் உதவாக்கரையானது கிடையாது- முற்று முழுதான மலினமானதும் (Cheaper) அதிகம் பிரயோசனமற்றதும் வேறொன்றும் இல்லை" "எப்படி இருந்தபோதும் அதிக மக்களுக்கு இது ஈர்ப்பு மிக்கதாய்த் தோன்றுவது ஏனென்றால், சம்பவங்களின் புறநிலைப் பொறிமுறையினுள் பார்வையைச் செலுத்துவதிலிருந்து இது அவர்களைப் பாதுகாக்கின்றது". ( லியோன் ட்ரொட்ஸ்கி- பால்கன் யுத்தங்கள் **Pathfinder Press 1980 P.90**)

சுலோட்டருக்கும், தொழிலாளர் புரட்சிக் கட்சிக்கும் இந்த "சம்பவங்களின் புறநிலைப் பொறிமுறையை" ஆய்வு செய்ய எந்த அக்கறையும் கிடையாது. ஏனென்றால் அவர்கள் தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு சுதந்திரமான கொள்கையை விபரித்துக் கொண்டிருக்கவில்லை. முன்னாள் யூகோஸ்லாவியாவில் அவர்களது பாத்திரம் முதலாளித்துவ தேசியப் பிரிவினை வாதத்திற்கு ஒரு விதத்தில் உதவி செய்வதும், ஏகாதிபத்தியத் தலைமீட்டுக்கு துணைபோவதுமே ஆகும்.

## தேசிய சுயநிர்ணயம்

அதனது அரசியல் தலைமீட்டின் மிகவும் குறிப்பிடக் கூடிய எதிர்காலம் என்னவெனில், முன்னாள் யூகோஸ்லாவியாவுடன் பொதுவாகத் தேசியவாதப் பிரச்சனைகளுடன் தொடர்புபட்ட மார்க்சிச இயக்கத்தின் வரலாற்று நிலைப்பாடுகளுடன் அதன் அரசியலை ஒன்றுபடுத்தும் முயற்சியில் கூட தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தோல்வியாகும்.

சுலோட்டர், பொஸ்னியப் பிரச்சனையை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கப் பக்கங்களை ஒத்த பதங்களிலேயே விவாதிக்கிறார். இந்தப் பிரச்சனைகளின் மீதான மார்க்சிச விவாதத்தின் வளம் மிக்க வரலாறு, ஒரு மூடப்பட்ட புத்தகமாகும்.

அவர் பொஸ்னியாவில் "சுயநிர்ணய உரிமை" க்கான அவரது பிரார்த்தனையை லெனினதும், ட்ரொட்ஸ்கியினதும் எழுத்துக்களிலிருந்து தத்தம் செய்து கொடுக்கப்பட்ட கால வரையறையற்ற செல்லுபடியாகும் தன்மையானதாக ஏமாற்ற முயற்சிக்கின்றார். இந்தவிதத்தில் அவர், அவருக்கு முன்னர் இருந்து வந்த எண்ணுக் கணக்கற்ற முதலாளித்துவ தேசியவாதிகள், ஸ்ராலினிச அதிகாரத்துவங்கள், குட்டி முதலாளித்துவ வாயடிப்புக் காரர்களிலிருந்து எந்த விதத்திலும் வேறுபடவில்லை. மேலும் சுலோட்டர், லெனின் தனது கட்டுரைகளை வரைந்ததில் இருந்து **80** வருடங்களாக உலகப் பொருளாதாரம், அரசியல் என்பவற்றில் எந்தவித முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களும் இடம் பெற்றிருக்கவில்லை என்பதுபோல இச் சுலோகத்தைப் பிரயோகிக்கின்றார்.

லெனின் சுயநிர்ணயத்திற்கான உரிமையின் பாதுகாப்பை, சில காலவரையறை அற்ற கோட்பாடாக ஆதரிக்கவில்லை. ஆனால் ஒரு திட்டவட்டமான வரலாற்றுப் புறநிலையை மனதில் கொண்டேயாகும், அதாவது, தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களினதும் மீதான தேசியவாதச் செல்வாக்குகளுடன் போரிடுவதற்காகவும், காலங் கடந்த முதலாளித்துவ அபிவிருத்தியுடைய ஆட்சிகளுக்கே இயல்பான இன, மொழி தடைகளைத் தகர்த்தெறிவதற்குமே யாகும்.

இப் பிரச்சனை பற்றிய லெனினது வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகு முறையானது, அவர் உலகினை "தேசங்களின் சுயநிர்ணயத்திற்கு சார்பான மூன்றுவகை நாடுகள்" ஆக பிரித்ததில் சுட்டிக் காட்டப்படுகிறது.

முதலாவது வகை, "ஐக்கிய அமெரிக்காவையும், மேற்கு ஐரோப்பாவின் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளையும் உள்ளடக்கி இருக்கிறது. இந்தவகை நாடுகளில், முற்போக்கான தேசிய விடுதலை இயக்கங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே ஒரு முடிவுக்கு வந்துவிட்டன" என ஸ்தாபித்தார்.

"இரண்டாவது" லெனின் தொடர்கிறார், "கிழக்கு ஐரோப்பா: ஆஸ்திரியா, பால்கன், விசேடமாக ருஷ்யா இங்கு முதலாளித்துவ ஜனநாயகத் தேசிய இயக்கங்கள் விசேடமாக அபிவிருத்தி அடைகின்றதும், தேசியப் போராட்டங்கள் கூர்மை அடைகின்றதுமாகிய இருபதாம் நூற்றாண்டாகும். இந் நாடுகளில் பாட்டாளிகளின் பணிகளானது, தங்களது முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தங்களை பூர்த்தி செய்வதிலும் மற்றய நாடுகளின் சோசலிசப் புரட்சிக்கு உதவி வழங்குவதிலும் ஆகிய இரு வகைகளிலும் தேசங்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமையில் ஒப்புயர்வற்ற செயல் வீரனாகாமல் நடாத்தப்பட முடியாது".

"மூன்றாவதாக சீனா, பாரசீகம், துருக்கி போன்ற அரைக் காலனித்துவ நாடுகளும், ஒருங்கிணைக்கப்பட்ட சனத் தொகையாக **1000** மில்லியனைக் கொண்ட எல்லாக்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

காலனிகளும் ஆகும். இந்தவகை நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்கள் மிகவும் அருமையாகத் தொடங்கியுள்ளன அல்லது இன்னும் போவதற்கு நீண்ட பாதையைக் கொண்டுள்ளன. சோசலிஸ்ட்டுகள் எந்தவித நஷ்டஈடும் இன்றி காலனிகளின் நிபந்தனையற்றதும், உடனடியானதுமான விடுதலைக்கு அழைப்பு விடுப்பது மட்டுமன்றி– இந்த அழைப்பு அதனது அரசியல் கூற்றில் சுயநிர்ணய உரிமையின் அங்கீகாரத்தையன்றி வேறெதையும் குறிக்கவில்லை.– இந்த நாடுகளின் தேசிய விடுதலையின் முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களின் மிகவும் புரட்சிகரமான மூலகங்களுக்கு திட்டவட்டமான ஆதரவை வழங்க வேண்டியுள்ளதுடன், அவர்களை ஒடுக்குகின்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான அவர்களது எழுச்சிகளுக்கு– அல்லது இந்தச் சம்பவங்களில் ஒன்றான புரட்சிகர யுத்தத்திற்கு– உதவி வழங்கவேண்டும். (V.I. Lenin, Collected Works, Moscow: Progress Publishers 1970, Vol 22, pp.150-152)

லெனினால் வரையறுக்கப்பட்ட 2வது, 3வது வகைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நாடுகளில் நீண்ட தாக்கமுடைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ருஷ்யா, பால்கன் ஆகிய இரண்டும் பிரமாண்டமான புரட்சிக் கொந்தளிப்புகளுக்கூடாக கடந்து வந்துள்ளதுடன், இன்றய சகாப்தத்தில் இந்த நாடுகளில் இருக்கும் சமூக உறவுகளுடன், 1915 கால கட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய சமூக உறவுகளை ஒருபோதும் இயந்திர ரீதியில் ஒப்பிட முடியாது.

மனித குலத்தின் மிகப் பிரமாண்டமான பெரும்பான்மை, நேரடிக் காலனித்துவ ஆட்சியில் வாழ்ந்த ஒரு உலகத்தை லெனின் விபரித்தார். ஆசியாவினதும், ஆபிரிக்காவினதும் பரந்துபட்ட மக்கள் முதலாளித்துவத் தேசிய இயக்கங்களின் எழுச்சியூடும், காலனித்துவத்திலிருந்து விடுவித்துக் கொண்ட அனுபவங்களூடும் கடந்து வந்துள்ளன. இந்த வரலாற்று நிகழ்வுகள் உலகின் ஒடுக்கப்படும் மக்கள் தேசிய முதலாளித்துவத் தலைமையின் கீழ், புதிய தேசிய அரசுகளை ஸ்தாபித்துக் கொள்வதன் மூலம் விடுதலையைச் சாதிக்க முடியாதென்பதற்கு தீர்மானகரமான நிரூபணங்களை வழங்கியுள்ளன.

## தேசிய ஒருங்கிணைப்பு

ஆனால் அந்த நேரத்தில் கூட, லெனின் தேசியப் பிரிவினை வாதத்தில் ஒரு சாதனையாளன் அல்லர். அவர் தனது கருதுகோளை 1912-1913ன் பால்கன் யுத்தங்களின் நிழலின் கீழ் அபிவிருத்தி செய்ததுடன், அந்தப் பிராந்தியத்தின் தேசியப் பிரிவினைகளைத் தூண்டி விடுவதனூடு ஏகாதிபத்தியம் பிராந்தியத்தை கீழ்ப்படுத்திக் கொண்டதன் பல முக்கியத்துவம் வாய்ந்த பாடங்களையும் உள்ளீர்த்துக் கொண்டார்.

லெனின் பால்கனின் சுயநிர்ணயத்தை, ஏகாதிபத்தியத்தால் சிருஸ்டிக்கப்பட்ட பொருளாதாரப் பொருத்தமற்ற சிறு அரசு எல்லைகளை துடைத்துக் கட்டி பிராந்தியத்தின் மக்கள் தொகையை ஒரு ஐக்கியப்பட்ட குடியரசில் ஒருங்கிணைப்பதான பிரச்சனையாகப் பார்த்தார். “ இன்று முன்னெடுக்கப்படும் வகையிலான சோவனிசத்தை, லெனினது முன்னோக்கு நேரெதிராக எதிர்க்கிறது.

1915ல் எழுதப்பட்ட “சோசலிசமும் யுத்தமும்” என்ற பத்திரத்தில் லெனின் பின்வருமாறு விளக்குகின்றார், “இந்த உரிமையில் சாதனை செய்வதென்பது, குட்டி அரசுகளின் உருவாக்கத்தை உற்சாகப்படுத்துவதற்கு வெகுதூரத்திற்கு அப்பால், இதன் மறுதலையாக, சுதந்திரமானதும், பயமற்றதும் அதனால் பரந்தும் பெரிதும் பிரபஞ்சத் தன்மை வாய்ந்ததுமான பெரிய அரசுகளதும், அரசுகளது ஒன்றியத்தினதும் ஸ்தாபிதமாகும். இதுவே பரந்துபட்ட மக்களுக்கு அனுகூலம் மிக்கதாகவும், அதிக அளவில் பொருளாதார அபிவிருத்தியைப் பேணுவதற்கும் உகந்ததாகும்.” (V.I. Lenin, collected works Moscow: progress publishers, 1970, vol. 21, p.298).

இந்த நூற்றாண்டின் ஆரம்பப்பகுதிகளில் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் எழுந்த தேசிய இயக்கங்களின் முன்னால் முற்போக்கான வரலாற்றுப் பணிகளான– பூர்சுவாத் தலைமையின் கீழ் சாதிக்கமுடியாதவை– பல்வேறுபட்ட மொழிக் குழுக்களை ஐக்கியப்படுத்தல், ஏகாதிபத்தியத்தினால் பேணப்பட்ட நிலப்பிரபுத்துவ பிரிவினைகளைத் துடைத்துக் கட்டல் என்பவை எழுப்பப்பட்டன.

அந்தச் சகாப்தத்தின் தேசிய இயக்கங்களின் இந்த முற்போக்கான ஒருங்கிணைக்கும் தன்மையோடே லெனின் தேசங்களின் சுயநிர்ணய உரிமை சுலோகத்தை முன்வைத்தது, ஒரு ஆழமான பொருளாதார உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. “தேசங்களின் சுயநிர்ணயத்திற்கான உரிமை” யில் லெனின் முதலாளித்துவ அபிவிருத்தியில் அத்தகைய இயக்கங்களின் புறநிலை உந்துசக்தித் தாக்கங்களை விளங்கப்படுத்துகிறார்: “உலகம் பூராவும், நிலப்பிரபுத்துவத்தின் மீதான முதலாளித்துவத்தின் இறுதிவெற்றி தேசிய இயக்கங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பாவனைப் பொருட்களின் உற்பத்தியினது பூரண வெற்றிக்காக, பூர்சுவாசி உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்ற வேண்டியிருப்பதுடன் ஒரு ஒற்றை மொழி பேசுகின்ற மக்கள் தொகையைக் கொண்ட அரசியல் ரீதியில் ஐக்கியப்பட்ட பிராந்தியங்களையும் வேண்டியிருப்பதுடனும், இந்த மொழியை அபிவிருத்தி செய்வதற்கும் இதை இலக்கியத்தில் நிலைநாட்டுவதற்கும் உள்ள எல்லாத் தடைகளையும் அகற்றவும் வேண்டும்.”

அவர் மேலும் கூறுகிறார், “ஆகவே ஒவ்வொரு தேசிய இயக்கத்தினதும் போக்கு, இதன் கீழ் நவீன முதலாளித்துவத்தின் தேவைகளை சிறப்பாக திருப்தி செய்கின்ற ***தேசிய அரசுகளின்*** உருவாக்கத்தை நிறுவும் திசையிலாக உள்ளது.”(அதே புத்தகம் பக்கம் 396.) அவர் குறிப்பிடும் வகையிலான அரசு இனக் குழு பிரிவினையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பது தெளிவு.

## புதிய தேசிய வாதம்

அரசியலில் ஒரு காலகட்டத்தில் ஒரு திட்டவட்டமான சமூக வர்க்க உள்ளடக்கத்தைக் கொண்டிருந்த வார்த்தைகள், அடுத்த காலகட்டத்தில் முற்றிலும் வேறுபட்டதை பிரதிநிதித்துவப் படுத்துவதாக அடிக்கடி வருவதுண்டு. “சுயநிர்ணயத்துக்கான” சுலோகமும் இந்த வகையாகத்தான் உள்ளது.

உலக பொருளாதார, அரசியல் உறவுகளிலான பாரிய மாற்றங்கள், தேசிய இயக்கங்களினது பண்பிலும் தொடர்ச்சியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சுலோட்டரும், அவரது தொழிலாளர் புரட்சிக் கட்சியும் இந்த வரலாற்று மாற்றங்கள் எதுவும் இடம்பெறாததுபோல் கையாள்கின்றார்.

பால்கனிலோ அல்லது அந்தவிதமாக முன்னாள் சோவியத் யூனியனிலோ அல்லது இந்தியத் துணைக் கண்டத்திலோ இன சோவனிசத்தின் மீளெழுச்சி, ஏகாதிபத்தியச் செல்வாக்குக்கும் நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்துக்கும் ஒரு முடிவு கட்டுவதற்கான முயற்சியின் வெளிப்பாடு என தீர்க்கமாக



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

யாராவது விவாதிக்க முடியுமா? இன்று பொஸ்னியா அல்லது காசகஸ்தான் அல்லது காஷ்மீர் பூர்சுவாசி "உள்நாட்டுச் சந்தையை கைப்பற்றுவதற்கும்" "பாவனைப் பொருட்களின் உற்பத்தியின் வெற்றிக்கான" நிபந்தனைகளை உருவாக்குவதற்கும், அதன் மூலம் வர்க்கப் போராட்டத்தின் பூரண அபிவிருத்திக்கும் முயற்சிப்பதாக எவரேனும் கூற முடியுமா?

இதன் எதிர்மாறாக இந்த புதிய இன அடிப்படையிலான இயக்கங்கள் இருந்துவரும் அரசுகளை சிதறுண்டு போகச் செய்ய முயற்சிக்கின்றன. ஒரு உள்நாட்டுச் சந்தையை உருவாக்க முன்மொழிவதற்குப் பதிலாக அவை ஏகாதிபத்தியத்துடனும், பூகோள ரீதியாக இயங்கும் மூலதனத்துடனும் மிகவும் நேரடியான பொருளாதாரத் தொடுவைகளை ஏற்படுத்த விருப்பம் தெரிவிக்கின்றன. "சுயநிர்ணயத்துக்கான உரிமை" சிறு பகுதியினராகிய உள்நாட்டு பூர்சுவாசியினரின் நலன்களை முன்னெடுப்பதற்கான சாதனமாகவே கையாளப்டுகிறது.

முன்னாள் காலனித்துவ நாடுகளில் இந்தச் சோவனிசப் போக்குகளில் பலவும் பழைய முதலாளித்துவ தேசிய இயக்கக் கப்பல் உடைவுகளில் இருந்து வரும் மிச்ச சொச்ச போக்குகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன. காலனித்துவ ஒழிப்பின் ஆரம்ப காலங்களின் போது முன்னெடுத்த தேசிய அபிவிருத்தி மூலோபாயங்களைக் கைவிட்டு, பகை பூர்சுவாக் குழுக்கள் எல்லைக்குட்பட்ட வளங்களிலான வினையோகத்தில் ஒரு மேலதிக அனுகூலம் வேண்டி தேசியப் பிரிவினைவாத அணிதிரள்வினூடு முயற்சிக்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னாள் சோவியத் யூனியனிலும் விசேடமாக, நேரடி ஏகாதிபத்திய ஆதிக்கம், முதலாளித்துவ சொத்துறவுகள் ஆகிய இரண்டையும் புனர் நிர்மாணம் செய்ய முயற்சிக்கும் பின்னடைவுப் போக்கின் ஒரு பாகமாக இன்று தேசியவாதம் எழுகின்றது.

யூகோஸ்லாவியாவில், குரோஷியாவிலும் சுலோவினியாவிலும்– நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகரித்த செல்வச் செழிப்பை அனுபவித்த குடியரசுகள்– தலைநீட்டி வந்த பூர்சுவாசிகள் தாங்களாகவே வறிய பிராந்தியங்களிலிருந்து தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டதுடன் முதலாளித்துவ உலகச் சந்தையுடன் தங்களது சொந்த உறவுகளை ஏற்படுத்தினர்.

இதை ஒத்த வடிவிலான பிரிவினைவாதம் இத்தாலியிலும் கூட எழுகின்றது. இங்கு லொம்பாட் லீக் **(Lombard League)** செல்வந்த வடக்கை மிகப் பின்தங்கியதும், வறுமைக்குட் பட்டதுமான தெற்கிலிருந்து பிரிப்பதற்கு போராடும் இயக் மாக எழுந்துள்ளது.

சுயநிர்ணயம்,– எவ்வளவு தூரம் இச் சுலோகம் லெனினால் கருதப்பட்ட விதத்தில் ஜனநாயக முற்போக்கு உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும் வரை– எந்த வடிவிலான தேசிய அடக்குமுறைகளுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைப்பதைக் கருதுகின்றது. இன்றைய காலகட்டத்தில் இந்த மூல நோக்கம் யூகோஸ்லாவியாவையோ அல்லது எந்த ஒரு நாட்டையோ இன அடிப்படையிலான ஒரு தொகை அரசுகளாகப் பிரிப்பதனூடு வாதிக்க முடியாததாகும்.

சம்பவங்கள், அத்தகைய அரசுகள் ஏகாதிபத்திய சக்திகளின் செல்வாக்குப் பிராந்தியங்களாகவும், அரைக் காலனிகளாகவும் அன்றி வேறு விதமாக இருக்கமுடியாதென்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், அவற்றின் உருவாக்கத்தின் முன்பிருந்த வடிவிலான சமூகப் பொருளாதார அடக்குமுறைகளை செறிவாக்குவதுடன் மீளுற்பத்தி செய்கின்றன என்பதை நிகழ்வுகள் பிரத்தியட்சமாக்கியுள்ளன.

அவர்களது அரசியல் வேலையின் ஒவ்வோர் கட்டத்திலும் மார்க்சிஸ்ட்டுகள் தாங்கள் முன்னெடுக்கும் கொள்கையின் தாக்கங்களை இந்த அல்லது அந்த உடனடி நிகழ்வுகளுக்குத் தொடர்பாக மட்டுமன்றி சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் அபிவிருத்தியடையும் போராட்டச் சூழ்நிலமைகளினுள்ளும் கருதுவதற்குக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர்.

சுலோட்டரும் தொழிலாளர் புரட்சிக் கட்சியும், ஒருபோதும் தங்களது "சுயநிர்ணய சுலோகத்தின் பூகோள ரீதியான தாக்கங்கள் பற்றி தங்களளவில் தொந்தரவுக்குட்பட்டதில்லை. அவர்கள் ஒருபோதும் தெரிவு செய்யப்பட்ட, வெளிப்படையான சேர்பிய அக்கிரமங்கள் மீதான வெறுப்புக்கும் பொஸ்னியாவினுள்ளான நிலைநாட்டப்பட்ட உண்மைக்கான அடிபணிவுக்கும் அப்பால் எழுந்ததில்லை. அவர்கள் தாங்கள் பால்கனில் எடுக்கும் நிலைப்பாடுகளுக்கும் முழுமையான ஒரு தொகை ஏனைய பிரச்சனைகளுக்கும் இடையே எந்தவிதமான தொடர்பும் இருப்பதாக அவர்கள் கருதியதே கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மார்க்சிச இயக்ககம் 1947ல் இன, மத அடிப்படையிலான இந்திய பாக்கிஸ்த்தான் துண்டாடலை எதிர்த்ததுடன், சோவனிச வாய்வீச்சுக்காரர்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப் படுத்தப் போராடியது. மீண்டும் ஒருமுறை இந்தியா துண்டாடப்படும் அபாயத்தை முகங்கொடுக்கின்றது. முன்னைய தகவமைவுகள் வலிமையற்றதாக உள்ளதா? தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பொஸ்னிய நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் காஷ்மீர், பஞ்சாப் அல்லது வடகிழக்குப் பிரிவினையை வரலாற்று ரீதியாக முற்போக்கானதாக ஏற்றுக் கொள்ள வேண்டாமா?

நாகோர்னே–கரபாக்குக்கான போராட்டத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சி ஆசேரிசினதா அல்லது ஆர்மேனியரது பக்கமா நிற்கிறது? ஆபிரிக்காவிலான பிராந்திய இன முரண்பாடுகளது நிலைமை பற்றி எப்படி? அல்லது அதேவிதத்தில் ஏகாதிபத்திய நாடுகளில் கியூபெக்கியர்களின் கூட்டு, லொம்பாட் லீக், ஸ்கொட்லான்டிய தேசியக் கட்சி, அல்லது அமெரிக்காவில் கறுப்புத் தேசிய வாதிகள் போன்ற முதலாளித்துவக் கட்சிகளால் முன்னெடுக்கப்படுகின்ற சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை பற்றி எப்படி?

சோசலிச தொழிலாளர் கட்சியின் உள்ளான (SWP) குட்டி முதலாளித்துவ எதிர்ப்புக்கு எதிரான தனது போராட்டத்தில், "திட்டவட்டமான" அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக கடைப்பிடித்த நிலைப்பாடுகளின் தாக்கங்களினூடு சிந்தித்துப்பார்க்க மறுப்பது அத்தகைய வர்க்கப் போக்குகளின் ஒரு அடிப்படை குணாம்சம் என ட்ரொட்ஸ்கி விபரித்தார்:

"எதிர்ப்பினது தலைவர்கள்..... போலந்திலான எங்களது பணிகளுடன் எமது ஸ்பானிய அனுபவத்தைக் கொண்டும்... பின்லாந்திலான எமது பணிகளுடன் போலந்திலான எமது நிலைப்பாட்டிலிருந்தும் முரண்படுகின்றனர். வரலாறு ஒரு தொகை விதிவிலக்கான கணங்களூடு மாற்றப்பட்டு வருகிறது: அரசியல் ஒரு தொகை அங்கீகரிப்புகளூடு மாற்றப்பட்டு வருகிறது. இங்கே நாங்கள், வார்த்தைகளின் முழு அர்த்தத்தில், மார்க்சிசத்தின் ஒருங்கிணைவற்ற தன்மையையும், அதை ஸ்தாபித்த கூறுகளினூடு அரசியலின் ஒருங்கிணைவற்ற தன்மையையும் கொண்டுள்ளோம்." (Leon Trotsky, In



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Defense of Marxism London: New Park Publication, 1971, p.114.)

சுயநிர்ணயக் கோரிக்கையை, தேசியப் பிரிவினையூடும், முதலாளித்துவ ஆட்சியூடும் முன்னெடுப்பவர்கள் அச் சுலோகத்தின் பூகோள ரீதியான விளைவுகளுக்கும் பொறுப் பாளிகளாவர். இந்த “உரிமை” ஏகாதிபத்திய சக்திகளால் சாதனை செய்யப்படுவதோடு, பால்கனின் ஏனைய பகுதிக ளுக்கும் உலகம் பூராவும் ஏகாதிபத்திய இராணுவ சக்திகளை அணிவகுக்க வைப்பார்கள்.

இந்த எல்லா முரண்பாடுகளும், ஏகாதிபத்தியத்தாலும் அதனது ஏஜன்சிகளாலும் சிருஸ்ட்டிக்கப்பட்ட தேசியப் பிரிவினைப் பிரச்சனைகளுக்கு, எல்லாத் தேசிய இனங் களையும் சேர்ந்த தொழிலாளர்களை சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தில் ஐக்கியப் படுத்துவதற்கான போராட்டத் துக்கு வெளியே எந்த ஒரு தீர்வும் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

## சுலோட்டரும் ஹோரரேயும்

சுலோட்டர் பொஸ்னியன் தொடக்கிவைப்பில் ஒரு முக்கிய பாத்திரம் கேம்பிரிஜ் பல்கலைக் கழக மாணவனும் குரோஷியன் பின்னணியைக் கொண்டவருமான அட்டிலா ஹோரே (Attila Hoare) யினால் வகிக்கப்பட்டுள்ளது. அவரின் தாயான பிரான்கா மகாஸ் (Branca Magas) ஸ்ராலினிசத்தினதும் குரோஷியன் தேசிய வாதத்தினதும் அரசியல் பரிந்துரையாளரான *“The Destruction of Yogoslavia”* என்ற நூலின் ஆசானாவார். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பிரச்சார இயக்கத்தில் இவரும் ஒரு பிரபல பாத்திரம் வகித்துள்ளார்.

இந்த தொழிலாளர் உதவியை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஹோரே தொழிலாளர் புரட்சிக் கட்சியுடனோ அல்லது தொழிலாளர் இயக்கத்துடனோ எந்த விதமான தொடர் பையும் கொண்டிருக்கவில்லை. அந்தக்காலத்தில் இருந்து அவர் பால்கன் தொடர்பான கட்சியின் சர்ச்சைக்குரிய கட்டுரைகளில் பெரும் பகுதியை எழுதியுள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் நாம் எழுதிய ஒரு கட்டுரையில் சுலோட்டரை நாம் வேசியின் தலைமை கையாள் என வருணித்திருந்தோம். சிடுமூஞ்சி அல்லது ஒழுக்கம் கெட்ட மத்தியதர வர்க்கத் தீவிரவாதிகளிடையே சாத்தியமான கூட்டாளிகளையும் சகாக்களையும் மோப்பம் பிடிக்கும் தனது வல்லமையையிட்டு பெருமைப்படுபவர். ஹோரேயிடம் அவர் அத்தகையதொரு வேசிக் கையாள் மனிதனையே கண்டுள்ளார். இங்கு அவர் ஒரு குரோ ஷியன் தேசியவாதியின் மாகாணப் பின்னடைவினை கேம்பிரிஜ் பல்கலைக்கழக உயர்தர வர்க்க கர்வத்துடன் கலப்பதனை நிர்வகிக்கின்றார்.

அத்தகையதொரு பேச்சாளரைத் தெரிவு செய்தமை தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பிரச்சார இயக்கத்தின் வர்க்க தன்மையைப் பற்றி தொகுதிக்கணக்கில் பேசுகிறது. சுலோட்டர் தொழிலாள வர்க்கத்தின் முன்நிலையில் தமது கொள்கையை நியாயப்படுத்துவதும் அதனை மார்க்சி சத்தின் அடிப்படையில் பேணவும் நினைத்திருப்பின் அவர் இந்த வேலையைச் செய்ய ஏ. ஹோரேயை தெரிவு செய்திருக்க மாட்டார். தொழிலாளர் புரட்சிக் கட்சி ஏனைய வர்க்க சக்திகளுக்கு பேசுகிறது என்பது தெளிவு.

கிளிவ் சுலோட்டரின் உற்சாகமளிப்புடன் ஹோரே தெளிவு படுத்தும் அரசியல் நிலைப்பாடுகள் பக்கம் நாம் இப்போது திரும்புவோம்.

ஆகஸ்ட் 7 ம் திகதிய வேர்க்கஸ் பிரசில் (workers prss) ஹோரே சுலோட்டர் பிரித்தானிய சோசலிசத் தொழிலாளர் கட்சியை (SWP) பொஸ்னிய அரசாங்கத்தை ஆதரிக்க மறுத்தமைக்காகத் தாக்கியது. இதில் முன்னையது “முழு பொஸ்னியன் மக்களினாலும் ஒரு பலதேசிய அரசின் தலைமையில் ஒரு பல்தேசிய அரசாங்கத்தினைக் கொண்டு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டது. அது சேர்பியன், குரோஷியர்களுக்கு எதிரான தேசிய ஒடுக்குமுறையில் ஈடுபட்டிருக்கவில்லை, அதன் அயலவர்களிடமிருந்து பிராந் தியக் கோரிக்கையையும் விடுவிக்கவில்லை” என விபரிக்கப் பட்டது.

## இசட்பெகோவிக்கின் ஆட்சி

இது முழுப் பொய்யாகும். இசட்பெகோவிக் ஒரு இன வாதத் தலைவர். இவர் இஸ்லாமிய அரசின் வக்கீலாக தனது தொழிலை ஆரம்பித்தார். டிட்டோ ஆட்சியைக் கப்பற்றியதன் சிறிது காலத்தின் பின்னர் இவர் 1946ல் இனவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டமைக்காக சிறையில் இடப்பட்டார். 1983ல் இவர் திரும்பவும் கைது செய்யப் பட்டு, இஸ்லாமிய அடிப்படை வாதத்தினையும் கம்யூனிச எதிர்ப்பினையும் வளர்த்தமைக்காகவும் பொஸ்னியா—ஹேர்ஸ் கோளாலில் இருந்து சகல சேர்பியர்களையும் குரோஷியர் களையும் வெளியேற்ற வேண்டுமென வாதிட்டமைக்காவும் விசாரணைக்கு நிறுத்தப்பட்டார்.

1970ல் இரகசியமாக வினையோகிக்கப் பட்டதும் 1990ல் பகிரங்கமாக பிரசுரிக்கப் பட்டதுமான ஒரு கட்டுரையில் இசட்பெகோவிக் “இஸ்லாமிய மதத்துக்கும் இஸ்லாமியர் அல்லாத சமூக, அரசியல் அமைப்புக்களுக்கும் இடையே சமாதானமோ அல்லது சகவாழ்வோ நிலவ முடியாது”எனப் பிரகடனம் செய்தார்.

அவருடைய “பல்லின அரசுக்கு” இட்டுச் செல்லும் விதத்தில் “பொஸ்னிய மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டது” என்ற கோரிக்கை அவ்வாறே மோசடி யாகும். இசட்பெகோவிக் 1990ல் ஒரு கூட்டரசாங்கத்தின் பாகமாக தெரிவு செய்யப்பட்டார். இது மூன்று இனவாத அடிப்படையிலான கட்சிகளை—அவரின் ஜனநாயக நடவடி க்கைக்கான முஸ்லீம் கட்சி, ரடோவன் கரடிசிக்கின் (Rodovan Karadzic) சேர்பியன் ஜனநாயக் கட்சி, குரோஷியன் ஜனநாயக யூனியன்— கொண்டிருந்தது.

யூகோஸ்லாவியா சிதறுண்டுபோய், பொஸ்னியா சுதந்திரப் பிரகடனம் செய்வதில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இந்தக் கூட்டரசாங்கமும் கூடவே சிதறுண்டு போயிற்று. சனத் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினை கொண்டிருந்த சேர்பியர்கள் இதனை எதிர்த்தனர். பிரிவினை மீதான ஒரு கருத்துக்கணிப்பை அவர்கள் பகிஷ்கரித்தனர். சுதந்திரப் பிரகடனம் செய்யப்படின் உள்ளூர் சேர்பியத் தலைவர்கள் தாம் பொஸ்னிய ஆட்சியாளர்களில் இருந்து பிரிந்து சேர்பியாவுடன் ஒரு கூட்டுக்குச் செல்வோம் என்பதைத் தெளிவுபடுத்தினர். பொஸ்னிய குரோஷியர்கள், சுதந்திரத்தினை சேர்பியாவில் இருந்து பிரிந்து சக்ரேப்பை நோக்கிச் செல்வதற்கான ஒரு வழிமுறையை மட்டுமே ஆதரித்தனர்.

மிகவும் அடிப்படையான விதத்தில் ஹோரே சுலோட்டர் ஒரு விடயத்தை— பொஸ்னிய அரசின் வர்க்கத் தன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

மையை– மறந்து போய் விடுகிறார்கள். ஆட்சியாளர்களின் "ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட" பல் தேசியத் தன்மைபற்றிய சகல பேச்சுக்களும் அவை திரும்பத்திரும்ப அவற்றை ஏகாதிபத்தியத்தின் உபயோகமான கையாட்களாக்கும் விதத்தில் முதலாளித்துவ ஜனநாயகத் தப்பெண்ணங்களுடன் ஊறச் செய்துள்ளதை மட்டுமே பிரத்தியட்சமாக்குகிறது.

இசட்பெக்கோவிக் "முழு மக்களாலும்" தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற லிபரல் மூடக் கதையளப்புக்களுக்கும் இடையேயும் அவரது அரசாங்கம் தலைநீட்டிவரும் முதலாளித்துவத் சொந்தக்காரர் தட்டினதும், கொள்ளைக்காரர்களதும், அரச அலுவலர்களதும் திட்டவட்டமான வர்க்க நலன்களுக்கு சேவை செய்கிறது. இவர் தனிச் சொத்துடமையும், கூலி உழைப்புச் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தினைக் கட்டியெளுப்புவதற்குத் தேசியப் பிரிவினைவாதமே சிறந்த வழியாகக் காண்கிறார்.

இந்த ஆளும் தட்டினரின் இலக்குகளை பொஸ்னியத் தொழிலாளர்கள் ஏதேனும் ஒரு அடிப்படையான விதத்தில் எதிர்ப்பின், ஆட்சியின் அஹிம்சைப் பூச்சுக்கள் வேகமாகக் களன்றோடும்.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் வழிதடுமாறிய சேர்பிய விரோதச் சாய்வுகளுக்கு இடையேயும் அது குரோஷியன், சேர்பியன் சனத்தொகைக்கெதிராக "இனக்குழு சுத்திகரிப்பில்" ஈடுபட்ட பொஸ்னிய அரசாங்கத் துருப்புகளின் கணக்குகளை வெளியிடும் வண்ணம் கடமைப்பட்டுள்ளது. இருப்பினும் தனது 1993 செப்டம்பர் 12 வெளியீட்டில் "வாஷிங்டன் போஸ்ட்" அறிவித்ததாவது: "பொஸ்னிய இராணுவம் போரினிக்கா போன்ற இனக்குழுக்கள் கலந்த பல நகரங்களில் இருந்து குரோஷியன் சனத்தொகையை பொஸ்னியக் கைத்தொழில் மையங்களுக்குக் குறுக்காக முறைப்படி வெளியே தள்ளியது"

சமீபமாதங்களில் பொஸ்னிய முஸ்லீம் இராணுவம் குறிப்பிடத்தக்க விதத்தில் அதன் பலத்தினை அதிகரித்ததோடு இப்பிரச்சாரத்தினையும் உக்கிரமாக்கியது. மேலும் இந்த இராணுவப்பலத்தின் முக்கிய மூலோபாயமானது ஒரு நேட்டோத் தலையீட்டுக்கான சாட்டாக இருக்கக்கூடிய ஒரு வகையிலான தாக்குதல்களுக்கு சேர்பியப் படைகளை தூண்டுவதாக விளங்கிற்று.

ஹோரே–சுலோட்டரின் பொஸ்னியன் ஆட்சியாளர்களின் உயர்ந்த இலட்சியம் கொண்ட தமது சித்திரத்தினை ஒரு திட்டவட்டமான அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கின்றனர். இதற்கு விமர்சனமற்ற ஆதரவு வழங்கப்பட வேண்டுமென அவர்கள் கோருகின்றார்கள்.

## முதலாளித்துவ அரசாங்கங்களைக் கண்டனம் செய்ய உரிமை இல்லை

1993 ஆகஸ்ட் 28ம் திகதிய வேகர்ஸ் பிரசில் இசட்பெக்கோவின் ஆட்சிக்கு எதிரான எந்த ஒரு எதிர்புக்கும் அவர்கள் வசைமாரி பொழிகின்றனர். "பொஸ்னிய சுயநிர்ணயத்துக்கான ஆதரவு சரியாகச் சொன்னால் பொஸ்னியன் சமுதாயத்தின் உயிர்வாழ்க்கைக்கும் பொஸ்னியன் தொழிலாள வர்க்கத்தின் உயிர்வாழ்க்கைக்குமான ஆதரவாகும். பொஸ்னிய அரசாங்கம் இந்தப் போராட்டத்தினை முன்னெடுக்கிறது. அத்தோடு சோசலிஸ்டுக்கள் ஒரு பதிலீட்டு வெகுஜன விடுதலை இயக்கத்தினை கட்டி எழுப்பும் வரை இன்றுள்ளதைக் கண்டனம் செய்ய அவர்களுக்கு உரிமை கிடையாது."

இசட்பெக்கோவின் ஆட்சியைப்பற்றிய எந்தவொரு விமர்சனத்துக்கும் எதிரான இந்தத் தடையுத்தரவு, ஒரு முதலாளித்துவ அரசாங்கம் "ஒரு போராட்டத்தினை முன்னெடுக்கும்" வரை சோசலிஸ்டுகள் அதனைக் கண்டனம் செய்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர் என்பது மார்க்சிசத்தின் சர்சைக்குள்ளாக்க முடியாத உண்மைபோல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தகைய ஒரு அரசாக்கத்தின் மேல் தாக்குதல் தொடுப்பதனைத் தவிர்ப்பதன் மூலம் அவர்கள் எங்கனம் ஒரு "பதில் வெகுஜன விடுதலை இயக்கத்தை" சிருஷ்டிக்க முடியும் என்பது ஒரு போதும் விளக்கப்படவில்லை. ஹோரே–சுலோட்டருக்கு அத்தகைய ஒரு பதிலீட்டை கட்டியெளுப்புவதில் அக்கறை கிடையாதென்பது தெளிவு.

ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின்போது குடியரசு அரசாங்கம் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயக வாதிகள், அராஜக வாதிகள் ஆதரவுடன் பிராங்கோவின் பாசிசப் படைகளுக்கு எதிராக "ஒரு போராட்டத்தினை முன்னெடுத்த" வேளையில் உண்மையில் ட்ரொட்ஸ்கி அத்தகைய தடைக்கு கீழ்ப்படியவில்லை. பாசிசத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளைக் காப்பது முதலாளித்துவ அரசினைத் தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பதை வலியுறுத்தி ட்ரொட்ஸ்கிச இயக்கம் குடியரசு அரசாங்கத்துக்கு எந்தவிதமான அரசியல் ஆதரவு வழங்குவதையும் எதிர்த்தது.

அத்தகைய சகல அரசியல் ஒப்புவமைகளும் அவற்றின் வரையறைகளைக் கொண்டுள்ளன என்பது உண்மையாயினும் இது சுலோட்டர்–ஹோரேக்கு எதிராகப் பலம்வாய்ந்த முறையில் பேசுகிறது. ஸ்பெயினில் ஒரு உள்நாட்டு யுத்தம் பாசிச அச்சுறுத்தலுக்கு எதிரான ஒரு பாட்டாளி வர்க்க எழுச்சியின் அடிப்படையில் வெடித்தது. இந்த எழுச்சி பின்னர் முதலாளி வர்க்கத்தினாலும் அதன் கையாட்களாலும் சிரச்சேதம் செய்யப்பட்டது. பொஸ்னியாவில் தொழிலாள வர்க்கம் அதன் தலைமையால் முன்னர் காட்டிக் கொடுக்கப்பட்டமை இனக்குழு சோவினிஸ்டுகளின் போட்டிக் குழுக்கள் தொழிலாளர்களை ஒரு உள்நாட்டு யுத்தத்தினுள் இழுப்பதை அனுமதித்தது.

ஸ்பானியாவில் பாசிசத்துக்கு எதிரான ஸ்பானியத் தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக, சமூக வெற்றிகளைக் காக்கும் போராட்டமே குடியரசு அரசாங்கத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்க முடியும். ஆனால் பொஸ்னிய அரசாங்கம் தலைமை தாங்கிக் கொண்டுள்ள "போராட்டத்தின்" தன்மை என்ன?

ஹோரே–சுலோட்டர் அது "பொஸ்னியன் சமுதாயத்தின் உயிர்வாழ்வு" க்காக போராடுகிறது என வாதிக்கின்றார்கள். இந்த உரத்த தொனியும் முற்றிலும் வர்க்க பேதமற்ற வார்த்தையும் ஏகாதிபத்தியத்தின் உதவியோடு ஒரு பிராந்திய, இனவாத மாடத்தினைக் கூறுபோடப் போராடும் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தினைக் காப்பாற்ற நடைமுறையில் ஆடேற்றுகிறது.

தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் பொஸ்னியாவில் உள்ள ஆட்சியாளர்களுக்கும் சேர்பிய, குரோஷியாவில் உள்ள அதன் சகாக்களுக்கும் இடையே எதுவிதமான வேலைத் திட்ட வேறுபாடுகளையும் சுட்டிக்காட்ட முடியாது. எதுவுமே கிடையாது. உதவாக்கரையான தார்மீகவாதத்தின் அடிப்படையில் அது சேர்பிய சோவினிசத்துக்கு எதிராக

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

முஸ்லீம் சோவினிசத்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானம் செய்துள்ளது.

## 'அரசியல் கைதி முகாம் காவலர்களும் கைதிகளும்'

யூகோஸ்லாவியத் தொழிலாளர்களை ஐக்கியப் படுத்தும் அழைப்புக்கு எதிராக ஹோரே-சுலோட்டர் கூறியதாவது: "பொஸ்னியாவின் வர்க்கப் போராட்டத்தைமிட்டுக் கவலைப் பட ஒரு தொழிலாள வர்க்க இடது கிடையாது" இந்த நிலமைகளின் கீழ் முஸ்லீம், சேர்பிய, குரோஷிய தொழிலாளர்களுக்கு இடையேயான ஐக்கியம் பற்றிப் பேச்சுக்கள் "அரசியல் கைதி முகாம் காவலாளிகளுக்கும் கைதிகட்கும் இடையேயான ஐக்கியத்துக்கு" வக்காலத்து வாங்குவதாகும் என ஹோரே-சுலோட்டர் பிரகடனம் செய்தனர்.

இது குட்டி முதலாளித்துவ சோவினிசத்தின் அரசியலாகும். அங்கு தொழிலாள வர்க்கம் இல்லை, வர்க்கப் போராட்டம் இல்லை, ஆதலால் சோசலிச அரசுக்கு இடம் கிடையாது. இனவாதத்துக்கும் யுத்தத்திற்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் எந்த ஒரு சாத்தியத்தினையும் அழித்து எழுதிவிட்டு, தொழிலாளர் புரட்சிக் கட்சியின் கோட்பாட்டாளர்கள் யுத்தமிடும் முதலாளித்துவ கன்னைகளிடையே தேர்ந்து எடுப்பதைத் தவிர எஞ்சியில்லை எனப் பிரகடனம் செய்கின்றனர்.

பொஸ்னிய ஆட்சியாளர்கள் தொடர்பாக "ஒரு நிலைப்பாட்டை எடுக்க" மறுப்போர் "அதற்குப் பதிலாக கருத்தற்ற தொழிலாளர் வர்க்கத் தீர்வு பற்றிப் பேசுவதாக" அவர்கள் கண்டனம் செய்துள்ளனர். ஒரு ஸ்துலமான மூலோபாயம்- "நிஜ" போராட்டம்- இனக்குழு அடிப்படையிலான இராணுவத்தினையும் ஏகாதிபத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களையும் ஆதரிப்பதை உள்ளடக்கியதாக இருக்கும் போது ஒருவர் தொழிலாள வர்க்கத்தினை அடிப்படையாகக் கொள்வது "கருத்தற்றதாக" உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக சேர்பியத் தொழிலாளர்கள் ஒரு கூட்டம் அரசியல் கைதி முகாம் காவலர்கள் அன்றி வேறொன்றும் இல்லாதிருப்பின் நேட்டோ, பொஸ்னிய சேர்பியர்கள் மீது அல்லது பெல்கிரேட் மீது குண்டுவீச்சு நடாத்துமிடத்து அதை யார் எதிர்க்கமுடியும்? ஹோரே-சுலோட்டர் திரும்பத் திரும்ப இந்த அம்சத்திற்குத் திரும்புகின்றனர். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தவறான பேரினை கொண்ட "இன்டர்நாஷனல்" சஞ்சிகையின் 1993 ஆகஸ்ட் வெளியீட்டில் "மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு இடத்தின் அடிபணிவும் பால்கனில் சேர்பியத் தேசியவாதமும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் அவர்கள் பால்கன் மக்களை ஐக்கியப்படுத்தும் எந்தவொரு முன்னோக்கினையும் தள்ளுபடி செய்தனர்: "யுத்தம் பொஸ்னியாவுக்குள்ளேயான சேர்பியன் குரோஷியன் விஸ்தரிப்பு வாதத்தினால் ஏற்பட்டதினால் "பொஸ்னிய மக்கள் யுத்தத்திற்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தினை நடாத்த முடியாது.... ஒரு பால்கன் சோசலிச ஒன்றியம் உண்மையில் ஒரு முற்றிலும் தன்னிச் சையான கருத்துப்பாடாகும். அது உண்மையில் இருந்து வருவதுபோல் எந்தவொரு போராட்டத்தினையும் அடிப் படையாகக் கொண்டதல்ல."

## பூரணத்துவமான உண்மைக்கு அடிபணிவு

"பூரணத்துவமான உண்மைக்கு அடிபணிவது என்ன? பொஸ்னியாவில் இன்று உண்மையில் இருந்து கொண்டுள்ள போராட்டம் போல்" இது தொழிலாள வர்க்கத்தினுள் ஒரு புரட்சிகரத் தலைமை இன்மையாலும் முதலாளித்துவ சோவினிச போக்குக்களின் ஆதிக்கத்தினாலும் உருவமைக்கப் படவில்லையா?

தொழிலாள வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம் எனவும் அது, முதலாளித்துவத்தைத் தூக்கி வீசி, ஒரு புதியதும் உயர்ந்ததுமான சமூக அமைப்பை சிருஷ்டிப்பதன் மூலம் மட்டுமே இந்த பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட முடியும் என்ற முன்னோக்கினை முன்வைப்பதன் மூலம், புரட்சிக் கட்சி அத்தகைய போக்குக்களுக்கு எதிராக விடாப்பிடியாகப் போராட வேண்டும்.

ஹோரே-சுலோட்டர் இந்த அடிப்படைக் கொள்கையை நிராகரித்து விட்டு சோவினிசத்தின் ஆதிக்கம் ஒரு மாற்ற முடியாத "யதார்த்தமாக" ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அவர்கள், மார்க்ஸ் ஒரு முறை குறிப்பிட்டது போல் "இன்றய பன்றி பேராசைக் காரர்களை நேற்றய பன்றிப் பேராசைக்காரர்களால் நியாயப்படுத்துவதில் நிபுணர்கள்."

சேர்பியர்களும் குரோஷியர்களும் "விஸ்த்தரிப்பு வாதிகளாக" இருப்பதால் இந்த உடன்பிறப்பை கொல்லும் யுத்தத்தினை எதிர்ப்பதில் பொஸ்னியத் தொழிலாளர்கள் குரோஷியாவிலும் சேர்பியாவிலும் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுடன் இணையமுடியாதென தொழிலாளர் புரட்சிக் கட்சி வலியுறுத்துகின்றது. மார்க்சிசத்துடன் ஏதோ தொடர்பு கொண்டுள்ளதாக நடித்துக் கொள்ளும் ஒரு அமைப்பின் வினோதமான நிலைப்பாடு என்னே!

முதலாம் உலகயுத்தத்தின் போது இரண்டாம் அகிலத்தின் சமூக சோவனிஸ்டுக்கள் சரியான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்ததாயும், லெனின் ஒரு நம்பிக்கையில்லாத "அர்த்தமற்ற தொழிலாள வர்க்க தீர்வினை" முன்வைத்தார் என்ற முடிவுக்கு மட்டுமே ஒருவர் வரமுடியும். மிலோசேவிக், ருட்ஜ்மன் ஆட்சியாளர்களின் "விஸ்தரிப்புவாதப் போக்குகளின்" அடிப்படையில் பொஸ்னிய தொழிலாளர்கள் குரோஷிய சேர்பிய தொழிலாளர்களுடனான ஐக்கியத்தினை நிராகரிக்க வேண்டின் ஜேர்மன் சமூக ஜனநாயக வாதிகள் ஜேர்மன் தொழிலாளர்களை "ருஷ்ய நாடோடிகளுக்கு" எதிராக தாயகத்தை காக்கும்படி கூறுவது நியாயமானது. மேலும் அந்தக் காலப்பகுதியின் சேர்பிய சோசலிஸ்டுக்கள் ஆக்கிரமிப்பு "ஹூன்ஸ" (Huns) களை எதிர்த்துப் போராடுவதில் "தமது" அரசாங்கத்துக்கு உதவிக்கு வராதது முற்றிலும் தவறாகும்.

## வரலாறும் அடிப்படைக் கொள்கையும்

ஹோரே-சுலோட்டர் பால்கன்ஸ் தொடர்பான மார்க்சிச இயக்கத்தின் வேலைத்திட்ட மரபுரிமைகளை வழக்காறான முறையில் தள்ளுபடி செய்கின்றனர். ஒரு பால்கன் சோசலிச ஒன்றியத்தின் "முற்றிலும் தன்னிச்சையான கருத்துப்பாடு" என அவர்கள் அழைப்பதானது கடந்த நூற்றாண்டின் முடிவில் இருந்து இப்பிராந்தியத்தில் சோசலிச அரசியலின் பிரதான அச்சினை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

போட்டி பேரரசுகளுக்கும் குட்டி அரசுகளுக்கும் இடையே பால்கன் பிரிக்கப்படுவதற்கும் வெளிநாட்டுச் சக்திகளும் தேசிய ஆளும் வர்க்கங்களும் தொடர்ந்து சோவினிசத்தையும், யுத்தத்தையும் தூண்டிவிடுவதற்கு முடிவு கட்டுவதற்கான ஒரே வழியாகவே மார்க்சிஸ்டுகள் ஒரு பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக்கான கோரிக்கையை அபிவிருத்தி செய்தனர். தொழிலாளர் புரட்சிக் கட்சி இன்று வெறுப்புடன் நிராகரிக்கும் இந்த கோரிக்கையின் ஆழமான உள்ள



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

டக்கத்தை புரிந்து கொள்ள இப்பிரந்தியத்தின் வரலாற்றை ஆய்வது அவசியம். "வேர்க்கஸ் பிரஸ்" பக்கங்களில் ஹோரே கேம்பிரிஜ் வரலாற்று ஆராய்ச்சி மாணவனாகக் கொண்டாடப்படும் அதே வேளையில் அவ ரின் ஆய்வுகள் முற்றிலும் 1940களில் பாசிச உஷ்டாஷே ஆட்சியில் இருந்து இன்றைய ருட்ஜ்மனின் வலதுசாரி அரசாங்கம் வரை குரோஷியன் தேசியவாதத்திற்கான இருப்பின்மை வாதத்தினை அபிவிருத்தி செய்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் யூகோஸ்லாவியாவிலான இன்றைய மோதுதல் தொடர்பான ஒரு சோசலிசக் கொள்கையை பால்கனில் சிக்கலான தேசியப் பிரச்சனை பற்றிய நூற்றாண்டு காலப் பழமைவாய்ந்த மார்க்சிச விவாதத்தினை ஒரு விமர்சன ரீதியில் உள்ளீர்துக் கொள்ளாமல் ஒருவர் விபரிக்கத் தொடங்க முடியாது.

ஹோரே–சுலோட்டருக்கு இந்த வரலாறு கிடையாது. இது அவர்களின் இன்றைய நடவடிக்கைகளுக்கு ஒரு வசதி யான நிலைப்பாடு. எங்கு வரலாறு இல்லையோ அங்கு அடிப்படைக் கொள்கைகளும் கிடையாது. வரலாறு சம்பந் தமான இந்த மனப்பாங்கில்–அதன் அரசியல் சம்பந்தமான வேறு பல விடையங்களில் போல தொழிலாளர் புரட்சிக் கட்சி புதிதாக ஒன்றையும் கண்டுபிடிப்பதில்லை. அது ஏகாதிபத்திய முதலாளித்துவத்தினையும் அதன் தொடர்புச் சாதனங்களையும் சும்மா பின்பற்றுகிறது. முன்னாள் யூகோ ஸ்லாவியாவின் சமீபகால சம்பவங்கள் தலைப்புச் செய்திக ளாக வெளியாகத் தொடங்கியதும் இந்த மோதுதல்களுக்கு அடிப்படையான வரலாற்று விவகாரங்ங்ள் பற்றி ஒரு குறிப்படத்தக்க மௌனம் நிலவியது.

இராஜாங்க திணைக்களத்தினதும், ஐக்கிய நாடுகள் சபையினதும், நேட்டோவினதும் தொழிலாளர் புரட்சிக் கட்சியினதும் அறிக்கைகள் ஊடாக எதிரொலிக்கும் கபடத் தனமான "ஆக்கிரமிப்பு" கண்டனங்களையும் பொஸ்னியன் "சுயநிர்ணயம்" "தேசிய இறைமை" க்கு ஆதரவான பிரகட னங்களையும் ஒருவர் நியாயமானதென ஏற்றுக் கொள்வ தற்கு வரலாற்று அறிவீனம் இன்றியமையாதது.

## 'கிழக்கத்தைய பிரச்சனை'

இன்றய நிலைமையில் கடந்து சென்ற ஒரு சகாப்தத் துக்கு திரும்பும் ஒரு பலம் வாய்ந்த உணர்வு காணப் படுகிறது. ருஷ்யப் படைகள் சேர்பியருக்கு அருகே நிலைப்பாடுகளை எடுத்துக் கொண்டுள்ளதோடு அமெரிக்கா வும், ஜேர்மனியும் தமது ஆதரவை முறையே முஸ்லீம்க ளுக்கும் குரோஷியர்களுக்கும் வழங்கியுள்ளனர். பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்திற்கு மேலதிகமாக கிரேக்க அரசாங்கம் சமீப மாதங்களில் பின்னையதன் தேசிய அடையாளம் சம்பந்தமான பிரச்சனை தொடர்பாக ஒரு மசிடோனியா முற்றுகையை ஏற்படுத்தியது.

முதலாளித்துவ விமர்சகர்களும் அத்தோடு அவர்களின் "சோசலிஸ்ட்" போலிகளும் யூகோஸ்லாவியாவிலான இன் றைய தகராறின் இந்தப் பண்புகளை பால்கன் மக்களின் உளவியலுக்கோ அல்லது பெரிதும் சேர்பியர்களின் வில்லன் பண்புக்கோ காரணம் கற்பிக்கிறார்கள்.

பழமைக்கான இந்த வெளிப்படையான திருப்பம், ஓர் புறநிலை மூலத்தைக் கொண்டுள்ளது. முதலாளித்துவ அமைப்பை முழுமையாக நெருக்கடிக்குள் தள்ளியுள்ள உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசு முறைக்கு மான முரண்பாடு நீண்டகாலமாக நசுக்கப்பட்டதும் ஆனால் ஒருபோதும் தீர்க்கப்படாததுமான தேசிய, இனக் குழு பிரச்சனைகளை திரும்பவும் உயிர்ப்பித்துள்ளது. ஒட்டோமன் பேரரசின் வெடிப்பில் இருந்து இது பால்கன் பிளேக் நோயாக பீடித்துள்ளது.

பால்கன் பிரச்சனைக்கான மார்க்சிசத்தின் அழியாத பங்களி ப்பு ஒரே சிறிய பிராந்தியத்தில் வாழும் பல இன, தேசியக் குழுக்களுக்கிடையே வரலாற்று ரீதியில் தீர்வுகாண முடி யாத பிணக்காக இருந்துவரும் ஒன்றுக்கு, ஒரு அணுகு முறையைச் சரியாக அபிவிருத்தி செய்வதே. பொருளாதார அபிவிருத்தி அளவையியலின் அடிப்படையில் மார்க்சிஸ்டு கள் தென் ஸ்லாவ் (SLAV) மக்களை தனியான ஒரு கூட்டு அரசியல் இணைக்க வாதிட்டனர்.

1815ல் இருந்து 1915 வரை "கிழக்கத்தைய பிரச்சனை" ஐரோப்பிய விவகாரங்களில் சச்சரவுக்கான பெரும் எலும்புத் துண்டாக விளங்கியது. இறுதியில் முதலாம் உலக யுத்தத்திற்கான தீப்பொறியையும் வழங்கியது. ஐரோப்பிய பெரும் வல்லரசுகள்–பிரித்தானியா, பிரான்ஸ், ஆஸ்திரியா–ஹங்கேரி, ருஷ்யா அத்தோடு சில சமயங்களில் பிரஸ்சியா–பெரிதும் விரகி முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிராந் தியத்துக்காகவும் சிதறுண்டு போகும் ஒட்டோமன் பேர ரசிற்கு சொந்தமான பிராந்தியங்களின் தலைவிதிக்காகவும் போட்டியிட்டன.

பிருத்தானியாவும் ஓரளவுக்கு ஆஸ்ட்ரோ–ஹங்கேரியன் ஹப்ஸ்பேக் பேரரசும் சமீப கிழக்கில் (Near East) ருஷ்ய பரம்பலுக்கு ஈடாக ஒட்டோமன் பிராந்தியங்களின் பிராந்திய முழுமையை ஆதரித்தன. ருஷ்யாவும் பிரான்சும் இப்பிராந் தியத்தில் உள்ள தேசியவாத இயக்கங்களுடன் சில தரு ணங்களில் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் மூலம் தமது நலன்களை கடைப்பிடிக்கும்படி தள்ளப்பட்டன.

## பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினா மீதான பிணக்கு

பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினா என்ற சிறிய பிராந்தியத்தின் ஆதிக்கத்துக்கான போட்டியில் அப்பிராந்தியத்தின் வேறு பட்ட தேசிய இனங்கள் ஈடுபட்டதோடு, ஒரு குழுவுக்கு எதிராக மறு குழுவை குழிபறிக்க வைப்பதில் ஏகாதிபத்திய சக்திகள் சாதுரியமாக செயற்பட்டன.

1875ல் பொஸ்னியா, ஹேர்ஸ்கோவினாவில் விவசாயிகளின் கிளர்ச்சி வெடித்தது. அப்போது இது ஒட்டோமன் பேர ரசின் ஆதிக்கத்தில் இருந்தது. விவசாயிகளினை அடக்கும் துருக்கி ஆட்சியாளர்களதும் வல்லரசுகளதும் கூட்டு முயற்சி இலாயக்கற்றதாக போயிற்று. ஒரு வருடத்தின் பின்னர் சேர்பியாவும் மொன்டினிக்றோவும் ஒட்டோமன் பேரரசுக்கு எதிராக ஒரு சிறியதும் தோல்வி கண்டதுமான யுத்தத்தினை தொடுக்கச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது.

அடுத்த ஆண்டு ருஷ்யா யுத்தப்பிரகடனம் செய்ததோடு ஒட்டோமன் இராணுவத்தின் மீது ஒரு விரைவான வெற் றியை அடைந்தோடு, சான் ஸ்ரெபனோ (San Stefano) உடன்படிக்கையில் அதன் சொந்த நிபந்தனைகளை திணித் தது. பிருத்தானியா, ஜேர்மனி, ஹப்ஸ்பேக் பேரரசு அனைத் தும் பால்கனில் அதிகார சமநிலை இங்ஙனம் நிலை குலைக்கப்படுவதை எதிர்த்தன. அவை 1878ல் திரும்பவும் பிராந்தியத்தனை மறுபங்கீடு செய்யும் பொருட்டு பேர்லின் காங்கிரசைக் கூட்டின.

வல்லரசுகள் ஒட்டோமன் பேரரசு விவசாயிகளின் கிளர்ச்சியி னாலும் யுத்தத்தினாலும் இழந்த பிராந்தியங்களின் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பங்கைப் பெற்றன. ஆஸ்திரியா–ஹங்கேரிக்கு பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினாவையும் சேர்பியாவில் இருந்து மொந்தினிக்ரோவைப் பிரித்த ஒரு துண்டு நிலமான நோவி பசாரின் சஞ்சாக்கையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. ருஷ்யா திரும்பவும் தென் பெசாரபியாவைப் பெற்றது. பிருத்தானியா சைபிரசை ஆக்கிரமித்துக் கொண்டது. பேர்லின் காங்கிரஸ் பால்கன் அரசுகளின் தேசியக் கோரிக்கைகள் எதையும் தன்பாட்டில் தீர்த்து வைக்காததோடு பிரிவினைகளையும் அவற்றிடையே எதிர்கால மோதுதல்களுக்கான விதைகளைத் தூவவுமே உதவியது.

பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினா ஹப்ஸ்பேர்க்கை கைப்பற்றியது. முஸ்லீம், சேர்பிய சனத்தொகை இரண்டினதும் கசப்பான எதிர்ப்பினைத் தூண்டுவதன் மூலம் மட்டுமே அமுல் செய்யக் கூடியதாக இருந்தது. ஆஸ்திரியர்கள் பிராந்தியத்தினை ஆக்கிரமிக்க குரோஷியன் பதின்மூன்றாவது இராணுவப் படைப் பிரிவை அனுப்பியதோடு அதன் புதிய நிர்வாகத்தை குரோஷியன் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பியது. குரோஷிய சட்ட சபையும் அதன் ஆளுனரும் ஹப்ஸ்பேர்க் பேரரசனுக்கு பிராந்தியத்தினை அதன் சொந்தமாக இணைத்துக் கொள்ள "பெட்டிசம்" வரைந்தனர்.

சேர்பியாவும் கூட பிராந்திய உரிமை கோரியது. அதன் சனத்தொகை ஆகக் குறைந்தது 40% சேர்பியர்களைக் கொண்டிருந்தது. இரட்டை பேரரசன் (The Dual Monarchy) பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினா சேர்பியாவுடன் இணைக்கப்படுவதை எதிர்த்தான். இது அப்பிராந்தியத்தில் உள்ள தேசிய இயக்கத்தைப் பலப்படுத்தும் எனவும் ஹப்ஸ்பேர்க் பிராந்தியங்களில் வாழும் தென் சிலாவ் மக்களை கவரும் ஒரு கம்பமாக இது விளங்கும் எனவும் அஞ்சினான். அதே சமயம் இது மாகாணங்களை குரோஷியாவுடன் சேர்க்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. இது மாகாணங்களை குரோஷியன் தேசிய வாதத்தினை இது ஊக்கப்படுத்தும் என அஞ்சியது.

ஆஸ்திரியாவுடன் அல்லது ஹங்கேரியுடன் பிராந்தியத்தினை சேர்ப்பது வியன்னாவுக்கும் புடபெஸ் (Budapest) டுக்கும் இடையே இரட்டைப் பேரரசனால் நிலைநாட்டப்பட்ட சமபல நிலையைத் தலைகீழாக்கலாம் என்ற அச்சத்தினால் இவ்விவகாரம் மேலும் சிக்கலாக்கப்பட்டது. இதன் பெறுபேறாக மாகாணங்கள் முடியரசனின் நேரடிக் கட்டுப் பாட்டினுள் கொணரப்பட்டதோடு இணை நிதி அமைச்சரினால் நிர்வகிக்கப்பட்டது.

பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினாவுக்கான சுயநிர்ணய விவகாரம் என்றுமே ஹப்ஸ்பேக் ஆட்சியாளர்களின் அக்கறைக்குரியதாக இருந்தது கிடையாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மேலும் தனிப்பட்ட பொஸ்னியன் அல்லது முஸ்லீம் இயக்கம் கூட இருக்கவில்லை. இந்த ஹப்ஸ்பேர்க் நிதி அமைச்சரே சேர்பியர்களுக்கும் குரோஷியர்களுக்கும் இடையான போட்டியை உக்கிரமாக்கியும், சுரண்டுவதன் மூலமும் பொஸ்னியன் முஸ்லீம் தேசிய வாதத்தினை–அதிக வெற்றியின்றி–வளர்த்தெடுக்கப் பின்னர் முயன்றார்.

1908ல் பேரளவில் ஒட்டோமன் சொந்தத்தில் இருந்து வந்த பொஸ்னியா– ஹேர்ஸ்கோவினாவை ஆஸ்ட்ரோ– ஹங்கேரி இணைத்துக் கொண்டமை பிராந்தியத்தில் சமபல நிலமையைக் குழம்பிப்போகச் செய்தது. இந்த ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை சேர்பியா, ருஷ்யா இரண்டையும் ஆத்திரமடையச் செய்தது. இவை இணைப்பு பிராந்தியத்திலான தமது ஆதிக்கத்துக்கு ஒரு அடியாகக் கண்டன. இது கிழக்கத்தைய பிரச்சனையின் முரட்டுத்தனமான மீள்திறப்புக்கான ஒரு சமிக்ஞையாக விளங்கியது.

இது 1912ம் ஆண்டின் முதலாவது பால்கன் யுத்தத்தினை வெடிக்கச் செய்தது. இது பால்கன் அரசுகளின் ஒரு கூட்டு வடிவத்தை–சேபியா, பல்கேரியா, கிரீஸ், மொன்டிநிக்ரோ–ஒட்டோமன் பேரரசுக்கு எதிராக எடுக்கச் செய்தது. துருக்கிய இராணுவம், பால்கன் படைகளின் சிறப்பு வல்லமையின் எதிரே சரிந்து போயிற்று. அது அல்பானிய, மசிடோனியப் பிராந்தியங்களைத் தாண்டிச் சென்றது.

1913 மேயில் வல்லரசுகள் போருக்கு ஒரு முடிவுகட்ட நெருக்கும் வகையில் தலையிட்டதோடு, லண்டன் உடன்படிக்கைத் தீர்வுகளின் சரத்துக்களை திரும்பவும் நடைமுறைக்கிட உத்தரவிட்டன. இத்தாலியின் ஆதரவுடனான ஆஸ்திரியா–ஹங்கேரியின் முக்கிய நோக்கம், அட்ரியாட்டிக் கடலில் ஒரு துறைமுகத்தைப் பெற்றுக் கொள்ளும் அதன் இலக்கினை மறுப்பதாகும். அந்த நோக்கில் அவர்கள் பலம்வாய்ந்த தேசிய எல்லைகளுடன் கூடிய ஒரு சுதந்திர அல்பானியாவை அமைக்கும்படி வலியுறுத்தினர்.

அல்பானியப் பிராந்தியத்தினைத் திட்டமிட்டபடி பிரிக்கும் தமது இலக்கில் ஏமாற்றம் கண்ட சேர்பியா, கிரீஸ் இரண்டும் பல்கேரியாவுக்கு நஷ்ட ஈடாக வழங்கப்படடிருந்த மசிடோனியன் பிராந்தியத்தினை கோரின. இது இரண்டாம் பால்கன் யுத்தத்திற்கான களத்தை தயார் செய்ததோடு அது பல்கேரியாவின் தோல்வியிலும் முடிந்தது. கிரீசும் சேர்பியாவும் மசிடோனியாவை தமக்கிடையே பிரித்துக் கொண்டன. சேர்பியாவும், மொண்டிநிக்கிரோவும் நொவிபசார் சஞ்ஜக்கினை பிரித்துக் கொண்டன. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே முதற் தடவையாக ஒரு பொது எல்லையை ஏற்படுத்திக் கொண்டன.

ஏகாதிபத்தியவாதிகள் அல்பானியாவை பிருத்தானிய தலைமையிலான வல்லரசுகளினால் ஆளப்பட வேண்டிய ஒரு காவலரண் ஆட்சிப் பிராந்தியமாக பேர்சூட்டினர். அவர்கள் பெருவாரியான அல்பானிய மக்களைக் கொண்ட பகுதிகளை–மிகமுக்கியமாக கொசோவா– இந்த புதிய உரிமைப் பிராந்தியங்களுக்கு வெளியே தள்ளி எல்லைகளை வரைந்தனர். டச்சு, பாதுகாப்புப் படைகளை ஒழுங்கு செய்யும் வேலையைப் பொறுப்பேற்றது. ஒரு அனைத்துலக கட்டுப்பாட்டு ஆணைக்குழு (I.C.C.) வல்லரசுகளின் ஒவ்வொரு பிரதிநிதியையும் ஒரு அல்பானியனையும் கொண்டிருந்தது–அது அரசியல் அமைப்புத் திட்டத்தினை வரைந்தது. ஒரு அரசியலமைப்புச் சட்ட ரீதியான முடியாட்சி சிம்மாசனத்தில் இருப்பதற்கு ஜேர்மன் இளவரசர் தெரிவு செய்யப்பட்டார். இந்த ஒழுங்குகள் பரந்தளவிலானதும் தாங்கிப் பிடிக்கக் கூடியதுமான ஒரு விவசாயிகள் கிளர்ச்சியினை தூண்டிவிட்டது. இது முதலாம் உலக யுத்தம் வரையும் நீடித்ததன் மூலம் பிராந்தியத்தினை ஆட்சி செய்யமுடியாமல் செய்தது.

## தென் சிலாவ் மக்களை ஐக்கியப்படுத்துதல்

ஏகாதிபத்திய வாதிகளின் இந்த தொடர்ச்சியான பிரித்தாளும் கொள்கையை வருணிப்பதற்கு "பால்கன் மயம்" (Balkanisation) என்றபதம் கண்டு பிடிக்கப்பட்டது. குடா நாட்டின் மக்களை அடிமைப்படுத்தவும் தமது போட்டியாளர்களுக்கு எதிராக தமது சொந்த மூலோபாய நலன்களை அடையவும் பல்வேறு சக்திகளும் தேசிய, இனக்குழு பிணக்குகளை சாதுரியமாகப் பயன்படுத்தின.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இந்த வரலாற்றினை தள்ளுபடி செய்து விட்டு, சுலோட்டரும்– ஹோரேயும் இப்போது பால்கன் மயத்தினை ஒரு வரலாற்றுச் சாபக்கேட்டில் இருந்து நற்குணமாகப் பரிணாமம் செய்ய முயற்சிக்கின்றனர். அவர்களின் அரசியல் அகராதியில் இது "சுயநிர்ணயம்" "விடுதலை" யைக் குறிக்கும் சொல்லாக மாறுகின்றது.

பால்கனில் தேசியப் பிரச்சனை ஸ்தூலமாக அபிவிருத்தி கண்டது எப்படி? இப்பிராந்தியத்தில் தேசிய இணைப்பு, பிரிவினை வாதம் தொடர்பாக மார்க்ஸ்டுகள் கடைப்பிடித்த நிலைப்பாடு என்ன?

ஒட்டோமன் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பால்கனிலான தேசிய ஒடுக்கு முறை தேசியக் குழுக்கள் அரச எல்லைகளால் பிரிக்கப்பட்டதன் மூலம் அதன் குரூர வடிவத்தினை எடுத்தது. உதாரணமாக சேர்பிய சனத்தொகை ஐந்து வேறுபட்ட நாடுகளில் காணப்பட்டது.

முதலாளித்துவ தேசியவாத இயக்கத்தினுள்ளேயான மிகவும் முற்போக்கான மூலகங்கள் தென் சிலாவிக் மக்களை ஐக்கியப்படுத்துவதை– சேர்பியர், குரோஷியர், சுலோவினியர், முஸ்லீம்கள் போன்றோர்– தேசிய விடுதலைக்கான பாதையாக தோற்றுவித்தது.

குரோஷிய தேசியவாத இயக்கம் இந்த விவகாரத்தில் பிளவுபட்டது. ஒரு கன்னை குரோஷியன் தனிச் சிறப்புரிமைவாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து குரோஷியன் நிலங்களது இணைப்புக்கு அழைப்பு விடுத்ததோடு– இதில் குரோஷியா, சுலோவீனியா டல்மட்டியா, பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினா–ஒரு தனியான அரசில் ஆஸ்திரியா, ஹங்கேரியுடன் சேர்ந்து கொள்வதை அவர்கள் உள்ளடக்கிக் கொண்டனர். மற்றொரு கன்னை சேர்பியர்களதும் குரோஷியாகளதும் ஐக்கியத்தினை ஆதரித்ததோடு ஒருவர் மற்றொருவருக்கு குழிபறிக்கும் ஹப்ஸ்பேர்க் பேரரசின் ஓயாத பிரயத்தனங்களை எதிர்த்தது.

இதே விதத்தில் சேர்பிய தேசிய இயக்கம், தனியொரு தேசியத்தில் அனைத்து சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவீனியர்களின் ஒருங்கிணைப்பை தழுவிக் கொண்டவர்களுக்கும், மாபெரும் சேர்பியா என்ற முறையிலும் அனைத்து சேர்பியர் வாழும் நிலமாக விஸ்தரிப்பதன் அடிப்படையில் சிந்தித்தவர்களுக்கும் இடையிலும் பிளவுண்டு போயிற்று.

இந்த விதத்தில் மார்க்சிஸ்டுகள் மட்டுமன்றி பால்கனில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்து பெரிதும் தூரதிருஷ்டி மிக்க தேசியவாதிகள் கூட சுயநிர்ணயம் தென் சிலாவியர்களை தனியொரு அரசில் ஐக்கியப்படுத்தும் ஒரு போராட்டமாக அன்றி அவர்களை குட்டி விருந்தளிப்பவர்களாகத் தனிமைப் படுத்துவது அல்ல என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர்.

குரோஷியர்களதும் சேர்பியர்களதும் விடயத்தில் ஒருவர் மொழிவாரியாக வேறுபட்டவர்களுடன் அல்லாது மதத்தினால் மட்டும் வேறுபட்ட முறையே ஹப்ஸ்பேர்க், ஒட்டோமன் பேரரசுகளின் மேலாதிக்கத்துக்குட்பட்ட மரபு வழி பற்றியே ஆய்கின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து மார்க்சிஸ்டுகள் ஒரு புறத்தில் தேசிய இனங்களுக்கும், மறுபுறத்தில் மதம் அல்லது இனக் குழுக்களுக்கும் இடையை இனங்காண்பதை–இப்போது பிருத்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் உதறித்தள்ளப்பட்டும் பொதுவில் குட்டி முதலாளித்துவத்திடையை செல்வாக்கிழந்தும் உள்ளதை–வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர்.

பழைய பால்கன் அரச வம்சத்தினரும் தலையெடுத்து வந்த முதலாளித்துவ வர்க்கமும் ஒன்றிணைப்புப் பணியை அமுல் செய்ய லாயக்கற்றதாக நிரூபிக்கப்பட்டது. ஒரு புறத்தில் அவை வெளிநாட்டு மூலதனத்தினையும் ஏகாதிபத்திய ராஜதந்திரத்தினையும், மறுபுறத்தில் அரைநிலமானித்துவ உறவுகளையும் ஸ்தாபனங்களையும் சார்ந்திருந்தன. அவற்றின் சொந்த அரசுகளின் உள்ளே அவர்கள் சோவினிசத்தையும் பிராந்திய வாதத்தினையும் பிச்சாரம் செய்வதன் மூலம் தமது ஆட்சியை நியாயப்படுத்த முயன்றனர்.

## பால்கன் சமஷ்டி

மார்க்சிச இயக்கம், இப்பிராந்தியம் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையில் இருந்து விடுவிப்பதற்கான உபாயமாக ஒரு பால்கன் சமஷ்டிக் கருத்துப்பாட்டினை ஆரம்பித்து வைத்தது.

சேர்பியன் சோசலிச இயக்கத்தின் ஸ்தாபகரான சுவெற்றசார் மார்க்கோவிக் (Svetozar Markovic) 1870 பதுகளில் ஒரு பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக் கருத்துப்பாட்டினை முன்வைத்தார். சமூக ஜனநாயகக் கட்சிகளதும் தென் கிழக்கு ஐரோப்பிய குழுக்களதும் முதலாவது காங்கிரஸ் 1910 ஜனவரியில் பெல்கிரேட்டில் கூடியது. இது வளைகுடா மக்களின் பொருளாதார, அரசியல் விடுதலைக்கு அழைப்பு விடுத்ததோடு அவர்களைப் பிரித்த அனைத்து எல்லைகளையும் அழித்து, பாட்டாளிவர்க்க வர்க்கப் போராட்டத்தின் மூலம் ஒரு பால்கன் சமஷ்டியைச் சிருஷ்டிக்கும் படி அழைப்பு விடுத்தது.

காங்கிரசினால் வரையப்பட்ட அறிக்கை, அத்தைகய ஒரு சமஷ்டி மட்டுமே "தனிச்சிறப்புரிமை வாதத்தில் இருந்தும் குறுகிய போக்கில் இருந்தும் எம்மை விடுவிக்கவும் ஒரு புறத்தில் மொழியினாலும் கலாச்சாரத்தனாலும் மறு புறத்தில் பொருளாதார ரீதியிலும் பிணைக்கப்பட்ட மக்களைப் பிரிக்கும் எல்லைகளை அழிக்கவும், இறுதியாக மக்கள் தமது தலைவிதியைத் தாமாகவே நிர்ணயம் செய்து கொள்ளும் உரிமையை மறுக்கும் நேரடியானதும் மறைமுகமானதுமான ஏகாதிபத்திய மேலாதிக்க வடிவங்களைத் துடைத்துக் கட்டவும் ஒரேவழி என்கிறது." (பால்கன் யுத்தங்கள்– ட்ரொட்ஸ்கி, பக்கம் 30)

கார்ல் கவுட்ஸ்கியும் அன்றைய ஏனைய முன்னணி சமூக ஜனநாயக வாதிகளும் கூட இப்பிரச்சனை பற்றி எழுதினார்கள். தெளிவானதும் –அத்தோடு மிகவும் தீர்க்கதரிசனம் மிக்கதுமான– ஒரு பால்கன் சமஷ்டிக்கான சோசலிச வேலைத்திட்ட விளக்கம் லியொன் ட்ரொட்ஸ்கியினால் உருவாக்கப்பட்டது.

1910ல் ட்ரொட்ஸ்கியால் வரையப்பட்ட "பால்கன் பிரச்சனையும் சமூக ஜனநாயகமும்" என்ற கட்டுரையில் அவர் எழுதியதாவது: "பால்கன் வாழ்கையின் தேசிய, அரச குழப்பங்களில் இருந்தும் இரத்தம் தோய்ந்த தடுமாற்றங்களில் இருந்தும் விடுபடுவதற்கான ஒரே வழி அங்கமான பகுதிகளின் தேசிய சுயாட்சியின் அடிப்படையில் குடாநாட்டின் அனைத்து மக்களையும் தனியொரு பொருளாதார, அரசியல் கூட்டில் இணைப்பதே. தனியொரு பால்கன் அரச வரம்பினுள் மட்டுமே மசிடோனிய சேர்பியர்களும், சஞ்ஜக், சேர்பியா மொன்டிநிக்ரோ ஒரு பால்கன் பொதுச் சந்தையின் நன்மைகளை அனுபவித்த வண்ணம் தனியொரு தேசிய



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கலாச்சாரச் சமூகத்தில் ஐக்கியப் படுத்தப்பட முடியும். ஐக்கியப்பட்ட பால்கன் மக்கள் மட்டுமே ஸாரிசத்தினதும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தினதும் அவமானம் நிறைந்த நடிப்புக்களுக்கு ஒரு நிஜ எதிர்த்தாக்குதலைத் தொடுக்க முடியும்.

"பால்கன் குடாநாட்டின் அரச ஐக்கியம் இரண்டில் ஒரு வழியில் மட்டுமே அடையப்படமுடியும்: ஒன்றில் மேலிருந்து பலவீனமானவற்றின் இழப்புக்களின் மூலம் எது பலமானதாக நிரூபிக்கப்படுகிறதோ–ஒரு பால்கன் அரசினை விஸ்தரிப்பதன் மூலம், ஒழித்துக்கட்டும் யுத்தங்களினதும் பலவீனமான தேசிய இனங்களை ஒடுக்குவதனதும் பாதை, இது முடிமன்னராட்சியையும் இராணுவ வாதத்தினையும் வலுப்படுத்தும் ஒரு பாதை. அல்லது கீழ் மட்டத்தில் இருந்து மக்கள் தாமாகவே ஒன்றிணைவது. இது புரட்சியின் பாதை. இப்பாதை பால்கன் அரசவம்சத்தை தூக்கிவீசி, ஒரு பால்கன் சமஷ்டிக் குடியரசின் கொடியைப் பறக்க விடுவதைக் குறிக்கிறது."

அத்தகையதொரு சமஷ்டியினை அமைப்பது தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியம் பூண்ட புரட்சிகரப் போராட்டங்கள் ஊடாக மட்டுமே யதார்த்தமாகும் என்பதை ட்ரொட்ஸ்கி தெளிவுபடுத்தினார். அவர் எழுதியதாவது: "எல்லா நாடுகளையும் போலவே பால்கன் முதலாளி வர்க்கம் முதலாளித்துவ அபிவிருத்திப் பாதைக்கு காலதாமதமாகியே வந்துள்ளது. அது அரசியல் ரீதியில் மலட்டுத்தனமானதும் கோழைத்தனமானதும் திறமையற்றதுமாகும். முற்றிலும் திரும்பத் திரும்ப சோவினிசத்துடன் நாற்றம் கண்டது. (அதேநூல் பக்கம் 39-40)

சுலோட்டருக்கும்–ஹோரேக்கும் இக்கருத்துக்கள் பொஸ்னியாவிலான "நிஜ போராட்டத்துடன்" எந்தவிதமான உறவும் கொள்ளாத "தன்னிச்சையான கருத்துப்பாடுகள்" அல்லாது வேறொன்றும் அல்ல. இம்முன்நோக்கின் தீர்க்கதரிசனம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

## சோசலிசமும் பால்கன் யுத்தமும்

யூகோஸ்லாவியாவின் துண்டுகளை இன்று ஆட்சி புரியும் மாஜி– ஸ்ராலினிஸ்டுகளாலும் இனக்குழு வகுப்புவாதிகளாலும்– பிருத்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியில் உள்ள அவர்களின் சகபாடிகளுடன் சேர்ந்து திட்டமிட்டு புதைக்கப்பட்ட போதிலும் பால்கன் சோசலிச அனைத்துலகவாதத்தின் ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது.

1912-13ல் பால்கன் யுத்தத்தின் வெடிப்புடன் சேர்பியன் சமூக ஜனநாகக் கட்சியின் ஒரு பால்கன் சமஷ்டி முன்நோக்கு பரீட்சைக்குள்ளானது. இது சேர்பியன் ஆட்சியாளர்களின் யுத்த நோக்கங்களை எதிர்த்தது. ஒட்டோமன் ஆட்சியில் இருந்து பால்கனை விடுதலை செய்யும் போராட்டம் சில முற்போக்கு உள்ளடக்கத்தை கொண்டிருந்த போதிலும் சேர்பியன் சோசலிஸ்டுகள் ஆளும் வர்க்கத்தின் கொள்ளைக்கார யுத்த இலக்குகளில் எந்தவிதமான நம்பிக்கையும் வைக்கவில்லை.

கட்சியின் தலைவர் டிமிட்ரிஜே டுகோவிக் Dimitrije Tucovic 1913ல் அல்பானியா மீதான சேர்பிய ஆக்கிரமிப்பையும், ஆக்கிரமிப்பு மூலம் கடலுக்கு வெளியேறும் ஒரு வழியைக் கைப்பற்றும் அதன் முயற்சிகளையும் கண்டனம் செய்தார். அவ்வாறே அவர் அல்பானியாவைக் கூறுபோடும் சேர்பிய, கிரேக்க, மொன்டிநிகிரின் வரைவுகளை கண்டனம் செய்ததோடு "பூரண ஜனநாயகத்தினதும் பூரண சமத்துவத்தினதும் அடிப்படையில் பால்கனின் அனைத்து மக்களதும்– அல்பானியர்கள் உட்பட– அரசியல், பொருளாதாரக் கூட்டினை வேண்டி நின்றார். SSDP பால்கன் சமஷ்டியின் அனைத்துலகவாதக் கொள்கையின் அடிப்படையில் சேர்பியர்களின் இணைப்புக்கு ஆதரவு வழங்கிய அதே வேளையில், அது சேர்பிய அரசாங்கத்தின் இணைப்புக்கும் வெற்றிக்குமான முயற்சிகளை தொடர்ந்து எதிர்த்தது.

1912 அக்டோபரில் லெனினும் போல்ஷிவிக் கட்சியும் சேர்பியன் சோசலிஸ்டுகளின் நிலைப்பாட்டுடன் ஒன்றுபட்டு நின்றனர். பால்கன் யுத்தத்தினை எதிர்த்தும் எல்லாவற்றுக்கும் மேலாக பால்கனில் சிலாவிக் "விடுதலை" யை ஆதரிப்பதாகக் காட்டும் ஸார் ஆட்சியாளர்களின் நடிப்பை எதிர்த்தும் போல்ஷிவிக்குகள் ருஷ்யத் தொழிலாளர்கட்கும் விவசாயிகளுக்கும் ஒரு விஞ்ஞாபனத்தினை வெளியிட்டனர்.

"கிழக்கு ஐரோப்பாவில் பால்கன், ஆஸ்திரியா, ருஷ்யா பெரிதும் அபிவிருத்திகண்ட முதலாளித்துவப் பிராந்தியங்களுக்கு அருகே வெகுஜனங்கள் நிலமானித்துவத்தாலும் சர்வாதிகாரத்தினாலும் ஆயிரக்கணக்கான மத்தியகால மிச்சசொச்சங்களாலும் ஒடுக்கப்படுவதை நாம் காண்கின்றோம். அவ்வாறே அட்ரியாட்டிக் கரையில் மத்திய ருஷ்யாவின் கோடானகோடி விவசாயிகளும் பொஸ்னிய, ஹேர்ஸ்கோவினா விவசாயிகளும் நிலவுடமை அடிமைச் சொந்தக்காரர்களால் இன்னமும் சக்கையாடப்பட்டு வருகின்றனர். இந்த ஹப்ஸ்பேர்க், றோமானிய கடற்கொள்ளை அரச வம்சத்தினர் இந்த மத்தியகால ஒடுக்கு முறையை ஆதரிப்பதோடு மக்களுக்கு இடையேயான பகைமையை முடியரசின் ஆட்சியைப் பலப்படுத்தவும் பல தேசிய இனங்களின் அடிமைத்தனத்தை அழியாது நிலைபெற்று நிற்கச் செய்யும் விதத்தில் நெருப்பை கிளறிவிடவும் முயற்சிக்கின்றனர். கிழக்கு ஐரோப்பாவில் மன்னர்கள் மக்களை தமக்கிடையே பங்கிடுகின்றனர்: பரிமாறுகின்றனர்: வர்த்தகம் செய்கின்றனர். சொந்த அரச வம்ச நலன்களை முன்னேற்றும் பொருட்டு ஒட்டுப் போட்ட அரசுகளின் உள்ளே வேறுபட்ட தேசிய இனங்களை ஒன்றாக சேர்க்கின்றனர். அடிமை முறையின் கீழ் நிலச்சொந்தக்காரர்கள் தமது பிரஜைகளான விவசாயிகளின் குடும்பங்களை உடைத்துக் கலக்குவது போல்!

"பால்கன் நாடுகளில் உள்ள எமது சகோதர சோசலிஸ்டுகள் தமது சுயநிர்ணயத்துக்கான போராட்டத்துக்கும், மக்களின் சுதந்திரத்தினைப் பூர்த்தி செய்யவும், சோசலிசத்துக்கான பரந்த வர்க்கப் போராட்டப் பாதையை துப்பரவு செய்யவும் ஒரு சமஷ்டி பால்கன் குடியரசினை அணிதிரட்டும் கோஷமாக மக்களுக்கு விடுத்துள்ளனர். (ஒரு புரட்சிகர அனைத்துலகத்துக்கான லெனினின் போராட்டம்: பத்திரங்கள் 1907-1916: தயாரிப்புக் கால வருடங்கள் [நியூயோக் மொனாட் பிரெஸ், 1986] பக்கம் 85)

## SSDP யின் பாத்திரம்

கிறிஸ்ரியன் ரக்கோவ்ஸ்கி (Christian Rakovsky) போன்ற தலை சிறந்த தொழிலாளர் வர்க்கப் புரட்சிகரத் தலைவர்கள் ஒரு முன்னணி போல்ஷிவிக்காக வருவதற்கு முன்னர் பல்கேரியா, றூமேனியா, சுவிற்சலாந்து, ஜேர்மனி, பிரான்சில் ஒரு பிரபல சோசலிஸ்டாக விளங்கியவர். இந்த முன்நோக்கின் அடிப்படையிலேயே வளர்ச்சி கண்டவர். ரக்கோவ்ஸ்கி யுத்தத்தை எதிர்க்கவும் ஒரு பால்கன் சோசலிச சமஷ்டிக்குப் போராடவும் 1915ல் அமைக்கப்பட்ட பால்கன் புரட்சிகர சமூக ஜனநாயக சம்மேளனத்தின் (B.R.S.D.F) இணை ஸ்தாபகராக விளங்கினார்.

போல்ஷிவிக்குகளுக்கு வெளியே 1914ல் யுத்தக் கடன்களை நிராகரித்த ஒரே சோசலிசக் கட்சியாக சேர்பியன் சமூக



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயகக் கட்சி பிரபல்யம் அடைந்திருந்தது. முதலாம் உலகயுத்தம் வெடித்ததும் சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சியை விடப் பெரிதாக தேசிய தேசாபிமான நெருக்கு வாரங்களுக்கு ஆட்பட்ட வேறுகட்சி கிடையாது. ஹப்ஸ் பேர்க் முடிக்குரிய இளவரசரான ஆர்ச்டியூக் போர்டினன்ட் ஒரு போஸ்னியன் சேர்பிய தேசியவாதியினால் கொலை செய்யப்பட்டதற்கு பதிலடியாக ஆஸ்திரியா–ஹங்கேரி சேர்பியா மீது யுத்தப் பிரகடனம் செய்தது. பார்வைக்கு சிறிதான இச்சம்பவம் வல்லரசுப் போட்டிகளின் பவுடர் குப்பியை தட்டியதோடு உலகை ஒரு ஏகாதிபத்திய மனிதப் படுகொலைக்குள்ளும் இழுத்துச் சென்றது.

ஒரு தேசியப் பாதுகாப்புவாதக் கொள்கைக்காக கவர்சிகரமான வாதங்களை முன்வைக்கலாம். சேர்பியா அதன் சொந்த சுதந்திரம் ஹப்ஸ்பேர்க் முடியரசினால் அச்சுறுத்தப் பட்டதைக் கண்டது. 1915ல் மத்திய ஆதிக்கங்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இது யுத்தத்தில் இரத்தம் சிந்தியது. பூமியில் உள்ள எந்த ஒரு தேசிய இனத்தினைக் காட்டிலும் அதன் மக்களில் பெரும் பகுதியினரை ஐந்தில் ஒரு பங்கு யுத்த அழிவுகளுக்கும், நோய்களுக்கும் இழந்தது.

மேலும் 1914 யூலையில் ஆஸ்திரியா–ஹங்கேரி சேர்பியா மீது யுத்தப் பிரகடனம் செய்தபோது இரண்டு சோஷலிஸ்ட் பிரதிநிதிகள்– கக்லெறோவிக்கும் லப்ஸ்விக்கும்– தேசியப் பாதுகாப்புக்கான அரசாங்க அழைப்பினை நிராகரித்ததோடு அதற்கு பதிலாக SSDP யின் சொந்தத் தீர்வினை முன் வைத்தனர். "சேர்பியா, ஒரு சமஷ்டியை கொணரும் ஒரு பால்கன் கொள்கையை அங்கீகரிக்க வேண்டும். இதை அடைவதற்கு அது ஒரு சுங்கவரி சங்கத்தினை பூர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டு போக்குவரத்து சாதனங்களை நிறுவவேண்டும் ஒரு பொது அனைத்துப் பால்கன் பாராளுமன்றத்தை அமைக்க வேண்டும். நிரந்தர இராணுவத்தினை இரத்துச் செய்துவிட்டு, வல்லரசுகளின் ஒவ்வொரு தாக்குதலில் இருந்தும் எம்மைப் பாதுகாக்கும் ஒரு பொதுமக்கள் படையை நிறுவ வேண்டும்."

பால்கன் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கான இன்னுமோர் களமாகியுள்ளதாக லப்ஸ்விக் தொடர்ந்து எச்சரிக்கை செய்தார். "சேர்பியன் அரசாங்கம் இப்போது வல்லரசுகளின் ஒரு பகடைக்காயாக கையாளப்பட்டுவருகிறது என நான் அஞ்சுகிறேன்." என அவர் குறிப்பிட்டார். "யுத்தச் செலவீனங்கள் மதிப்பிடப்படும்போது வல்லரசுகள் உண்மையில் பால்கனதும், ஆசியாவினதும் சிறிய தேசங்களை, நஷ்டஈடாகக் கையளிக்கவேண்டிய வெறும் வஸ்துக்களாகவே கருதும்."

முதலாம் உலக யுத்த காலத்தில் சேர்பிய சோசலிஸ்டுகள் நிலை நாட்டிய வீரம் மிக்க உதாரணம், இன்று இனக்குழு சோவினிசத்தின் எதிரில் அதை நியாயப்படுத்தவும் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கவும் செய்யும் தொழிலாளர் புரட்சி கட்சியினர் போன்றவர்களுக்கு பொருத்தமான வசை மொழியாக அமைகிறது.

## யூகோஸ்லாவியாவும் ஏகாதிபத்திய தீர்வும்

சேர்பிய சோசலிஸ்ட்டுக்களின் யுத்தம் பற்றிய மதிப்பீடு, 1918ல் யுத்த நிறுத்தம், பிரகடனம் செய்யப்பட்டு அதிக காலம் செல்வதற்கு முன்னரே ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஜனநாயக வாய்வீச்சுக்களுக்கு இடையேயும் நேச நாடுகளின் வெற்றியாளர்கள் தேசியங்களின் சுயநிர்ணயத்தில் அக்கறை கொள்ளாது கொள்ளை அடித்தவற்றை பங்கு போடுவதில்– முக்கியமாக முன்னய ஒட்டோமன் பிராந்தியங்களையும், ஜேர்மனியின் காலனிகளையும் பங்குபோடுவதிலேயே– அக்கறை காட்டினர்.

ஏகாதிபத்தியம் பால்கனில் எல்லைக் கோடுகளை மீழ வரைந்தது. தன்னிச்சையான தேசிய எல்லைகள் மூலமும் படு மோசமான அடக்கு முறைகள் மூலமும் கூறுபோடப் பட்ட அதன் மக்களை திரும்பவும் புதிய ஆட்சியாளர்களின் கைக்குள் தள்ளியது. உதாரணமாக, றுமெனியாவினுள் 50 இலட்சம் றுமேனியர் அல்லாத மக்கள் சேர்க்கப் பட்டனர். பெருமளவிலான ஹங்கேரியன் சிறுபான்மையினர் ட்ரான்சில்வேனியாவில் குவிந்து போய் இருந்த அதே வேளையில் தென் டொப்றுஜாவில் பல்கேரியர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பெசரபியாவும் புக்காவினோவும் பெரும் அளவிலான உக்கிரேனியன் சனத்தொகையை கொண்டிருந்தது.

கிறிஸ் உம் துருக்கியும் ஒரு பலாத்காரமான சனத் தொகைப் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்ததன் மூலம் தேசியப் பிரச்சனைக்கு ஒரு காட்டுமிராண்டித் "தீர்வை" கடைப்பிடித்தது. இதில் பரந்த அளவிலான மக்கள் இனக் குழு ரீதியில் ஓரினத் தன்மையான தேவைகளை ஏற்படுத்தும் முகமாக புதிதாக வரையப்பட்ட எல்லைக் கோடுகளுக்கு விரட்டி அடிக்கப்பட்டனர்.

புதிய யூகோஸ்லாவிய அரசானது யுத்தத்தைத் தொடர்ந்து வந்த வல்லரசு குதிரை வர்த்தகத்தின் (Horse-trading) வம்புக் குழந்தையாக விளங்கியது. ஏகாதிபத்திய தீர்வின் மூலம் சிருஸ்டிக்கப்பட்ட ஏனைய சகல அரசுகளையும், எல்லைகளையும் போலவே இது பால்கன் மக்களின் எந்த ஒரு ஜனநாயக, தேசிய அபிலாசைகளையும் அடையத் தவறிவிட்டது.

இதன் ஸ்தாபிதம் பெருமளவுக்கு குரோஷியன் சுலோவினியன் ஆளும் வர்க்கங்களின் முன் முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டது. ஹப்ஸ்பேர்க் பேரரசின் வீழ்ச்சியுடன் அவர்கள் தென் ஸ்லாவ் அரசில் சேருவதா அல்லது தமது பிராந்தியங்கள் இத்தாலி, சேர்பியா– சிலவேளை ஆஸ்திரியா ஹங்கேரி– இடையே பங்குபோடப்படும் சாத்தியத்தினை தரிசிப்பதா என்ற தேர்வு செய்யும் பிரச்சனைக்கு முகம் கொடுத்தனர்.

மேலும் பால்கன் முழுவதிலும் இருந்துவந்த ஆட்சியாளர்கள், 1917 அக்டோபரின் வெற்றிகரமான ருஷ்ய புரட்சி இந்த பிராந்திய தொழிலாள வர்க்கத்திடையேயும் ஒடுக்கப் படும் மக்களிடையேயும் புரட்சிகர எழுச்சிகளால் பதிலளிக்கப்படுமோ என அஞ்சினர். இக் காரணங்களால் குரோஷியா, சுலோவினிய ஆட்சியாளர்கள் பாதுகாப்புக்காக பலமானதும் மத்திமயமாக்கப் பட்டதுமான ஒரு சேர்பிய அரசுக்கு ஆதரவாக திரும்பினர்.

1918 டிசம்பர் 1ல் சேர்பியர்களின், குரோஷியர்களின், சுலேவினியர்களின் மாகாணம் ஸ்தாபிக்கப்பட்டது. புதிய நாடு 1929ல் யூகோஸ்லாவியா என உத்தியோக பூர்வமாக பெயர் மாற்றம் செய்யப்பட இருந்தது. புதிய அரசானது சேர்பிய மன்னனதும், அரசு அதிகாரத்துவத்தினதும், இராணுவத்தினதும் அதிகாரத்தினை புதிய பிராந்தியங்கள் முழுவதிலும் விஸ்தரிக்கும் ஒன்றாகத் தோன்றியது. இது முன்னய ஹப்ஸ்பேர்க் பேரரசில் இருந்து வந்த நிறுவனங்களையும் ஒழித்துக் கட்டியதோடு, குரோஷிய இராணுவப் பிரிவுகளையும் தடை செய்தது. சேர்பியர்கள் உண்மையில் அரசாங்கத்தின் உயர்பதவிகள் அனைத்திலும் அமர்த்தப்பட்டனர்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அரசியல் எதிர்ப்புக்கள் கோரும் தனிநபர் அல்லது– தேசிய சுயாட்சி இயக்கங்கள் உட்பட கோரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டன. சேர்பியன் அரசுடனான தமது உடன்படிக்கை ஒரு பவுஸ்டியன் (Faustian) பேரம் பேசலாகும் என குரோஷியன் ஆளும் வர்க்கங்கள் கண்டதைத் தொடர்ந்து புதிய தேசியவாத அமைப்புக்கள் வளர்ச்சி கண்டன. இவற்றுள் ஸ்ரிபன் ரடிக்கின், குரோஷியன் குடியரசு விவசாயிகள் கட்சி (G.R.P.P) பிரபல்யமாக விளங்கியது.

யுத்தத்துக்கும் சேர்பியர், குரோஷியர், சுலோவினியர்களின் மாகாணம் ஸ்தாபிதம் செய்யப்பட்டதற்கு பின்னரும் புத்துயிர் ஊட்டப்பட்ட சேர்பிய சமூக ஜனநாயகக் கட்சி (SSDP) "தொழிலாளர்கள் சமூக ஜனநாயக வாதிகளுக்கு" என்ற தலைப்பில் அதன் முதல் பிரகடனத்தை வெளியிட்டது. அது யூகோஸ்லாவிய ஐக்கியத்துக்கு முன்னிலையில் நின்றது. "சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவினியர்கள் ஒரே மக்கள்" எனவும், அவர்கள் ஒரு தேசிய அரசினுள் இணைவது ஒரு முக்கியமான "அரசியல், பொருளாதார, காலாச்சார அவசியம்" என்ற நிலைப்பாட்டையும் வகித்தது.

அது சகல பிரிவினை அமைப்புக்களையும் ஒழிக்கும்படி வேண்டியது. தேசிய இனப் பிரச்சனை தனிச்சொத்தினை ஒழித்து, சோசலிச உற்பத்தியை ஒழுங்கு செய்வதனூடாக மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும் என கட்சி எச்சரிக்கை செய்தது. அது குடாநாட்டு மக்களின் கோரிக்கைகளை திருப்தி செய்யவும், ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அடிமைத் தளையை தூக்கி வீச செய்யும் ஏகமனதான பால்கன் சமஷ்டிக் குடியரசு சுலோகத்தினை மறு உத்தரவாதம் செய்தது.

இந்த முன்னோக்கின் அடிப்படையில் சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சி அதன் இறுதி காங்கிரசை 1919 ஏப்பிரலில் நடாத்தியதோடு அதைக் கலைத்துவிடவும் புதிய மாகாணத்தின் நாளைய சோசலிச அமைப்புக்களுடன் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியினுள் (CPY) ஐக்கியப்படவும், கம்யூனிஸ்ட் அகிலத்துடன் இணைத்துக் கொள்ளவும் வாக்களித்தது.

## யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட்டுக்கள்

"அகில யூகோஸ்லாவியா" அரசியல் அமைப்பாக உருவெடுத்தன் ஒரே போக்காக கம்யூனிஸ்ட்டுக்கள் மட்டுமே விளங்கினர். அதன் தோற்றத்தின் ஆரம்ப வருடங்களில் ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பரந்த ஆதரவினை வெற்றி கொண்டது. இது புதிய யூகோஸ்லாவிய அரசினை கண்டனம் செய்ததோடு, ஆளும் முதலாளி வர்க்கத்தினை நேச நாட்டு ஏகாதிபத்தியத்தின் ஒரு கைக்கூலியாக அம்பலப்படுத்தியது.

ஏனைய சகல கட்சிகளும்– சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவினியர்கள், முஸ்லீம்கள் ஒரேமாதிரியாக– ஆதரித்த தேசிய பேரினவாதத்தினை எதிர்த்து CPY மட்டுமே சகல இனக்குழுக்களுக்கும், தேசிய இனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்தது. இது ஒரு தொகை தேர்தல்களில் அதற்கு கிடைத்த வாக்குகள் மூலம் ருசுப்படுத்தப்பட்டது.

கட்சி 1920ல் குரோஷியன் தலைநகரான சாகிரேப்பிலும், சேர்பியன் தலைநகரான பெல்கிரேட்டிலும் மாநகரசபை தேர்தல்களில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. கண்டிப்பான இனக்குழு கோட்பாட்டினூடாக செய்யப்படாத அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் பங்குகொண்ட கட்சி யூகோஸ்லாவியா பூராவும் தொழிலாளர்களின் ஆதரவை வெற்றி கொண்டது. 58 இடங்களை வெற்றி கொண்டதன் மூலம் மூன்றாம் இடத்தைப் பெற்றது. ஆட்சியாளர்கள் CPY ஐ அரசியல் நிர்ணய சபையில் இருந்து தள்ளி வைத்ததை தொடர்ந்து கம்யூனிஸ்ட்டுக்கள் பெல்கிரேட்டினால் திணிக்கப்பட்ட அரசியல் அமைப்பை தொடர்ந்து எதிர்த்தனர்.

CPY வென்றெடுத்த பரந்த ஆதரவினைக் கண்டு கிலியடைந்த யூகோஸ்லாவிய முதலாளி வர்க்கம் ஒரு "அரசினை பாதுகாப்பது தொடர்பான சட்டத்தை" இயற்றியது. அது கம்யூனிசப் பிரச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. பொலிசார் கம்யூனிஸ்ட்டுக்களை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மண்டபங்களில் இருந்து விரட்டினர். கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டன. ஆட்சியாளர்கள் தலைவர்களை விசாரணை செய்து சிறையில் தள்ளியதோடு, சிலருக்கு மரண தண்டனையும் விதித்தனர்.

அக்டோபர் புரட்சியின் உடனடிப் பின்விளைவாக ஸ்தாபிதம் செய்யப்பட்ட சகல புதிய கம்யூனிஸ்ட் கட்சிகளையும் போலவே CPY அவசியமான அரசியல் சித்தாந்த தயாரிப்புக்களுக்கு உள்ளாகாமலும் சமூக ஜனநாயகத்துடனான கணக்கு வழக்குகளை முழுமனே தீர்த்துக்கொள்ளாமலும் புரட்சிகர வேலையினுள் தான் தள்ளப்பட்டுள்ளதை கண்டது. கம்யூனிஸ்ட் அகிலம் தனது இரண்டாவது காங்கிரசில் இளம் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கொண்ட பிரச்சனைகளை கவனத்தில் எடுத்தது. அவற்றின் ஒரு அதிகாரபூர்வமான தலைமையை உருவாக்கும் பூரணத்துவமாகாத பணிக்கும், கட்சியினுள் பாராளுமன்ற நப்பாசைகளை போதுமான விதத்தில் எதிர்கொள்ளத் தவறியமைக்கும் காரணம் கற்பித்தது. இவ் இரு போக்குகளும் கட்சியை முதலாளி வர்க்கம் கட்டவிழ்த்து விட்ட கொடூரமான அடக்குமுறைகளுக்கு பலவீனம் அடையச் செய்தது.

எவ்வாறெனினும் கம்யூனிஸ்ட் அகிலம் லெனினாலும் ட்ரொட்ஸ்கியினாலும் தலைமை தாங்கப்பட்ட வேளையில்– பொதுவில் கட்சியின் மூலோபாய நிலைப்பாட்டுடனும் அல்லது குறிப்பாக தேசிய இனப்பிரச்சனை தொடர்பாகவும் எந்தவிதமான வேறுபாட்டினையும் கொண்டிருந்ததாக காட்டும் அறிக்கைகள் எதுவுமே இல்லை. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு மாநாடுகள் பூராவும், பால்கன் சோசலிச சமஸ்டிக்கான போராட்டம் அதன் முன்னோக்காக இருந்து வந்தது.

## ஸ்ராலினிசமும் தேசிய பிரிவினை வாதமும்

"ட்ரொட்ஸ்கிசத்துக்கு" எதிராக வளர்ச்சி கண்ட போராட்டத்தினதும் ஸ்ராலின், புகாரினினதும் விரிவான "தனியொரு நாட்டில் சோசலிசம்" கோட்பாட்டு விளக்கங்களின் செல்வாக்கின் கீளும் 1924ல் நடத்தப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஐந்தாவது உலக மாநாட்டிலேயே, தொழிலாளர் புரட்சி கட்சி பரிந்து பேசுவதற்கு சமமான தேசிய பிரிவினைவாத அரசியல் முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்டது.

சோவியத் யூனியனில், ஸ்ராலின் அன்றய சமயத்தில் சினோவியேவ் தலைமையில் செயற்பட்ட அதிகாரத்துவப் பிரிவு அபிவிருத்தி செய்த "வலது மத்தியவாத கீழ் நோக்கிய சறுக்கல்" (Right-centrist Downsliding) என ட்ரொட்ஸ்கி மதிப்பிட்ட கொள்கையின் ஒரு முக்கிய அரங்காக யூகோஸ்லாவியா மாறியது.

www.padippakam.com

படிப்பகம்

இந்த பிரிவு CPY மீது விவசாயிகளையும் தேசியவாதத்தினையும் நோக்கிய ஒரு போக்கினை நெருக்கியதோடு இறுதியில் திணிக்கவும் செய்தது. இந்த போக்கு பல்கேரியாவிலும், ஜேர்மனியிலும் 1923 புரட்சி தோல்வி கண்ட தறுவாயில் இடம்பெற்ற ஒரு சந்தர்ப்பவாத நகர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாகும். உலகத் தொழிலாள வர்க்கத் தலைமையை வெற்றி கொள்வதிலும் சோசலிசப் புரட்சியை விஸ்தரிப்பதிலும் கம்யூனிஸ்ட் அகிலம் எதிர் கொண்ட கஸ்டங்களால் விரக்தியின் முறிவுக்கு உள்ளான ஸ்ராலின் தலைமையிலான கட்சியின் பிரிவினர் ஏனைய வர்க்க சக்திகளுடன் கூட்டுக்கு திரும்பினர்.

எழுச்சி கண்டுவந்த அதிகாரத்துவம் உலகப் புரட்சியின் தாமதத்தினால் சோவியத் அரசின் மீது திணிக்கப்பட்ட ஒரு "பின்வாங்கல்" என லெனினால் வர்ணிக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையை, (NEP) ஒரு "பரிசுத்தம்" ஆக பரிணாமம் செய்ய முயன்றது. இது புகாரின் "நாட்டுப் புறத்துக்கு திரும்பு" என்ற சுலோகத்தினை கடைப்பிடித்ததோடு செல்வந்த விவசாய தட்டினரின் மேல் சார்ந்து கொள்வதன் மூலம் தனது அதிகாரத்தை மேலும் மேலும் பலப்படுத்திக் கொள்ள முயன்றது. இக் கொள்கையை காக்கும் பொருட்டு அதிகாரத்துவம் நிரந்தரப் புரட்சிக்கு எதிராக ஒரு போராட்டத்தினை தொடுத்ததோடு "விவசாயிகளை குறைத்து மதிப்பிட்டமை" எனச் சொல்லப்படுவதற்காக கண்டனம் செய்தது.

ஸ்ராலினின் கீழான தலைமை இந்த புதிய தகவமைவினை கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளும் விஸ்தரித்தது. இந்த காலப்பகுதியிலேதான், சீன முதலாளித்துவ தேசியவாத கொமின்டாங் (Kuomintang) கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஒரு "அனுதாப கட்சி" யாக பிரகடனம் செய்யப்பட்டது. பிரிட்டனில், தொழிற்சங்க காங்கிரசின் அதிகாரத்துவத்துடன் சேர்ந்து ஆங்கிலோ–ருஷ்யன் கமிட்டி நிறுவப்பட்டது. அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி லா பொலற் (LA FOLLETTE) இயக்கத்துடன் தகவமைத்துக் கொண்டது. ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் கட்சியின் "தேசிய புரட்சிக்கான" ஆதரவு பாசிஸ்ட்டுக்களின் சுலோகத்துடன் போட்டியிட்டது.

## யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் உள் போராட்டம்

இந்த போக்கின் ஒரு பாகமாக ஸ்ராலினிச கட்சி முற்றிலும் மார்க்சிச விரோத பிரேரணையை– பால்கன் தேசிய வாதம் ஒரு விவசாயத் தளத்தில் தங்கியுள்ளதால் இயற்கையிலேயே புரட்சிகரமானது– முன் வைத்தது. இது CPY ஐ அதன் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத தகவமைவில் இருந்து தடம்புரளச் செய்து, யூகோஸ்லாவிய அரசினை அழித்தொழிக்கும் போராட்டத்தின் ஒரு கூட்டாக தேசிய, இனக்குழு பிரிவினைவாத இயக்கங்களை வரவேற்கும் ஒன்றாக விளங்கியது.

CPY ன் தலைவரான சிமா மார்கோவிக் ஒரு பால்கன் சமஷ்டிக்கான பாரம்பரிய சோசலிச கோரிக்கையை ஊர்ஜிதம் செய்ததோடு தேசிய பிரிவினை வாதத்தினை ஊக்குவிக்கும் அழைப்பினை எதிர்த்தார். "தொழிலாள வர்க்கத்தின் உள்ளே தேசிய போக்குகளின் ஊடாக மையத்தில் இருந்து விலகும் சக்திகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஒருவர் வர்க்க ஒருமைப்பாட்டினை பலப்படுத்தலாம் என எதிர்பார்க்க முடியாது" என அவர் பிரகடனம் செய்தார். (கம்யூனிசமும், யூகோஸ்லாவிய பிரச்சனையும்- Paul Shoup, New York: Columbia University Press, 1968, p 23)

மார்கோவிக் யூகோஸ்லாவிய அரசினை வியந்து பாராட்டியவர் அல்ல. அவர் இதன் ஸ்தாபிபத்தில் இருந்து இதனை எதிர்த்தார். மேலும் அவர் தேசிய இனக்குழு குறைபாடுகளுக்கு கண்மூடித்தனமான முறையில் முறை மீடு செய்வதன் மூலம் கட்சியின் வெற்றியை அடிப்படையாகக் கொள்ளத் தயங்கினார். இப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஒரே சாதனம் தென் ஸ்லாவிய தொழிலாள வர்க்கத்தினை போராட்டத்தில் ஐக்கியப் படுத்துவதே என வலியுறுத்தினார்.

ஆனால் அவர் முதலாளித்துவ கட்சிகளில் இருந்து சுயாதீனமான முறையில் தொழிலாள வர்க்கத்தினை அணி திரட்டுவதற்கான ஒரு உபாயக் கருவியாகவும் தேசிய பிரச்சனைக்கு ஒரு சோசலிச தீர்வினை முன்வைத்தும் அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய விவகாரத்தின் மீது ஒரு அரசியல் கிளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார்.

ஸ்ராலின், சினோவியேவ் பிரிவு மார்கோவிக்கையும் அவரின் ஆதரவாளர்களையும் ஒரு "வலது சாரி" பாராளுமன்றவாத போக்காக சாயம் பூசுவதன் மூலம் இவ் விவகாரத்தில் யூகோஸ்லாவிய கட்சியினுள் குழப்பத்தினை பரப்ப தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தது.

தம்மை "இடதுசாரிகள்" என கூறிக்கொண்டு முதலாளித்துவ தேசிய பிரிவினைவாத இயக்கங்களுடன் தகவமைத்துக் கொண்ட மார்க்கோவிக் இனது எதிரிகளின் கருத்துக்களை மொஸ்கோ தலைமை ஊக்குவித்தது.

மார்கோவிக்கும் CPYன் ஏனைய தலைவர்களும் சிறையிலிடப்பட்டும், மொஸ்கோவிலிருந்து அழுத்தம் கொணரப்பட்டு வந்த நிலையின் கீழ் முதலாளித்துவ தேசிய பிரிவினை வாதத்தினை ஆதரிக்கும் கொள்கை, மேல் நோக்கி வளர்ச்சி கண்டது.

## தேசிய வாதத்தின் உபாய சுரண்டல்

தேசியவாத உபாய சுரண்டல் மீதான இந்த விவாதம் முக்கியமான அரசியல் விவகாரங்களை உள்ளடக்கி கொண்டுள்ளது. இவை பால்கனிலும் வேறு இடங்களில் பாரதூரமான விளைவுகளை தொடர்ந்துள்ளன.

இந்த திருப்பம் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்துக்கு வெற்றி கொள்ளும் சிரமமான பணிக்கு ஒரு குறுக்கு வழியை காணும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. வேறுபட்ட வர்க்க சக்திகளை அடிப்படையாகக் கொண்ட ஏனைய "ரெடி மேட்" அமைப்புக்களின் புரட்சிகர சாத்தியங்கள் மிகைப்படுத்தப் பட்டுள்ளன. உலக முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கு அன்றி "நடுநிலை" படுத்துவதை இலக்காக கொண்ட கொள்கைகள், தொழிலாள வர்க்கத்தின் சோசலிச நனவில் அவை ஏற்படுத்தும் தாக்கத்தை ஒட்டி அலட்சியமான முறையில் அனுசரிக்கப் படுகின்றன.

இக் கொள்கையின் தாக்கங்கள் 5வது மாநாட்டில் அம்பலப் படுத்தப்பட்டது. இக் காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளே அதிகாரத்துவத்தின் ஒரு பிரதான கடமையாளனாக தோன்றிய டி.ஜே. மனுல்ஸ்கி யூகோஸ்லாவியாவின் மீதான பிரதான அறிக்கையை வழங்கினார். பிரிவினை வாதத்துக்கு உலகளாவிய ஆதரவினை வழங்குவது லெனினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பேரினவாதத்தின் ஒரு அடிப்படை கொள்கையாக விழங்கிற்று என அவர் வலியுறுத்தியதோடு, யூகோஸ்லாவிய கட்சி முதலாளித்துவ பிரிவினை வாத இயக்கங்களுடன் ஐக்கிய முன்னணிகளை தேடிக்கொள்ள வேண்டு எனக் கோரினார்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தனது வாதங்கள் லெனினின் 1913 படைப்புக்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்டதாக கூறிய மனுல்ஸ்கி CPY ஒரு தேசிய முதலாளித்துவ ஜனநாயக வேலைத் திட்டத்துக்கு சாதகமான விதத்தில் சோசலிச புரட்சி முன் னோக்கினை கைவிட வேண்டும் என நெறிப்படுத்தினார். அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலோபாய இலக்கில் இருந்து தேசிய வாத இயக்கங்கள் தொடர்பான கட்சியின் உபாய மனப்பாங்கினை பெற்ற CPY வேலைத்திட்டத்தின் பகுதிகளை குறிப்பாக தாக்கினார்.

அதன் "மத்திய ஐரோப்பா, பால்கன் மீதான பிரேரணையில் 5வது மாநாடு குறிப்பிட்டதாவது: "ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுய உரிமை- பிரிந்து செல்லும் அளவுக்கு" என்ற சுலோகம் இன்றைய முன்னோடி புரட்சிகர காலப் பகுதி யில் புதிதாகத் தோன்றிய அரசுகளை பொறுத்த மட்டில் பெரிதும் திட்டவட்டமான சுலோகத்தில் வெளிப்பாடாக வேண்டும். "போலந்து, றுமெனியா, செக்கோஸ்லாவக்கியா, யூகோஸ்லாவிய, கிறீசிடம் இருந்து ஒடுக்கப்படும் மக்கள் அரசியல் ரீதியில் பிரிந்து செல்லல்".

இது லெனின் நிலைப்பாட்டினை அடியோடு திரிப்பதாகும். லெனின், சுயநிர்ணயத்துக்கான உரிமையை தேசிய பிளவு களில் இருந்து தலையெடுக்கவும் பாட்டாளி வர்க்கத்தினை ஐக்கியப் படுத்துவதற்கான ஒரு கருவியாக ஆதரித்தார். அவர் ஒருபோதும் தேசிய பிரிவினை வாதத்தின் தூதுவ ராக இருந்ததில்லை.

குறிப்பாக யூகோஸ்லாவிய பிரச்சனை மீது கம்யூனிஸ்ட் அகிலம் இப்போது உத்தரவிட்டதாவது: "யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய இனங்க ளின் சுயநிர்ணய உரிமை என்ற பொதுச் சுலோகம் யூகோ ஸ்லாவியாவில் இருந்து குரோஷியா, சுலோவினியா, மசிடோ னியாவை தனிமைப்படுத்தி அவற்றைக் கொண்டு சுயாதீன மான குடியரசுகளை உருவாக்கும் வடிவில் வெளிப்பாட் டாக்க வேண்டும்". (Helmut Gruber, Soviet Russia Masters the Comintern [New York: Doubleday], P.134)

குறிப்பாக, இந்த விடயத்தில் ஸ்ராலின் கம்யூனிஸ்ட் அகிலத்தின் விவகாரங்களில் தனது முதலாவது தலையீட்டை மேற்கொண்டார்.

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் மார்க்கோவிக் 1925 மார்ச்சில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிறைவேற்றுக் குழுவின் ஒரு கூட்டத் தொடரில் கலந்து கொண்டார். அதில் அவர் தனது கொள்கையை பேணிய தோடு முதலாளித்துவ தேசியவாத கட்சிகளுடன் ஐக்கிய முன்னணிக்குச் செல்லும் திருப்பத்தின் பேரிலான தனது கருத்து வேறுபாட்டை தெரிவித்தார்.

ஸ்ராலின், மொஸ்கோ தலைமைக்கு பதிலளித்ததோடு மார்க்கோவிக்கின் "தவறு" "தேசிய பிரச்சனையை சாராம் சத்தில் ஒரு விவசாயப் பிரச்சனையாக கணிக்க அவர் மறுப்பதே" எனப் பிரகடனம் செய்தார். ஒழுங்கற்றதும் மலட்டுத்தனமானதுமான ஸ்ராலினின் வாதங்கள் ட்ரொட்ஸ் கிக்கும் இடது எதிர்ப்புக்கும் (Left Opposition) எதிரான அதிகாரத்துவத்தின் சொந்தப் போராட்டத்தில் இருந்தும் அனைத்துலக அரங்கிலான அதன் பாட்டாளி வர்க்கக் கொள்கையில் இருந்தும் திசைதிரும்புவது என்ற உண்மையில் இருந்தே நேரடியாக ஊற்றெடுத்தன.

"செமிக் (மார்க்கோவிக்) இந்த சூத்திரத்தினை எற்கத் தயங்குவது தேசிய இயக்கத்தின் இயற்கையான பலத்தினை குறைத்து மதிப்பிடுவதன் காரணமாகவும், தேசிய இயக்கத் தின் ஆழ்ந்த புகழ்பெற்றதும் ஆழ்ந்த புரட்சிகர பண்பினை குறைத்து மதிப்பிடுவதன் காரணமாகவே என, நான் நினை க்கிறேன். இந்த விளக்கமின்மையும் இந்த குறைத்து மதிப்பீடும் ஒரு பெரும் ஆபத்தை உள்ளடக்கிக் கொண்டு ள்ளது. நடைமுறையில் அவை உள்ளடக்கிக் கொண்டு ள்ள பலத்தை குறைத்து மதிப்பிடுவதை- உதாரணத் துக்கு தேசிய விமோசனத்துக்கான குரோஷியர்களின் இயக்கத்தில் உணர்த்துகிறது." (அதே நூல் பக்கம் 14)

பால்கன் பூராவும் இதே நிலைப்பாடுகளே வாதிக்கப்பட்டன. இந்த விதத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் ட்ரான்சில்வேனி யாவினுள் (ருமேனிய மாகாணம்) ஹங்கேரியர்களின் தேச பக்த நிலைப்பாடுகளுக்கு புரட்சிகரப் பண்பை கற்பித்த தோடு அந்த பிராந்தியத்தினையும் டொப்றுட்ஜா, பெசாரா பியா, புகோவினாவையும் ருமேனியாவில் இருந்து பிரிக்கத் தூண்டியது.

## கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவு

கம்யூனிஸ்ட் அகிலத்தினால் திணிக்கப்பட்டவழிமுறைகள் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பேரழிவான பெறு பேறுகளைக் கொணர்ந்தது.

கம்யூனிஸ்ட் அகிலம் புதிய தகவமைவினை நடைமுறை க்கு இட்ட இடங்களில் மசிடோனியா ஒன்று. 1924 ஏப்ரலில் இது பல்கேரிய அரசாங்கத்தின் ஆதரவினை பெற்று, ஒரு பயங்கரவாத பிரிவினை அமைப்பான அனைத்துலக மசிடோனிய புரட்சிகர அமைப்புடன் (IMRO) பேரம்பேசல்களில் ஈடுபட்டது. உடன்படிக்கை வரைவு மசிடோனியாவின் "விடுதலைக்கும் இணைப் புக்கும்" அழைப்பு விடுத்தது. இந்த உடன்படிக்கை அப்பிராந்தியத்தின் சகல கம்யூனிஸ்ட் கட்சிகளையும் மசிடோனியாவின் மீது அரசு உரிமை கோரும் பல்வேறு, பால்கன் அரசுகளதும் அற்ப பிராந்திய தகராறு சக்தியில் சிக்கவைக்க உதவியது.

வரலாற்று ஆசிரியரான போல் சூப் மசிடோனியன் பிரிவினை வாதிகளுடனான கம்யூனிஸ்ட் அகிலத்தின் கூட்டின் பெறு பேறுகளை வருணித்ததாவது: "இந்த உடன்படிக்கையின் பிரசுரத்துடன் குழப்பங்கள் தொடங்கின. மசிடோனியாவில் உள்ள கட்சிக்கு உதவுவதற்கு மாறாக IMRO உடனான கூட்டு அதிக அளவிலான கற்பனை செய்ய கூடிய தடுமாற் றங்களை உருவாக்கியது. இந்த சூழ்ச்சியின் ஒரு பாகமாக பல்கேரிய கம்யூனிஸ்ட்டுக்கள் 1924 மார்சிலும், யூலையிலும் பால்கன் கம்யூனிஸ்ட் பெடரேசனை, பிரேரணைகளை இயற்றச் செய்வதில் வெற்றி கண்டது. அவை அவர் களின் நலன்களுக்கு பெரிதும் சாதகமாக இருந்ததோடு மசிடோனியன் பிரச்சனையில் பல்கேரிய பாத்திரத்தினை இட்டு எந்த ஒரு விமர்சனத்தையும் தள்ளி வைத்தனர். அவமானத்துக்குள்ளான கிறீஸ் கம்யூனிஸ்ட் கட்சி முதலில் பால்கன் கம்யூனிஸ்ட் பெடரேசனை மார்ச் கூட்டத்தில் இயற்றப்பட்ட பிரேரணையை பிரசுரிக்க மறுத்துவிட்டது. யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி மசிடோனியா இணைப் புக்கும் சுயாட்சிக்கும் என பெடரேசன் பிரேரணையில் குறிப் பிடப்பட்ட கோரிக்கையை எதிர்த்தது. IMRO பிரகடனம் வெளியானதும் CPY திட்டத்தினை நிராகரித்ததோடு கட்சி அங்கத்தவர்கள், அதற்கு தமது ஆதரவினை வழங்கு வதை தடுத்தது. இக் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் CPY இன் ஒரு சிறப்பு தூதுக் குழுவை மொஸ்கோவுக்கு வரவழைத்ததாகவும் 1924 மேயில் IMRO நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை நெருக்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"மறுபுறத்தில்..... IMRO பல்கேரியன் அரசாங்கத்தின் நெருக்கு வாரத்தின் கீழ் ஏப்பிரல் உடன்படிக்கையை கைவிட்டது. அமைப்பினுள் ஆட்சிக்கான ஒரு கசப்பான போராட்டம் வெடித்தது. இதன் பெறுபேறாக எந்தவொரு விதத்திலும் உடன்படிக்கையுடன் சம்பந்தம் கொண்டிருந்தோர் கொலையின் மூலம் மரணத்தை சந்தித்தனர். (கம்யூனிசமும் யூகோஸ்லாவிய தேசிய பிரச்சனையும் பக்கம் 31-33)

## மொஸ்கோ ரடிக்கை அரவணைத்துக் கொண்டது.

பிரிவினை வாதத்துக்கான இந்தத் திருப்பத்தில் புகழ்பெற்ற சந்தர்ப்பம் குரோஷியன் தேசியவாதத்தினையும் குறிப்பாக அத்தருணத்தில் குரோஷியன் முதலாளி வர்க்கத்தின் முன்னணி கட்சியான ரடிக்கின் விவசாயிகள் கட்சியை நோக்கிய தகவமைவாகும்

ரடிக் மொஸ்கோவுக்கு 5வது காங்கிரசுக்கு தருவிக்கப்பட்டு விவசாயிகள் அகிலத்தின் ஒரு அங்கத்தவராக அமர்த்தப் பட்டார். ஸ்ராலின் தலைமை ரடிக்குடனான உடன்படிக் கையை ஒரு மாபெரும் வெற்றியாக கொண்டாடிய அதே வேளையில் ட்ரொட்ஸ்கி இதனை வெறுத்து ஒதுக்கினார். வரைவு வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் அவர் பின்னர் குறிப்பிட்டதுபோல் "குரோஷியன் பணக்கார விவசாயிகளின் வங்கித் தலைவரான ரடிக் அமைச்சரவைக்குச் செல்லும் வழியில் தனது தரிசன அட்டையை (Visiting Card) விவசாயிகள் அகிலத்திடம் விட்டுச் செல்வது அவசியம் எனக் கண்டார். ஓராண்டுக்கு சற்று பின்னர் ரடிக், மன்னர் அலெக்சாந்தரின் அரசாங்கத்தில் ஒரு அமைச்சரானார்.

இந்தச் சூழ்ச்சி CPYன் உள்ளே கணிசமான எதிர்ப்பினை தூண்டிவிட்டது. கட்சியின் ஒரு பகுதியினர், கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிலைப்பாட்டை கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டதோடு "சமூக-பொருளாதார வர்க்க நலன்களை இரண்டாம் இடத்துக்கு தள்ளிவிட்டு தேசிய பிரச்சனைக்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்கமுடியாது" என எச்சரித்தனர். இந்த கன்னையின் ஒரு தலைவரான சிவோட்டா மிலோஜ்கோவிக் (Zivota Milojkovic) பெல்கிரேட் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பிரபல்யமான புள்ளியாவர். அவர் இந்த கொள்கையை குரோஷியன் முதலாளி வர்க்கத்துடன் கலந்துறவாடுவது எனவும் மார்க்சிசத்தை காட்டிக் கொடுப்பது எனவும் கண்டனம் செய்ததோடு இன்னும் பலருடன் சேர்ந்து கட்சியில் இருந்தும் இராஜினாமா செய்தார்.

ரடிக் மொஸ்கோவுடனான அவரது உடன்படிக்கையை உதறித் தள்ளிவிட்டு பெல்கிரேட் ஆட்சியாளர்களுடன் இணைந்து கொண்டதன் பின்னரும் கூட கம்யூனிஸ்ட் அகிலம் குரோஷியன் விவசாயிகள் கட்சியுடன் கலந்துறவாடுவதற்காக தொடர்ந்து வக்காலத்து வாங்கியது. அக்காலத்தின் ஒரு CPY பத்திரத்தின்படி இந்த அனுபவம் "சோர்வு, செயலின்மை, நம்பிக்கையீனத்தினுள்" தள்ளியது.

1928ல் மொஸ்கோ மார்கோவிக் உட்பட- ஒரு தசாப்த காலத்தின் பின்னர் ஸ்ராலினின் சிறைமுகாங்களில் கொல்லப் பட இருந்தவர்- முழு யூகோஸ்லாவிய தலைமையையும் பதவி நீக்கம் செய்தது. இச் சமயத்தில் கிரெம்ளினால் முன்வைக்கப்பட்ட தேசிய கொள்கை "வெறி" கொண்ட மட்டத்தினை எட்டியது.

ஏற்கனவே பட்டியல் போட்டுக் காட்டப்பட்ட தேசிய வாத குழுக்களுக்கு மேலதிகமாக கோசாவாவில் இருந்த அல்பானியன் சிறுபான்மையினர் ஒரு தனி அரசினை அமைக்கும் படி உற்சாகப்படுத்தப் பட்டனர்.

மொஸ்கோவின் வழிகாட்டலின் கீழ் CPY உள்ளேயான குழப்பம் முசோலினியின் பாசிசத்தினால் ஈர்க்கப்பட்ட குரோஷியன் பயங்கரவாத இயக்கமான உஷ்டாசே யை (Ustashe) ஒரு முற்போக்கானதாக நோக்கும் அளவுக்கு சென்றது. CPY ன் வேலைகளில் பெரும்பகுதி குரோஷியன் பாசிஸ்டுகளுடன் ஒரு கூட்டினை தேடிக்கொள்வதாகியது.

போல் சுப், தேசிய பிரிவினை வாதத்தினை நோக்கிய இந்த போக்கினது முழுத் தாக்கத்தினையும் பற்றி அறிவு பூர்வமாக குறிப்பிடுகின்றார். "கோமின்ரேன் திரும்பத் திரும்ப புரட்சியில் கிஞ்சித்தும் அக்கறை கிடையாத கருத்து முரண்பட்ட தேசிய வாத குழுக்களுடன் கலந்துறவாடும் படி நெருக்கி வந்தது. இதன் தவிர்க்க முடியாத பெறுபேறாக தேசிய எதிர்ப்பின் முக்கியத்துவம் புரட்சிகர இலக்குகளுடனான அதன் சம்பந்தத்தின் பதங்களில் வரையறுக்கப்படாது தேசிய போக்கின் பதங்களில் புரட்சிகரக் குழுக்கள் என கணிக்கத் தள்ளப்பட்டது.

"கொமின்ரேனின் இந்த தப்புக் கணக்கு- இது மிகவும் அடிப்படையான ஒன்று- தேசியவாத இலக்குகளை ஒரு புரட்சி மட்டுமே திருப்தி செய்துவைக்கும் என்பதை அவற்றிற்கு புரிய வைப்பின் தேசியவாத இயக்கங்கள் கம்யூனிசத்தை ஏற்றுக்கொள்ளும் என்ற ஊகத்தினை அடிப்படையாக கொண்டுள்ளது". (அதே நூல், பக்கம் - 36)

யூகோஸ்லாவியாவில் மன்னர் ஆட்சியின் சர்வாதிகாரம் பிரகடனம் செய்யப்பட்ட 1929ம் ஆண்டு CPY உள்ளார்ந்த ரீதியில் அதன் பாட்டாளி வர்க்க, சோசலிச வேலைத் திட்டத்தின் குலைப்பு காரணமாக சிதறடிக்கப்பட்டது. அரசின் ஒடுக்கு முறையின் அழுத்தங்களின் கீழ் அது விரைவாக சரிந்து கொட்டியது.

1933ல் கிட்லர் ஆட்சிக்கு வந்ததோடு மொஸ்கோ ஸ்ராலினிச அதிகாரத்துவம்- முன்னய போக்கினை பற்றி எதுவிதமான விமர்சனமும் இல்லாமல்- சுயநிர்ணயம் பற்றி குறிப்பிடுவதை அடியோடு கைவிட்டதோடு, CPY மீது பெல்கிரேட் அரசாங்கத்திற்கும் யூகோஸ்லாவிய ஐக்கியத்துக் கும் ஆதரவு வழங்கும் அடிப்படையிலான ஒரு மக்கள் முன்னணி (Popular Front) கொள்கையை திணித்தது.

ஸ்ராலினிசம், முதலாளித்துவ தேசிய வாதத்துக்கு இசைந்து போவதை என்றுமே கைவிட்டது கிடையாது. மொஸ்கோ அதிகாரத்துவத்தின் உடனடியான வெளிநாட்டு கொள்கை நலன்களுக்கு, சேவகம் செய்யும் விதத்தில் அழுத்தம் கொடுப்பதை வெறுமனே மாற்றியது. ஒரு ஐக்கியப்பட்ட யூகோஸ்லாவியாவானது பால்கனில் ஜேர்மனியின் விஸ்தரிப்பினை சமப்படுத்துவதற்கான ஒரு அவசியமாக நோக்கப்பட்டது.

## தொழிலாளர் புரட்சி கட்சி ஸ்ராலினிசத்தை வரவேற்கிறது

யூகோஸ்லாவியா தொடர்பாக இன்று சுலோட்டரும் தொழிலாளர் புரட்சிக் கட்சியும் முன்வைக்கும் நிலைப் பாட்டுக்கும் 1920ல் ஸ்ராலினிசத்தின் செல்வாக்கின் கீழ் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் சீரளிவுக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஹோரேயும் அவரின் தாயார் பிராங்கா மகாசும் மொஸ்கோ அதிகாரத்துவத்தின் கட்டளைகளின் மீது யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கில் அறிமுகம் செய்யப்பட்ட திரிபினை பகிரங்கமாக வரவேற்றனர்.

1993 அக்டோபர் 9ம் திகதிய "வேர்க்கஸ் பிரசில்" ஹோரே ஐந்தாவது காங்கிரஸ் ஒரு சோசலிச சமஸ்டிக்கான போராட்டத்தில் இருந்து திசைமாறி, அதனிடத்தில் குரோஷிய, சுலோவினிய, மசிடோனிய தேசியப் பிரிவினை வாதங்களுக்கு வக்காலத்து வாங்குவதை புகழ்ந்துள்ளார். "கொமின்ரேன் இந்த நிலைப்பாட்டை 1935ல், ஸ்ராலினிச மக்கள் முன்னணி போக்குக்கு இசைந்து போவதன் மூலம் மட்டுமே மாறியது. தொடர்ந்து வந்த அபிவிருத்திகள் மூலப் பிரேரணை (ஐந்தாவது காங்கிரசில்) சரியானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது."

ஹோரே அவரின் தாயாரின் *The Destruction Of Yugoslavia* நூலில் உள்ள அவரின் அறிக்கையை எதிரொலிக்கிறார். இந்தப் பணியினை தொழிலாளர் புரட்சிக் கட்சி மேடைகளில் மாகாசுக்கு ஒரு பிரபல்யமான அந்தஸ்து வழங்கப்பட்டது. மார்க்ஸ் எழுதுவதாவது: "1919ன் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்ட CPY புதிய நாட்டின் பல்லினப் பண்புக்கு உணர்ச்சிகரமான ஒரு கொள்கைக்கு வருவதற்கு ஒரு கணிசமான காலம்– உண்மையில் 1919-28 வரையிலான முக்கிய வருடங்கள்–எடுத்தது. தேசியப் பிரச்சனையை அரசாங்கத்தினை உள்நாட்டு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்த்து வைக்கலாம். என்பது இக்காலத்தின் பெரும் பகுதியின் நிலைப்பாடாக விளங்கியது. ஆதலால் இதுதான் பெல்கிரேட்டின் இரும்புக் கரங்களின் ஆட்சிக்கு எதிரான சேர்பியர் அல்லாத மக்களதும் அத்தோடு யூகோஸ்லாவியாவை ஒரு செயற்கையான நிர்மாணமாகக் கண்ட கொமின்ரேனினதும் உக்கிரமான எதிர்புக்களுக்கு உள்ளாகி இருப்பதை கண்டது. CPY இதற்கு எதிராக தேசியப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் படியும், ஒரு சோசலிச பால்கன் சமஷ்டிக்கு ஆதரவு தரும்படியும் அழைப்பு விடுத்தது. கொமின்ரேனின் தொடர்ச்சியானதும் விழிப்பானதுமான நெருக்குவாரத்தின் கீழ் CPY பிரிந்து செல்வது உட்பட வேறுபட்ட தேசிய இனங்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க நேரிட்டது. இந்தப் போக்கு 1928ல் டிரெஸ்டனில் நாடுகடந்த நிலையில் நடைபெற்ற நான்காவது காங்கிரசில் பூரணமாகத் தெளிவாகியது." (பக்கம் 27)

யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியும் தேசியப் பிரச்சனையும் பற்றி இந்த அசட்டைத்தனமான வரலாற்று ஆய்வு ஒரு குட்டி முதலாளித்துவ குரோஷிய தேசியவாதியின் நோக்கினை வெளிக்காட்டுகிறது. மகாஸ் CPY அதனது ஆரம்ப வருடங்களில் அது போராடிய பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத நிலைப்பாட்டினைத் தூசிக்கின்றார். அவர் CPY போதுமான அளவு "உணர்ச்சி மயமானது" ஆக நெருங்கிய ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் தொடர்ச்சியானதும், விழிப்பானதுமான நெருக்குவாரத்துக்காக" ரடிக் தொடக்கம் IMRO, அத்தோடு உஷ்டாஷே வரையிலான மூலகங்களின் நோக்கங்களுக்கு பெருமை சேர்க்கிறார்.

அது அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட புரட்சிகர வேலைத்திட்டத்தினை அவமானம் செய்யும் பொருட்டு மகாஸ் CPYன் வரலாறு பற்றி பொய்யளக்கின்றார். கொமின்ரேன், ஸ்ராலினிச சீரழிவிற்கு உள்ளானதற்கு முந்தியகாலப் பகுதியான CPYன் அனைத்துலகவாதப் போக்கு– சேர்பியர் அல்லாத மக்களின் "உக்கிரமான எதிர்ப்புக்கு" உள்ளாவதற்கு மாறாக தேசிய ஒடுக்கு முறை மிகவும் உக்கிரம் கண்ட மசிடோனியா போன்ற பிராந்தியங்களில் பலத்த ஆதரவினை வெற்றி கொண்டது. கம்யூனிஸ்ட்டுகள் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தலும் இதனை நிரூபித்தது.

மகாஸ் CPY ஏதோ ஒரு விதத்தில் "பெல்கிரேட்டில் இரும்புக் கரங்களின் ஆட்சியை பேணிக் காத்ததாக மறைமுகமாகக் கூறுகின்றார். உண்மையில் அது சேர்பிய முதலாளி வர்க்கத்தினது பூரண ஆதரவை மட்டுமன்றி குரோசிய, சுலோவீனிய ஆளும் வர்க்கங்களதும் ஆதரவைக் கொண்டிருந்த பயங்கர ஆட்சியின் முக்கிய பலிக்கடாவாக விளங்கிற்று.

பால்கன் அரசியல் சம்பந்தமான சுலோட்டரின் இரண்டு முக்கிய கோட்பாட்டு உதவியாளர்களும் ஸ்ராலினால் அறிமுகம் செய்யப்பட்ட தேசியவாத அரசியலை பாராட்டுகின்றனர். மகாஸ் CPY ஒரு புரட்சிகர அனைத்துலகவாதக் கட்சியாக இருந்து, ஒரு ஸ்ராலினிச கேலிச் சித்திரமாக சீரழிந்து போவதைப் பூர்த்தி செய்ய இவ்வளவு நீண்ட காலம் –9 ஆண்டுகள்– எடுத்ததையிட்டு புலம்புகின்றார்.

மகாசும் ஹோரேயும் 1924க்கு முன்னைய காலப் பகுதியையும் 1934க்குப் பின்னைய காலப் பகுதியையும் எதிர்ப்பதும் சமப்படுத்துவதும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவது காலப் பகுதியில் CPY அக்டோபர் புரட்சியால் ஆகர்சிக்கப்பட்டது. முதலாளித்துவ அரசினை தூக்கிவீசி அதனை ஒரு சோசலிஸ்ட் சமஷ்டியினால் பதிலீடு செய்யும் ஒரு புரட்சிகர முன்னோக்கின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை யூகோஸ்லாவியா பூராவும் ஐக்கியப்படுத்தப் போராடியது. இரண்டாவது காலப் பகுதியில் இது மொஸ்கோவின் வெளிநாட்டுக் கொள்கையின் சேவையின் பேரில் யூகோஸ்லாவிய அரசினை ஆதரித்தது.

இவ்விரு முன்னோக்குகளையும்– ஒன்று புரட்சிகரமானது மற்றையது வர்க்க சகவாழ்வு– மிகவும் குறுகியதும் பிற்போக்கானதுமான குரோஷிய தேசிய நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே சமப்படுத்த முடியும்.

## கட்சியும் தேசிய இனங்களும்

ஜோசிப் புரோஸ் டிட்டோ (Josip Broz-Tito) தலைமையில் 1930களில் கட்சி மறுசீரமைக்கப்பட்டது. இந்த போக்கு சோவியத் அதிகாரத்துவம் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் பெருவாரியான அங்கத்தவர்களை ஒழித்துக் கட்டியதுடன் கைகோர்த்துச் சென்றது. இது சோவியத் ருஷ்யாவில் 1917 அக்டோபரின் முழு புரட்சிகர தலைமுறையையும் ஒழித்துக்கட்டியது.

CPY ன் மறுசீரமைப்பு தேசியப் பிரிவினை வாதத்தினைக் கட்சி அமைப்பினுள் உள்ளடக்கிக் கொண்டது. புதிய மக்கள் முன்னணிக் கொள்கையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு முதலாளி வர்க்கத்தின் உள்ளூர் பகுதிகளுடனான கூட்டினைப் பலப்படுத்துவதற்கான சாதகமான குரோஷியாவிலும் சுலோவீனியாவிலும் தேசிய கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.

யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பின் இந்த கூட்டு அணுகு முறையானது– இதற்கு முன்னைய தடையற்ற பிரிவினைக்கான ஆதரவைப் போன்று–ருஷ்யாவில் போல்ஷிவிக்குகள் அபிவருத்தி செய்த விதிமுறைகளை நிராகரிப்பதைப் பிரதிநிதித்துவம் செய்தது.

ட்ரொட்ஸ்கி தமது ருஷ்யப் புரட்சியின் வரலாறு (History of the Russian Revolution) என்று நூலில் இந்த அணுகுமுறையைக் குறித்துள்ளார். போல்ஷிவிக்குகள் சகல வடிவி



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

லான தேசிய ஒடுக்கு முறைக்கும் எதிராகப் போராடிய அதேவேளையில் அவர்கள் "எந்த ஒரு விதத்திலும் பிரிவினைப் பிரச்சாரத்தினை மேற்கொள்ளவில்லை" என அவர் சுட்டிக்காட்டினார். தேசிய இனங்களின் பிரச்சனை பற்றிய கட்சியின் மனப்பாங்கு தொழிலாளர் வர்க்கத்தினுள்ளான கட்சியின் போராட்ட அமைப்புத் தொடர்பாக இன்னொரு பக்கத்தினையும் கொண்டிருந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் எழுதியதாவது: "கட்சியின் கட்டுமானத்தின் உள்ளும் பொதுவில் தொழிலாளர் அமைப்புக்களின் உள்ளும் தொழிலாளரை ஒருவருக்கு எதிராக மற்றவரை நிறுத்தும் அல்லது அவர்களது ஐக்கியத்தைக் குலைக்கும் தேசிய வாதத்தின் ஒவ்வொரு கறைக்கும் எதிராக ஈவிரக்கமின்றி போர் தொடுக்கும் இறுக்கமான மையப்படுத்து வாதத்தினை போல்ஷிவிசம் வலியுறுத்தியது. தேசிய சிறுபான்மையினர் மீது கட்டாயக் குடியுரிமையை அல்லது ஒரு அரச மொழியைக் கூடத் திணிக்கும் முதலாளித்துவ அரசின் உரிமையை அடியோடு நிராகரிக்கும் அதே சமயம் போல்ஷிவிசம் வேறுபட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை சுயேட்சையான வர்க்க கட்டுப்பாட்டின் மூலம் முடிந்த மட்டும் நெருக்கமாக ஐக்கியப் படுத்துவதை புனிதப் பணியாகக் கொண்டுள்ளது. (Leon Trotsky, *History of the Russian Revolution*, London: Pluto Press, p.891 )

யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சிக்காக ஒரு சமஷ்ட்டி வடிவிலான அமைப்பை இயற்றிக் கொள்ளும் தீர்மானம் பால்கன் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக ஒரு பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தினையன்றி ஒரு முதலாளி வர்க்க கருத்துருப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

CPYன் இந்த ஸ்ராலினிச சீரழிவின் காலப்பகுதி ஒரு கவனமான ஆய்வினை வேண்டி நிற்கின்றது. 1920களிலும் 1930களிலும் தேசியப் பிரிவினை வாதத்தினை ஊக்குவிக்கும் ஸ்ராலினிஸ்ட்டுக்களின் நடவடிக்கைகள் யூகோஸ்லாவியத் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களின் மீது நிலையான தாக்கத்தைக் கொண்டிருந்தது. 1920களில் CPY க்கு அந்தளவுக்கு துன்பகரமான பெறு பேறுகளைக் கொண்டிருந்த இந்தக் கொள்கை மார்க்சின் புகழ்பெற்ற பழமொழி போல் இல்லாது போயினும், இன்னும் மோசமான துன்பகரமான விளைவுகளுடன் ஒரு கேலிக்கூத்து வடிவில் மீண்டும் இடம்பெற இருந்தது.

சுலோட்டர் இந்த காட்டிக் கொடுப்புக்களின் பேரழிவு மிக்க பெறுபேறுகளை அலட்சியம் செய்துள்ளார். பொஸ்னியாவிலான அவரின் ஆத்திரமூட்டும் தலையீட்டை நியாயப்படுத்தும் பொருட்டு, அவர் ஸ்ராலினின் தேசியவாத சந்தர்ப்பவாத உபாய ரீதியான சுரண்டலை ஆதரித்துள்ளார். அங்கனம் செய்வதன் மூலம் அவர் தான் ஸ்ராலினிசத்துக்கு எதிரான ட்ரொட்ஸ்கிசப் போராட்டத்துடனான எந்தவிதமான உறவுகளையும் துறந்துவிட்டு ஸ்ராலினிசத்தின் எதிர்ப் புரட்சிக் கொள்கைகளுக்கு இயைந்து போயுள்ளதை அம்பலமாக்கியுள்ளார்.

## யூகோஸ்லாவியாவின் குரோஷிய தேசிய வரலாறு

ஹோரே–சுலோட்டர் விபரிக்கும் யூகோஸ்லாவிய வரலாற்றில் குரோஷியன் முதலாளி வர்க்கத்தின் அகங்காரம் நிறைந்த தேசியவாத உந்துதல்கள் மட்டுமே முற்போக்குச் சக்தியை பிரதிநிதித்துவம் செய்கின்றது. யூகோஸ்லாவிய வரலாறு பற்றிய "வேர்க்கஸ் பிரஸ்" க்கான அவர்களின் எழுத்துக்கள் இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஒரு பாசிச குரோஷியன் அரசை நடாத்திய பவோலிக் (Pavolic) ஆட்சி இழைத்த அநியாயங்களுக்கான சாந்தமான மன்னிப்பைக் கொண்டுள்ளது.

இதன் குற்றங்கள் ஒரு மில்லியன் சேர்பியர்கள், யூதர்கள், கிப்சியர்களில் முக்கால் பங்கினரையும் அத்தோடு பாசிச விரோத குரோஷியர்களையும் ஒழித்துக் கட்டியதையும் உள்ளடக்குகின்றது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பழைய தேவாலயங்களுள் கூட்டமாகத் தள்ளப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர். உஷ்டாஷே தனது சொந்த கொலை முகாமை– ஐரோப்பாவில் பெரியவற்றில் ஒன்று– பொஸ்னிய எல்லையில் உள்ள ஜசனோவாக்கில் (Jasenovac) கொண்டிருந்தது.

உஷ்டாசேயின் தனித்துவம் நாசிகளின் உணர்வுகளைத் தூண்டும் அளவுக்கு அதன் கொலைகாரப் பணியில் போதுமான அளவுக்குப் பிரதியட்சமாகியது.

குரோஷியன் பாசிசத்துக்கான ஹோரேயின் பரிந்துரைகள் எந்தவிதத்திலும் புதுமையானவை அல்ல. ருட்ஜ்மன் தலைமையிலான இன்றைய சாகிரெப் ஆட்சியாளர்கள் பவோலிக் ஆட்சிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளதோடு உஷ்டாசேயின் அரசியலில் பெரும்பகுதியை புனருத்தாரணம் செய்துள்ளது.

50வருடப் பழைமை வாய்ந்த பாசிச சர்வாதிகாரத்தினை புனருத்தாரணம் செய்தமை குரோஷியன் சோவனிசத்தின் புத்துயிர்ப்பின் ஒரு சிறப்பு லட்சணமாகும். குரோஷியன் தேசிய வாதம் உண்மையில் நாசி ஆதரவுடனான குரோஷிய இராஜதானியின் கீழ் மலர்ச்சி கண்டது. இந்த ஆட்சி பொஸ்னியா– ஹேர்ஸ்கோவினாவை இணைப்பதன் மூலம் குரோஷியன் தேசியவாதிகளின் ஒரு முக்கிய வரலாற்று நோக்கத்தை அடைந்தது. இது கொலைகள் மூலம் இப்பிராந்தியத்தில் இருந்து தனது சேர்பிய மக்களை துடைத்துக்கட்ட முயன்றது.

இது "விசேட குற்றச்சாட்டை" ஒரு குறிக்கப்பட்ட "தேசிய இனத்தின்" மீது சுமத்துவது பற்றிய விடயமன்றி, 1940 களின் உஷ்டாசே ஆட்சியின் கொலைகாரக் கொள்கைகளில்– இன்று பொஸ்னியாவில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்படுவதைப் போன்று– தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் (WRP) ஊக்குவிக்கப்பட்டுவரும் தேசிய தனிச் சிறப்புரிமை வாதத்தின் நிஜக் கோலத்தை இனங்காண்பதாகும்.

உஷ்டாசேயின் குற்றங்களை குறைத்துக் காட்டுவதன் மூலம் ஹோரே–சுலோட்டர் டிட்டோவின் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான 1941-45 "பாட்டிசன்" (Partisan) போராட்டத்தினை யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த வேறுபட்ட இனக் குழு, தேசியக் குழுக்களால் நடாத்தப்பட்ட ஒருதொகை தனிப்பட்ட தேசியவாதப் போராட்டமாகக் காட்டுகின்றனர்.

எவ்வாறெனினும் "யூகோஸ்லாவியா தேசிய இனங்கள் யூகோஸ்லாவியாவின் கட்டுமானத்தினுள் அவற்றின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க முடியாதவையாய் இருந்தன" எனப்பிரகடனம் செய்வதன் மூலம் அவர்கள் இப் போராட்டத்தின் பெறுபேற்றையிட்டு புலம்புகின்றனர்.

இது 2ம் உலக யுத்தத்தின் போது யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற போராட்டத்தினைப் பற்றிய ஒரு வினோதமான



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பொய்மைப்படுத்தலாகும். டிட்டோ தலைமையின் பலம் தேசிய அல்லது இனக்குழு பின்னணியைப் பொருட்படுத் தாது யூகோஸ்லாவியாவின் சகல ஒடுக்கப்படும் மக்க ளையும் ஒரு பொதுப் போராட்டத்தில் ஐக்கியப்படுத்தும் அதன் முன்நோக்கில் இருந்து பெருக்கெடுத்தது. இந்தத் தலைமை ஹோரே, உருக்கொடுக்கும் தேசிய மாகாணவாத வகையாறாக்களை ஈவிரக்கமின்றி எதிர்த்து போரிடவேண்டி யிருந்தது. இந்த அடிப்படையில் யூகோஸ்லாவிய கம்யூ னிஸ்ட் கட்சி "பார்டிசன்" இயக்கத்தின் வடிவில் யூகோஸ் லாவியாவின் சகல பாகங்களில் இருந்தும் பரந்த ஆதரவை கவர்ந்தது.

## டிட்டோவும் ஸ்ராரிலினிசமும்

ஹோரேயும் சுலோட்டரும் பாட்டிசன் இயக்கத்தின் வெற் றியை அவமதிப்பதோடு டிட்டோவின் கீழ் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்ததை "ஸ்ராலினிசத்தின் உச்சக் கட்டமாக" குறிப்பிடுகிறனர்.

டிட்டோ தன்னை ஸ்ராலினின் மாதிரியாகக் கொள்ளவும் யூகோஸ்லாவியாவில் சோவியத்யூனியனில் இருந்து வந்த அதிகாரத்துவ அரச வடிவங்களை மீள சிருஷ்டிக்கவும் முயன்றார் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் அங்ங னம் செய்வதன் மூலம் அவர் தவிர்கமுடியாத விதத்தில் ஸ்ராலினுடனும், உலக ஏகாதிபத்தியத்துடன் மாஸ்கோ அதிகாரத்துவம் செய்து கொண்ட யுத்தத்தின் பின்னைய ஒழுங்குகளுடனும் மோதிக்கொள்ள நேரிட்டது.

1944 அக்டோபரில் சேர்ச்சில் யுத்தத்தின் பின்னைய ஐரோப்பா பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு ஸ்ராலினை மாஸ்கோவில் சந்தித்தார். சேர்ச்சில் இந்த எதிர் கொள்வைத் தனது வாழ்கை வரலாற்றில் பின்வருமாறு நினைவு கூர்கிறார்: "இத்தருணம் கருமத்துக்கு தகுந்ததாக விளங் கியது. ஆதலால் நான் சொன்னேன் "நாம் எமது விவகாரங் களை பால்கனில் தீர்த்துக் கொள்வோம். உங்களது படைகள் ருமேனியாவிலும் பல்கேரியாவிலும் உள்ளன. நாங் கள் அங்கு நலன்களையும், துாதரகங்களையும் ஏஜன்டு களையும் கொண்டுள்ளோம். நாம் சிறிய வழிகளில் குறுக்கு நோக்கங்களில் ஈடுபடாதிருப்போம். இதுவரை பிருத்தானி யாவையும் ருஷ்யாவையும் பொறுத்தமட்டில், நீங்கள் ருமேனியாவில் 90வீதம் மேலாதிக்கத்தையும், நாங்கள் கிறீசில் 90வீதம் மேலாதிக்கத்தையும், யூகோஸ்லாவியாவை பொறுத்த மட்டில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற விதத்திலும் கொண்டிருக்க இது எப்படி உதவும்?

சேர்சில் இந்தத் தரவுகளை ஒரு பேப்பர் துண்டில் எழுதி, மேசைக்கு குறுக்காக ஸ்ராலினிடம் தள்ளினார். அங்கு ஒரு சிறிய தயக்கம் காணப்பட்டது. பின்னர் அவர் தனது நீலப் பேனையை எடுத்து அதன்மேல் ஒரு பெரிய சரி போட்டு எங்களிடம் திருப்பி அனுப்பினார். இவை எல்லாம் தீர்ப்பதற்கு எடுக்கும் நேரத்தைக் காட்டிலும் குறைந்த நேரத்தில் தீர்க்கப்பட்டன.

யூகோஸ்லாவியா பற்றிய ஐம்பதுக்கு ஐம்பது ஏற்பாடுகள் ஆரம்பத்தில் ஒரு ஏகாதிபத்திய ஆதரவு நாடுகடந்த லண் டன் ஆட்சியின் மூன்று அங்கத்தவர்களையும் உள்ளடக் கிய ஒரு மக்கள் முன்னணி அரசாங்கத்தின் வடிவத்தை எடுத்தது. இந்த முதலாளித்துவ அரசியல் வாதிகளில் மிகவும் பிரபல்யமானவர் குரோஷியன் விவசாயிகள் கட்சியின் ஜவன் சுபாசிக் ஆவர்.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான பார்ட்டிசன்ஸ் சகல நிஜ அதிகாரத்தையும் கொண்டிருக்கும் என்பது தெளிவா னதும் முதலாளித்துவ பிரதிநிதிகள் இராஜினாமாச் செய்த தோடு, 1945 நவம்பரில் யூகோஸ்லாவிய மக்கள் சமஷ்டிக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது.

1947ன் நடுப்பகுதியில் கைத்தொழிலின் பெரும்பகுதியும் வர்த்தகமும், போக்குவரத்தும் தேசியமயமாக்கப்பட்டு அரச கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டன. இந்த ஆரம்ப வருடங்களின்போது டிட்டோ ஒரு பால்கன் சமஷ்டி மீது பல்கேரியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததோடு அருகேயுள்ள கிறீசில் ஒரு புரட்சிகர கிளர்சிக்கும் ஆதரவு வழங்கினார். யூகோஸ்லாவியா அமெரிக்க இராணுவப் படை களுடன் ஒரு ஆயுத மோதுதலுக்கு உள்ளானதோடு டிட்டோ தலைமை மொஸ்கோவின் ஸ்ராலின் அதிகாரத்து வத்துடன் ஒரு கசப்பானதும், பகிரங்கமானதுமான மோதுதலுக்குச் சென்றதது.

## நான்காம் அகிலமும் யூகோஸ்லாவியாவும்

இந்த அபிவிருத்திகள் ட்ரொட்ஸ்கிச இயக்கம் எடுத்த நிலைப்பாட்டினை தொழிலாளர் புரட்சி கட்சி இப்போது முன்வைத்துள்ள போக்குடன் ஒப்பிடும்போது வினோதமா னது. ஹோரேயின் தேசியவாதக் கருத்துக்களை முன்தள்ளு வதன் மூலம் சுலோட்டர், யூகோஸ்லாவியப் பிரச்சனை மீதான நான்காம் அகிலத்தின் வரலாற்றை தள்ளி வைக்கிறார்.

அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் மீதான ஸ்ராலி னிசத்தின் பிடியிலிருந்து உடைத்துக் கொள்ளும் சாத்தியத் தையும் அனைத்துலக சோசலிசத்துக்கான காரணத்தையும் இதனுள் கண்டதன் மூலம் நான்காம் அகிலம், யூகோஸ்லா வியப் புரட்சியின் முற்போக்கு உள்ளடக்கத்தை கவனத்தில் கொண்டது.

ஸ்ராலினிசம், ஏகாதிபத்தியம் இரண்டினதும் அச்சுறுத்தல் களுக்கு எதிராக அது யூகோஸ்லாவியப் புரட்சியைப் பேண ஒரு கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை வகித்தது. உலக சோசலிசப் புரட்சி முன்னோக்கின் அடிப்படையில் பால்கன் சோசலிஸ்ட் சமஸ்டிக்கான போராட்டம் ஊடாக இது விஸ்தரிக்கப்படுமிடத்து மட்டுமே இந்தப் புரட்சி உயிர் வாழும் என்பதை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் புரிந்து கொண்டிருந்தனர்.

யூகோஸ்லாவிய புரட்சி ஒரு நிச முட்டுக்கட்டை நிலைக்கு முகங்கொடுத்தது. டிட்டோ, இரண்டாம் உலக யுத்தத்தை தொடர்ந்து பால்கனை அடித்துச் சென்ற புரட்சிகரக் கிளர்ச்சிகளின் அலையின் மீது ஆட்சிக்கு வந்தார். அமெரி க்க, பிருத்தானிய ஆளும் வர்க்கங்கள் இந்த இயக்கத்தை தகர்க்கத் திடசங்கற்பம் பூண்டிருந்ததோடு இங்ஙனம் செய் வதன் மூலம் மொஸ்கோ ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் ஒத்துழைப்பையும் அனுபவித்தனர்.

1948 யூலையில் யூகோஸ்லாவியாவுக்கு எதிரான மொஸ்கோ ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் அச்சுறுத்தல்கள் அதிகரித் துவரும் நிலையில் நான்காம் அகிலம் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களுக்கு ஒரு கடிதம் வரைந்தது. இது யூகோஸ்லாவியப் புரட்சி ஒரு ஆபத்தான நிலையில் இருப்பதாயும், மூன்று சாத்தியமான பாதைகளின் தெரிவுக்கு முகங்கொடுத்துள்ளதாயும் பிரகடனம் செய்தது. முதல் இரண்டும்– ஒன்றில் மொஸ்கோ அதிகாரத்துவத் துக்கு அல்லது ஏகாதிபத்தியத்துக்கு இயைந்துபோவது –புரட்சியைக் கருச்சிதைய வைத்து ஒரு காட்டிக்கொடுப் பினைப் பிரதிநிதித்துவம் செய்யும். மூன்றாவது, உலக சோசலிச புரட்சிப் பாதை. புரட்சியை விஸ்தரிக்க போராடுவ



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தன் அடிப்படையிலும் யூகோஸ்லாவியத் தலைவிதியை சார்ந்து நிற்கச் செய்வது.

இம் முன்நோக்கு ஸ்ராலின்–டிட்டோ பிளவின் ஒரு மாதத்தின் பின்னர் சோசலிசத் தொழிலாளர் கட்சி (அமெரிக்க) யினால் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுகளில் சுருக்கமாகக் கூறப்பட்டது.

"யூகோஸ்லாவியா முகங்கொடுக்கும் பதிலீடுகள் ஒன்றில் டிட்டோ ஆட்சி வாஷிங்டனுக்கு அல்லது கிரெம்ளினுக்கு இயைந்து போகவேண்டும் அல்லது ஒரு சுயாதீனமான பாதையை கண்டுபிடிக்கவேண்டும். இந்தப் பாதை, ஒரு சுயாதீனமான தொழிலாளர் விவசாயிகளின் சோசலிஸ்ட் யூகோஸ்லாவியாவாக மட்டுமே இருக்க முடியும், இது பால்கன் தேசியங்களின் ஒரு சோசலிச சமஷ்டிக்கான முதல் படியாகும். இதனை அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துக்கு அழைப்பு விடுப்பதன் மூலமும், ஐக்கியப்படுவதன் மூலமும் மட்டுமே அடையமுடியும். அதாவது, யூகோஸ்லாவியா, ஐரோப்பிய சோசலிசப் புரட்சியின் பதாகையினுள் அணிதிரள்வதன் மூலமும், கிரெம்ளின் ஆளும் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியம் இரண்டிற்கும் எதிரான அதன் போராட்டத்துக்கு உதவுமாறு அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கு அழைப்புவிடுப்பதன் மூலமும் மட்டுமே இதனை அடைய முடியும்.

"எவ்வாறெனினும் புரட்சியாளர்களுக்கு ஒரு மாபெரும் சந்தர்ப்பத்தினை வரவேற்பதற்கு இது மட்டும் போதாது. இது அடுத்த படிக்கான ஆரம்பம் மட்டுமே. எல்லாவற்றுக்கும் மேலாக உலகத் தொழிலாள வர்க்கப் போராளிகளின் நனவுமட்டத்தை உயர்த்துவதற்கான அவர்களது சந்தர்ப்பத்தைக் *கைப்பற்றுவதும்* தலையிடுவதுமாகும்.......

"வெகுஜனங்கள் எவ்வளவு தூரம் இடது புறம் செல்வார்கள் என்பதற்கான முன்நிபந்தனை, அவர்களின் சொந்த விருப்புக்களிலோ அல்லது அவர்களின் தன்னியல்பான இயக்கத்திலோ அல்லாது நனவான புரட்சிகர முன்னணிப்படையினர்– உலக ட்ரொட்ஸ்கிஸ்டுகள்– எந்த அளவுக்குத் திறம்படவும் சக்திவாய்ந்த முறையிலும் ஒரு பலமான காரணியாக நிலமையில் தலையிடுவார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது." (Fourth International August 1948- பக்கம் 174-76)

நான்காம் அகிலம் மட்டுமே யூகோஸ்லாவியப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இலாயக்கான ஒரு வேலைத்திட்டத்தினையும் முன்னோக்கினையும் முன்வைத்துள்ளது. அதன் கொள்கைப் பிடிப்பான அணுகுமுறை, பாட்டாளி வர்க்கத் தலைமையின் அனைத்துலக நெருக்கடியை சோசலிஸ்ட் அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் தீர்த்து வைக்கும் போராட்டத்தில் வேரூன்றியுள்ளது.

இந்த முன்னோக்கு சம்பந்தமான சுலோட்டரின் இன்றய நிலைப்பாடு என்ன? இதுவும் குரோஷியன், பொஸ்னியன், சுலோவீனிய, மசிடோனியன் பிரிவினைவாதம் ஆற்றவுள்ள தீர்க்கமான பாத்திரத்தினை கணக்கெடுக்கத் தவறிவிட்ட ஒரு நம்பிக்கை அற்ற திட்டமா? சிலவேளை அவர் ட்ரொட்ஸ்கிச இயக்கம் படகைத் தவற விட்டுவிட்டது என நம்புகிறாரா? ஒரு அனைத்துலக முன்னோக்கின் அடிப்படையில் யூகோஸ்லாவியப் புரட்சியை அபிவிருத்தி செய்யப் போராடுவதற்குப் பதிலாக அது அந்த நாட்டின் அரசியலமைப்புக் குடியரசுகளினால் பிரிவினைக்கான கோரிக்கையை விருத்தி செய்திருக்க வேண்டுமா?

சுலோட்டரிடம் இருந்து எந்தவொரு பதிலையும் எதிர்பார்க்க வேண்டாம். அத்தகைய "குறுங்குழு" பிரச்சனைகளுக்கு அவரிடம் நேரம் கிடையாது. அவர் இப்போது எதைத்தான் நம்பினாலும் நான்காம் அகிலம் டிட்டோ அதிகாரத்துவத்தை கண்டனம் செய்தது அற்ப தேசிய வாதத்தினை ஊக்குவிக்கத் தவறியமைக்காக அன்றி ஸ்ராலினிசத்தின் அடிப்படை தேசிய வாத நோக்கிலிருந்தும்– ஒரு தனிமைப்பட்ட சுயபூர்த்தி தேசிய சோசலிச ஆட்சியின் நின்று பிடிக்கும் தன்மைபற்றிய சித்தாந்த வலியுறுத்தல் இருந்தும், உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினை நிராகரிப்பதிலிருந்தும்– உடைத்துக் கொள்ளத் தவறியமைக்காகும்.

## யூகோஸ்லாவிய தேசிய வாதத்தின் இக்கட்டான நிலை

மொஸ்கோவின் நெருக்குவாரத்தின் கீழ் டிட்டோ ஒரு பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக்கான அழைப்பைக் கைவிட்டார். இதற்குப் பதிலாக டிட்டோ தலைமை ஒரு புதிய யூகோஸ்லாவிய தேசிய வாதத்தைப் பயிரிட முயன்றது. அத்தகைய ஒரு மாற்றுத் தேசிய வாதம், புரட்சியை பால்கன் முழுவதிலும், அனைத்துலகிலும் விஸ்தரிக்கும் போராட்டத்தின் ஒரு பாகமாக யூகோஸ்லாவியாவின் இனக்குழு, தேசியக்குழுக்களை ஐக்கியப்படுத்தும், ஒரு இடைமருவு பாத்திரத்தினை வகித்திருக்க முடியுமென கற்பனை. ஆனால் யூகோஸ்லாவியாவின் சுயாதீனமான சோசலிச அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஒரு முன்னோக்கு நின்றுபிடிக்கத்தக்கதல்ல.

முதலாவதாக, நாட்டின் பின்தங்கிய பொருளாதாரம் சோசலிச உற்பத்தியின் அபிவிருத்திக்கான போதிய அடிப்படையை வழங்க முடியாது. இரண்டாவதாக, பால்கனில் இன்றுள்ள தேசியஅரச முறையை முழுமையாக அங்கீகரிப்பது– இது வேறுபட்ட மக்களை இன்னமும் அரச எல்லைகளால் பிரித்து வைத்துள்ளது– யூகோஸ்லாவியாவின் உள்ளே தேசியப் பிரச்சனைக்கு ஒரு நிசமான தீர்வைக் காண்பதை முடியாததாக்கியுள்ளது.

பொருளாதாரப் பிரச்சனைகளின் வளர்ச்சிக்கும் மொஸ்கோவின் நேரடி அச்சுறுத்தலுக்கும் முகங்கொடுத்த நிலையில் டிட்டோ ஏகாதிபத்தியத்துக்கு இயைந்து போனார். 1950ல் நான்காம் அகிலம், கொறியன் யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவளித்தமைக்காக யூகோஸ்லாவிய ஆட்சியை பகிரங்கமாக கண்டனம் செய்தது. திரும்பவும் நான்காம் அகிலம், இந்த ஆட்சி 1956ன் ஹங்கேரியப் புரட்சிக்கு எதிராக மொஸ்கோ ஸ்ராலினிச அதிகாரத்துவத்துடன் துரோகம் நிறைந்த கூட்டுக்குச் சென்றமைக்காக கண்டனம் செய்தது.

ஹோரே–சுலோட்டர் இந்தப் பாட்டாளி வர்க்க அனைத்துலக வாத விமர்சனம் உதவாக்கரையான– காலாவதியான முடிவுக்கு வந்தோடு இன்று திரும்பவும் முதலாளித்துவ தேசியவாத நிலைப்பாட்டில் நின்று, டிட்டோவை வலதுசாரிக் கோணத்திலிருந்து எதிர்க்கின்றனர்.

"பாட்டிசன்" இயக்கத்தின் வெற்றி, மொஸ்கோவுடனான அதன் எதிர்கொள்வில் டிட்டோ ஆட்சிக்கு கிடைத்த மாபெரும் ஆதரவு என்பவற்றின் மீதான யுத்தத்தின் பின்னய சுபீட்சங்களுக்கு இடையேயும் ஒரு போதுமான பொருளாதார அடிப்படை இல்லாமல் யூகோஸ்லாவிய தேசிய வாதம் பிராந்திய, இனக்குழு பதட்டம் தோன்றியதும் சிதறுண்டு போயிற்று.

இந்தப் பதட்ட நிலையில் இருந்து தலையெடுக்கும் முயற்சியாக நாடு ஆறு குடியரசுகளாக– பொஸ்னியா,



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஹேர்ஸ்கோவினா, குரோஷியா, மசிடோனியா, மொன்டிநிக்குரோ, சேர்பியா, சுலோவீனியாவும் அல்பானியன் பெரும்பான்மையினரைக் கொண்ட சேர்பியா, கொசொவோவுடன் இணைந்தும் ஹங்கேரியன், றுமெனியன், குரோஷியன், சுலொவாக் உக்கிரேனியன் மக்களைக் கொண்ட ஒரு கலப்புமான இரண்டு சுயாட்சி மாகாணங்களும்- பிரிக்கப்பட்டது.

மிக முக்கியமாக இரண்டு தேசியக் குழுக்களுக்கிடையே -சேர்பியர்கள், குரோஷியர்கள்- ஒரு சமநிலையை உண்டு பண்ணும் முயற்சியாக பொஸ்னியா தனியொரு குடியரசாக நிறுவப்பட்டதேயன்றி பிராந்திய முஸ்லீம் மக்களின் தரப்பிலான சுதந்திரத்துக்கான எந்தவொரு உந்துதலின் பெறு பேறாக அல்ல.

டிட்டோ முரண்பட்டுக் கொண்ட தேசிய பிராந்திய சக்திகளைச் சமநிலைப்படுத்தும் ஒரு பொனபாட்டிச புள்ளியாக இந்த அமைப்புக்கு தலைமை தாங்கினார். மாற்று வழியாக தனது ஆட்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு அவற்றில் ஒன்றை அல்லது மற்றயதை ஊக்குவித்தார் அல்லது ஒடுக்கினார். அதேசமயத்தில் அவர் தலைமை தாங்கிய சமஷ்டி அரசு இந்த இனக்குழுக்களில் ஒவ்வொன்றுக்கும் நெருங்கிய உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தமும் அட்டூழியங்களும் திரும்ப இடம்பெறாவண்ணம் ஒரு அளவிலான பாதுகாப்பை வழங்க உதவிற்று.

## பிராந்திய வாதத்தின் வளர்ச்சி

இருந்த போதிலும் தீர்க்கப்படாத தேசியப் பிரச்சனைகளும், பொருளாதாரப் பின்னடைவும் மையத்திலிருந்து பிரியும் பொருளாதாரப் போக்குகளுக்கு இடமளித்ததோடு, இறுதியில் இதனை அதிகாரத்துவத்தினால் கட்டுப்படுத்தவும் முடியாமல் போயிற்று.

"பன்முகப்படுத்தப்பட்ட சோசலிசம்", "தொழிலாளர் சுய முகாமைத்துவம்" என்ற சுலோகங்களின் கீழ் இரண்டாம் உலகயுத்தத்தின் பின் திணிக்கப்பட்ட தேசிய மயமாக்கங்கள், அரச விதிமுறைகளின் அடிப்படையில் முதலாளித்துவத்துக்கான திருப்பம் ஆரம்பமாகியது. உள்ளூர் நிறுவனங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் அதிகாரத்துவத்தின் நடவடிக்கை சந்தைக் கொள்கைகளுக்கு மாறிச் செல்வதைப் பிரதிநிதித்துவம் செய்தது. இது யூகோஸ்லாவியா அதிகரித்த முறையில் உலக முதலாளித்துவ சந்தையில் இணைந்து கொள்வதுடன் சேர்ந்து கொண்டது. 1960 களில் பெல்கிரேட் "கட்" (GATT) டின் ஒரு பூரண உறுப்பினராக அனுமதிக்கப்பட்டது.

டிட்டோவின் யூகோஸ்லாவியாவில் இனக்குழு தேசியவாதத்தின் புத்துயிர்ப்புக்கு அத்திவாரமாக பொருளாதார நலன்கள் விளங்கின. கைத்தொழில் தேசிய மயமாக்கத்தின் மூலமாகச் சாத்தியமாக்கப்பட்ட துரித வளர்ச்சி பொருளாதார ரீதியில் பெரிதும் வளர்ச்சி கண்ட குரோஷிய சுலோவீனிய குடியரசுகளுக்கும், பெரிதும் வறிய மசிடோனியா போன்றவற்றுக்கும் இடையேயான இடைவெளியை அதிகரிக்க மட்டுமே உதவின. உதாரணமாக மசிடோனியாவில் தலா வருமானம் 1947ல் யூகோஸ்லாவிய சராசரிகளைக் காட்டிலும் 31 சதவீதம் குறைவாக- 36 வீதத்துக்கு 1963ல் வீழ்ச்சி கண்டது. இதே காலப்பகுதியில் சுலோவீனியாவில் தலா வருமானம் 62 வீதத்தில் இருந்து சராசரியைப் பார்க்கிலும் இருமடங்கு அதிகரித்தது.

செல்வம்படைத் குடியரசுகளினுள்ளே மாகாண தேசியவாதம் பெரும் உக்கிரமாகத் தலையெடுத்தது. இது அதனது சமூக அடிப்படையை கட்சித் தலைவர்கள், நிறுவன முகாமையாளர்கள், புத்திஜீவிகளினிடையே கொண்டிருந்தது. இது குடியரசுகளின் கைத்தொழில்களின் மூலம் சிருஸ்ட்டிக்கப்பட்ட செல்வம் பெரிதும் வறிய பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு உதவி வழங்கப் பயன்படுத்துவதன் மீதான வெறுப்பில் பெரிதும் வேரூன்றியிருந்தது.

மேலும் பொருளாதாரத் திட்டமிடலின் பரவலாக்கம் உள்ளூர் நிறுவனங்களதும் பல்வேறுபட்ட குடியரசுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் கரங்களில் பெரும் அதிகாரத்தை வழங்கியது.

தனிச்சிறப்புரிமை வாதமும் வரையறையற்ற பொருளாதார அதிகாரக் கொள்கைகளும் பெருமளவில் பேராதிக்கம் செலுத்தின. இதனால் ஒவ்வொரு குடியரசும் அயல் பிராந்தியங்களுக்கு இடையேயான எதுவிதமான இணைப்புமில்லாமல் தமது கைத்தொழில்கள், சேவைகள், சந்தைகளை அபிவிருத்தி செய்யவே முயன்றன.

## பகுத்தறிவற்ற போட்டி

குடியரசுகளுக்கிடையேயும் உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கிடையேயும் மிகவும் உக்கிரமான வடிவிலான போட்டி வளர்ச்சி கண்டது. 1961ல் சுலோவீனியா யூகோஸ்லாவிய தேசிய விமானச் சேவைக்குப் போட்டியாக தனது சொந்த விமானச் சேவையை ஏற்படுத்தியது. குரோஷியா Pan American விமானச் சேவையுடன் கூட்டாக இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபடத் தொடங்கிய பொழுது இந்தக் கொடுக்கல் வாங்கலின் எதிரிகள் வேறுபட்ட ஸ்கன்டினேவியன் நாடுகள் தனியொரு (SAS) விமானச் சேவையை நடத்துவதற்கு உதவ முடியுமென சுட்டிக்காட்டின. இருந்தபோதிலும் இந்த திட்டம் 1963ல் அங்கீகரிக்கப்பட்டது.

ஒவ்வொரு குடியரசும்- மாநகரசபைகளும் கூட தன்னாட்சி பொருளாதார அலகுகளாக அபிவிருத்தியில் ஈடுபட முயன்றதைத் தொடர்ந்து முழு அமைப்பும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாக மாறின. ஒவ்வொரு குடியரசும் அதனது சொந்த மத்திய வங்கியைக் கொண்டிருந்ததோடு, சகல வங்கித்துறை நடவடிக்கைகளும் குடியரசு மட்டத்திலேயே அமுல் செய்யப்பட்டன. ஒவ்வொன்றும் சிறிய அளவிலான ஒருங்கிணைப்பும் இல்லாமல் தத்தமக்கென தனித்துவமான அபிவிருத்தி, வரி, விலைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தன.

குரோஷியன் கட்சித் தலைவர்களில் ஒருவரான விளாடிமீர் பகாரிக் பொருளாதார நலன்களால் உந்தப்பட்ட அற்பத்தனமான தேசிய வாதத்தினதும் சோவனிசத்தினதும் பெருக்கத்தினைப் பற்றி நம்பிக்கையிழந்து எழுதியதாவது: "இங்கு ஏனையவற்றுக்கு இடையேயும் முதலீட்டுக்கான அயோக்கியத்தனமான தேசியவாதம் கலந்த குரோதங்கள் காணப்படுகின்றன; அங்கு பொதுவான பொருளாதார அபிவிருத்தியைப் பெரிதும் கஸ்டமானதாக்கும் ஒன்றை, குறுகிய நிர்வாகப் பிராந்தியங்களுள் அடைத்து மூடும் போக்கு காணப்படுகிறது. நிலமைகளை திரித்து வழங்குவதும் 'எமது தேசிய இனம்' எப்படி "சூறையாடப்பட்டுள்ளது" எப்படி "ஒவ்வொருவரும் அதிகம் பெற்றுக் கொண்டு எம்மைக் காட்டிலும் சிறப்பாக அனுபவிக்கிறார்கள்" என்பதை நிரூபிக்க பிழையான தரவுகளைப் பாவிக்கும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன." (SHOUP, பக்கம் 24)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

கட்சியினுள் பொருளாதார "சீர்திருத்தம்" மீது பிளவுகள் தோன்றியது. அதாவது, பெரிதும் வளம் மிக்க குடியரசு களில்– சுலோவீனியா, குரோஷியா– முதலாளித்துவ சந்தைக் கொள்கைகளை, இக் கொள்கைகளை வெகு வேகமாக அமுல் செய்யும்படி கோரித் திணிக்கப்பட்டது.

## குரோஷிய தேசியவாதத்தின் மீழ் எழுச்சி

1960களின் நடுப்பகுதியில் குரோஷியாவில் புத்திஜீவிகள், முகாமையாளர்கள், ஸ்ராலினிச அதிகாரத்துவத்தினை அடிப் படையாகக் கொண்டதும், கத்தோலிக்க திருச்சபையால் ஊக்குவிக்கப்பட்டதுமான ஒரு பரந்த தேசிய பிரிவினை வாத இயக்கம் தோன்றியது. இது மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது. இது, 1971ல் பெல்கிரேட்டில் இருந்து நிஜமான பிளவுக்கும், சுதந்திரத்துக்கும் குரோஷியன் கட்சிக்கு அழைப்பு விடுத்தது.

இந்த எதிர்பார்ப்புக்கள் பெல்கிராட் அதிகாரத்துவத்தின் மேலாதிக்கமான நடவடிக்கைக்கு எதிரான பொதுஜன உணர்வுகளை, குறைந்தது அரை குறையாகவேனும் வெளிப்படுத்தின என்பதில் சந்தேகம் கிடையாது. "குரோ ஷியா முதலாவது" (CROATIO FIRST) என்ற இயக்கத்தின் வேலைத் திட்டம் எவ்வாறெனினும் ஒரு முதலாளித்துவ வேலைத்திட்டமாகவும் கலாச்சார தேசிய வாதத்தினதும் பொருளாதார தனிச்சிறப்புரிமை வாதத்தின தும் மீது ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இது ஜேர்மனியிலும் வேறு இடங்களிலும் இருந்து வந்த பழைய நாடுகடந்த உஷ்டாசே அமைப்புக்களுடன் பரந்த அளவிலான தொடர்பினைக் கொண்டிருந்தது.

ஹோரே இந்த இயக்கத்தினை பாராட்டுகின்றார். குரோஷியன் ஸ்ராலினிசத் தலைவர்கள் போராட்டத்தினால், பிரிவினை உள்நாட்டு யுத்தம் வரை கொண்டு செல்லத்தவறியதற்காக மட்டுமே வருத்தம் தெரிவிக்கின்றனர். அந்தக் காலப் பகுதியில் குரோஷியன் தலைவர்களின் முக்கிய கோரிக்கை களில் ஒன்றாக பொஸ்னியா–ஹேர்ஸ்கோவினாவின் பிரிவி னையையும் மேற்குப் பகுதியை குரோஷியாவுடன் இணைப் பதும் விளங்கியது என்பதை அவர் தனது வாசகர்களுக்கு கூறக் கஸ்டப்படவில்லை. அவர்கள் அவ்வாறே குரோஷி யன்கள் வாழும் வொஜ்வோடினா பிராந்தியங்களை இணைக்கவும் முயன்றனர்.

சரியாகச் சொன்னால் சேர்பியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவினையின் அச்சுறுத்தலே சுலோட்டராலும் ஹோரேயாலும் பொஸ்னியன் சுயநிர்ணயத்தினை கொலைகாரத்தனமான முறையில் மீறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இது "சுயநிர் ணய உரிமை" க்கான அவர்களின் ஆதரவு–பொஸ்னியா விடயத்திலும் கூட– முற்றிலும் சார்பு ரீதியானது எனக் காட்ட மட்டுமே சேவை செய்கின்றது.

குரோஷியாவில் இந்த இயக்கம் நசுக்கப்பட்டு கட்சியினுள் இருந்த தேசியவாத மூலகங்கள் வெளியேற்றப்பட்ட நிலை யிலும் டிட்டோ அதிகாரத்துவம் அதனது பல பொருளா தாரக் கோரிக்கைகளுக்கு இணங்கியது. டிட்டோ வின் மரணம் இடம்பெற்ற 1980 வரையிலான ஒரு தசாப்தகாலம் யூகோஸ்லாவியப் பொருளாதாரச் சீர்குலைவின் துரிதகாலப் பகுதியாக விளங்கியது. 1974ல் வரையப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம் குடியரசுகள் பொருளாதாரத் தன்னா திக்கம் கொண்டவை என திட்டவட்டமாக பிரகடனம் செய்ததோடு, குடியரசுகளையும் சுயாதிக்க மாகாணங்களை யும் சுயாதீன அபிவிருத்திக்கு ஊக்குவித்தது.

குடியரசுகளுக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான மூலதன உழைப்பு பரிமாற்றங்கள் குடியரசுகளுக்கு இடை யேயானவற்றைக் காட்டிலும் பரிமாணத்தில் பெரியதாய் விளங்கின. 1980களில் மிகவும் பின்தங்கிய குடியரசுக ளுக்கு உதவியளிக்க செல்வமான குடியரசுகளின் மேல் விதிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிகளை விட தனிப்பட்ட குடியரசுகளுக்கு இடையே மூலதனப் பாய்ச்சல் இல்லை என்றே கூறலாம். குடியரசுகளுக்கு இடையேயான முதலீடு களின் பெறுமதி யூகோஸ்லாவியாவின் முழுமையான அனைத்து மூலதன முதலீட்டின் ஒரு வீதத்திற்கும் அதிகமானது அல்ல.

ஓரளவுக்கு இக் கொள்கைகளின் பகுத்தறிவு அற்ற தன்மையானது 1970 களில் டிட்டோ ஆட்சி மேற்கத்தைய நிதிமூலதனத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட பிரமாண்ட மான கடன்களால் மூடி மறைக்கப்பட்டது. லத்தீன் அமெரிக்காவைப்போல் யூகோஸ்லாவியா, மீள் சைக்கிள் சுற்றோட்ட பீட்ரோ டொலர்களைப் (Recycled Petrodollars) பெற்றுக் கொள்வதில் ஒன்றாகியது. 1980ல் டிட்டோ மரணமானதும் யூகோஸ்லாவியா சுமார் 20 பில்லியன் டொலர் கடன் பளுவினால் நசுக்கப்பட்டது.

1980களின் நடுப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டு நாணையக் கையிருப்பில் 44 சதவீதம் வெளிநாட்டுக் கடன் சேவைக் கென்றே சென்றது. தொடர்ச்சியான சர்வதேச நாணய நிதிய த்தின் சிக்கன வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு விலைவாசி உயர்வினாலும், அதிகரிக்கும் வேலையின்மை யாலும் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்கள் நாசமாக்கப்பட்டன. 1986ன் கடைப்பகுதியில் பணவீக்க வீதம் 100 சத வீதத்தை எட்டியதோடு, 1.2 மில்லியன் யூகோஸ்லாவிய தொழிலாளர்கள் வேலையற்றோர் வரிசையில் சேர்ந்தனர்.

தொழிலாள வர்க்கம் ஒரு தொகை பரந்த வேலை நிறுத் தங்கள் மூலமும், எந்தவொரு தொழிலாளரின் சுயாதீனமான போராட்டத்தையும் தடை செய்யும் அதிகாரத்துவத்தின் சட்டங்களை மீறுவதன் மூலமும் பதிலளித்தது. 1986ல் 851 வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றன. 1988ல் 2000 வெளிநடப்புக்கள் இடம்பெற்றன. தொழிலாள வர்க்கத்தின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் பெருக்கத்திற்கு பதில டியாக ஒவ்வொரு குடியரசுகளையும் சேர்ந்த ஆளும் ஸ்ராலினிச அதிகாரிகள் பொதுஜனங்களின் கொதிப்பை திசை திருப்புவதற்கான வழியாக அதிகரித்த விதத்தில் தேசிய சோவினிசத்தின் பக்கம் திரும்பினர்.

யூகோஸ்லாவிய வரலாறு பற்றிய எந்தவொரு ஆழமான ஆய்வும் இன்றய காலப்பகுதியின் தேசிய வாதத்தின் வெடிப்பு பழமை வாய்ந்த குரோஷிய, சுலோவீனிய, முஸ்லீம் அல்லது மசிடோனியன் சுயநிர்ணயத்துக்கான போட்டியின் தவிர்க்க முடியாத வெளிப்பாடாக அன்றி நான்கு தசாப்தங் களுக்கு மேலாக டிட்டோவினாலும் அவரது வாரிசுகளாலும் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் திட்வட்டமான வெளிப்பாடு என்பதைக் காட்டுகின்றது.

## சுயநிர்ணயமும் 'சட்டரீதியான எல்லைகளும்'

பொஸ்னியாவின் சுயநிர்ணயம் பற்றிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் கருத்துப்பாடு முற்றிலும் ஜனநாயக விரோதமான தும் முதலாளித்துவப் பண்பு கொண்டதுமாகும் எனக்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கூறவேண்டும். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சஞ்சிகையான "த இன்டர்நாஷனலில்" வெளியான ஹோரே- சுலோட்டர் கட்டுரை கூறுவதாவது; "முன்னய யூகோஸ்லாவிய குடியரசுகளுக்கும் மாகாணங்களுக்குமான சுயநிர்ணய உரிமையை அவற்றின் இன்றய சட்டரீதியான எல்லைகளுக்குள்ளே மட்டுமே அங்கீகரிக்க முடியும்...... சேர்பிய, குரோஷிய பெரும்பான்மைப் பிராந்தியமான பொஸ்னியாவுக்கு அல்லது குரோஷிய கரஜிவோ பிராந்தியம் போன்ற சிறிய பிராந்திய அலகுகளுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க முயற்சிப்பது இனக்குழு ஆதரவு வழங்க இட்டுச் செல்கின்றது.

சோசலிஸ்ட்டுக்களைப் பொறுத்த மட்டில், சுயநிர்ணயம் என்பது தேசிய சிறுபான்மையினரை ஒரு குறிக்கப்பட்ட அரசின் எல்லைக்குள் அடங்கிக் கிடக்க நெருக்கும் அரச பலாத்காரத்தின் பயன்பாட்டுக்கு எதிரான எதிர்ப்பேயன்றி வேறெதனையும் கருதவில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், இது முன்வைக்கப்பட்ட சமயத்தில் இதுவே இதன் அத்தியாவசியமான ஜனநாயக உள்ளடக்கமாக இருந்ததோடு இன்றும் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

சரியாக இதையே தொழிலாளர் புரட்சிக் கட்சி நிராகரிக்கிறது. ஹோரே-சுலோட்டர் தமக்கு பொஸ்னியா குரோஷியா அல்லது உண்மையில் சேர்பியாவினுள் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளையிட்டு அக்கறை கிடையாது என பகிரங்கமாகப் பிரகடனம் செய்கின்றனர். பொஸ்னியாவில் சேர்பியர்கள் படுகொலை செய்யப்படுவதை இவர்கள் "உள்ளூர் இராணுவத்தின்" "சிறிய அளவிலான அட்டூளியங்கள்" எனத் தள்ளுபடி செய்கின்றனர்.

இந்தக் குடியரசுகளுக்கிடையே நிர்மாணிக்கப்பட்ட சட்டரீதியான எல்லைகள் யூகோஸ்லாவியா ஒரு ஒன்றிணைக்கப்பட்ட சமஷ்டியாக இருந்த நிலமையின் கீழ் வரையப்பட்டவை. சுலோவீனியா, குரோஷியா சுதந்திரப் பிரகடனத்துடனும் பெருமளவிலான சிறுபான்மையினர் தாம் திடீர் என அன்னியமான அரசுகளில் வாழ நேரிட்டுள்ளதைக் கண்டனர்.

பொதுவில் பிரிவினை வாதமும் சிறப்பாக சேர்பிய, குரோஷிய சோவினிசமும் கட்டவிழ்க்கப்பட்டதுதான் தாம தம் பழைய குடியரசு எல்லைகள் தொடர்ச்சியான பிரதிபலன்களை உள்ளடக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படவில்லை. இந்த எல்லைகளை பிரிவினையின் அடிப்படையிலான "சுயநிர்ணய" கருத்துப்பாட்டுடன் ஒருமைப்படுத்த முடியும் என்ற கருத்து சிரிப்புக்கிடமானது.

கோசோவா மாகாணத்திலும் புதிதாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட மசிடோனியாவிலும் உள்ள அல்பேனிய மக்களின் நிலை என்ன? இருவரும் பிரிவினைக்கும், "சுயநிர்ணயத்துக்கும்" விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் புரட்சி கட்சி கொசோவா யூகோஸ்லாவியாவின் தனியொரு நிர்வாக அலகாக அங்கீகரிக்கப்பட்டது என்ற அடிப்படையில் சுயநிர்ணயத்துக்கு ஆதரவும் "ஒடுக்குவோன்" சேர்பியாவுக்கு எதிர்ப்பும், "சட்டரீதியான எல்லைகளை" மீறுவது "இனக்குழு பிரிவினை" யையும், "சட்டரீதியான எல்லைகளை" மீறுவதையும், "ஒடுக்கப்பட்ட" மசிடோனியாவின் "சுயநிர்ணயத்துக்கான" உரிமை மீது ஆக்கிரமிப்பதையும் இது பிரதிநிதித்துவம் செய்யும் என்ற அடிப்படையில் இதனை மேற்கு மசிடோனியாவுக்கு நிராகரிக்குமா?

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் நிலைப்பாடு தெரியவில்லை. இது முன்னய யூகோஸ்லாவியாவின் ஏனைய பாகங்களில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தியையிட்டேனும்- குறைந்த பட்சம் உலகின் ஏனைய பகுதியினருக்காகவேனும்- தனது பொஸ்னியன் கொள்கையின் தாக்கங்களைக் கணக்கில் எடுக்கத்தன்னும் அக்கறை கொள்ளவில்லை. இந்த விவகாரங்களின் மீது உள்நாட்டு யுத்தம் வெடிப்பின் இதன் பெறுபேறாக உருவாகும் மனிதப் படுகொலைகளால் எல்லைகளின் சட்ட ரீதியான தன்மைபற்றிய சிறப்பு வேறுபாடு இல்லாது போகும்.

பால்கன் பிரச்சனையின் அம்சமே- பல்வேறு பட்ட தேசிய இனங்கள் ஒரே சிறிய பிராந்தியத்தினை பங்கிட்டுக் கொண்டுள்ளமை- பால்கன் சோசலிஸ்ட் சமஸ்ட்டிக்கான கோரிக்கையை வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பிரச்சனையாக்கியுள்ளன. எவ்வாறெனினும் ஹோரே-சுலோட்டர் இந்தக் கோரிக்கையை என்னதான் "மானசீகமான" தாக கொள்ளினும் பிராந்தியத்தினுள் தொடர்ச்சியான இரத்தக் களரியில் இருந்து தலையெடுப்பதற்கான மார்க்கமாக இது உள்ளது.

## 'தேசிய ஜனநாயகப் புரட்சி" 1989-1991

ஹோரேயும் சுலோட்டரும் யூகோஸ்லாவியாவின் நவீன வரலாற்றை, நாட்டைக் கலைத்து விடுவதை நோக்கிய ஒரு முற்போக்குப் பயணமாக முன்வைக்கின்றனர். இந்தப் போக்கு "1989-91 புரட்சியில்" உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் "இதன் தேட்டங்கள் மிலோசேவிக்கின் எதிர் புரட்சியினால் பெருமளவு அழிக்கப்படாது இருந்திருக்குமாயின் இது முதலாளித்துவ ஜனநாயகத்தை நவீனமயமாக்குவதன் கீழ் ஒரு கூட்டையோ அல்லது சுதந்திர தேசிய அரசுகளின் பொதுநலவாயத்தையோ சிருஷ்டித்து இருக்கும்" என அவர்கள் குறிப்பிடுகின்றனர். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இவர்கள் இந்தப் போக்கினை ஒரு "தேசிய ஜனநாயகப் புரட்சி" என குறிப்பிடுகின்றனர்.

யூகோஸ்லாவிய சம்பவங்கள் பற்றிய இந்தப் பிற்போக்கு தேசியவாத விவரணங்களின் உள்ளே சோசலிசப் புரட்சியை அடியோடு நிராகரிக்கும் உலக வரலாற்றுக் கண்ணோட்டம் அடங்கியுள்ளது. இது வெறுமனே அட்டிலா ஹோரே கேம்பிரிட்ச் பல்கலைக் கழகத்திலான தமது ஆய்வுகளினூடாக அபிவிருத்தி செய்து கொண்ட ஒரு கருத்துப்பாடல்ல. இது ஸ்ராலினிசத்தின் வீழ்ச்சியை சோசலிச முன்னோக்கின் தோல்வியின் நிரூபணமாக நோக்கிய ஸ்ராலினிஸ்டுக்கள், திரிபு வாதிகள், குட்டி முதலாளித்துவ தீவிர வாதிகளின் முழு அனைத்துலக தட்டினரதும் கண்ணோட்டமாகும்.

ஹோரே தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பத்திரிகையில் யூகோஸ்லாவிய தேசிய இனப் பிரச்சனையுடன் நேரடியாகத் தொடர்புபடாத எந்த ஒரு பிரச்சனை பற்றியும் இன்னமும் கருத்து வெளிவிடவில்லை. திட்டவட்டமாகச் சொன்னால் இது அவரின் அரசியல் அக்கறைக்குரிய விடயங்களின் கூட்டு மொத்தமாகும்.

எவ்வாறெனினும் சுலோட்டர் நான்காம் அகிலத்தை மறுநிர்மாணம் செய்வதில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக் கொள்கிறார். அவர் ஒரு ட்ரொட்ஸ்கிஸ்டாக வேஷம் போடத் தொடர்ந்து முயற்சிக்கின்றார். இருப்பினும் யூகோஸ்லாவியா பற்றிய இந்த ஆய்வு உலக முன்னோக்கு சம்பந்தமான எத்தகைய தாக்கங்களையும் கொண்டுள்ளது என்பதை கூறுவதற்கு அவர் ஒருபோதும் அக்கறை காட்டவில்லை. இப்போது ஹோரே இதனை அவருக்காகச் செய்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

யூகோஸ்லாவியச் சம்பவங்கள் "தேசிய ஜனநாயகப் புரட்சி" கருச்சிதைவு செய்யப்படுவதையும் "நவீன மயமான முதலாளித்துவங்களால்" ஆளப்படும் ஒரு சுதந்திர அரசுகள் குழுவின் நிர்மாணத்தையும் பிரதிநிதித்துவம் செய்யுமானால் பால்கன் குடாநாட்டில் மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் முதலாளித்துவம் ஒரு முற்போக்குப் பாத்திரத்தினை இன்னமும் வகிக்க வேண்டியுள்ளது என்பது துலாம்பரமாகின்றது.

எவ்வாறிருப்பினும் "1989-91 புரட்சி" பால்கனுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. இது ஒரு பொது வலதுசாரிப் போக்கின் ஒரு பாகமாக இருந்ததோடு கிழக்கு ஐரோப்பா பூராவும் ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியையும் முதலாளித்துவ ஆட்சிகளின் எழுச்சியையும் கண்டதோடு சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் உச்சக் கட்டத்தை அடைந்தது.

இந்த நிகழ்வுகள் பற்றி ஹோரே சுலோட்டரினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் இன்றைய பரிணாமத்தைப் புரிந்து கொள்வதற்கு திறவுகோலாகும். இந் நாடுகளில் முதலாளித்துவத்தைப் புனருத்தாரணம் செய்தமை நீண்டு வந்த ஸ்ராலினிச எதிர்ப்புரட்சியின் உச்சக் கட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதாக அல்லாமல் ஒரு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை யதார்த்தமாக்குவதாக உள்ளது என இவர்கள் பிரகடனம் செய்கின்றனர்.

## சுலோட்டரின் ருஷ்ய நிலைப்பாடு

இந்த முன்னோக்கின் அடிப்படையில் சோவியத் யூனியனின் சிதைவும் பால்டிக் பிராந்தியத்தில் இருந்து காக்கசஸ் வரை சுதந்திர முதலாளித்துவ புனருத்தாரண ஆட்சிகளின் தோற்றமும் 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் கருச்சிதையப்பட்ட "தேசிய ஜனநாயகப் பணியினை" யதார்த்தமாக்குவதாவே நோக்கப்பட வேண்டும்.

"1981-91 புரட்சி" பற்றிய ஹோரேயின் ஆய்வுகளை ஏற்றுக் கொள்வதற்கு ஒருவர் போல்ஷிவிக் புரட்சி ஒரு இராட்சத வரலாற்றுத் தப்பு எனவும் அதை வழிநடத்திய கோட்பாடான ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி பிழையானதாகும் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

முன்னைய சோவியத் யூனியன் பற்றிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் நிலைப்பாட்டை நிச்சயப்படுத்திக் கொள்ள யூகோஸ்லாவியாவின் உள்நாட்டு யுத்தம் பற்றிய அதன் நிலைப்பாட்டை மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம் சுலோட்டரின் "வேர்க்கஸ் இன்டர்நாஷனல்" உடன் இணைந்து கொண்ட "சோசலிஸ்ட் வேர்க்கஸ் யூனியனின்" கருத்துக்களை ஆய்வு செய்வதே.

இந்த அமைப்பு சோவியத் பாட்டாளி வர்க்கம் ஒரு சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் போராட இலாயக்கற்றது என வாதிடுவதன் மூலம் தனிச்சிறப்புப் பெற்றது. அத்தோடு சோவியத் யூனியனின் வீழ்ச்சியைச் சூழவுள்ள காலப்பகுதியில் அரசின் பண்பு, சொத்துறவுகளின் தன்மை அல்லது தொழிலாள வர்க்கத்தின் சமூக அந்தஸ்த்தில் எந்தவிதமான அடிப்படை மாற்றமும் இருந்தது கிடையாது என வலியுறுத்துகின்றது.

1993ன் இலையுதிர் காலத்தில் குசெவ் (Gusev) அனைத் துலகக் குழுவின் ஒரு சோவியத் ஆதரவாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தமது கருத்துக்களை பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஒருவர் வெகுஜனக் கிளர்ச்சிகளுக்காக பந்தயம் பிடிப்பது அர்த்தமற்றதும் உதவாக்கரையானதும் என்பதில் இருந்தே ஆரம்பிக்கின்றோம். நிஜப் பிரச்சனை இருப்பது தொழிலாள வர்க்கத்துக்கு புரட்சிகரத் தலைமை இல்லாததனுள் அல்ல. தொழிலாளர்கள் இப்போது பெருமளவுக்கு எமது பிரச்சாரங்களை இன்னமும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லாததால் அது வெறுமனே காலத்தையும் சக்தியையும் வீணாக்குவதாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு நெருக்கடி என்ற விதத்தில் அந்த அளவுக்கு ஒரு "புரட்சிகரத் தலைமை நெருக்கடி" இல்லை. தரப்பட்டுள்ள நெருக்கடியானது அதிகாரத்துவத்தின் சர்வாதிகார காலப் பகுதியின் போது தொழிலாள வர்க்கத்தினை அணுவளவுக்குச் சிதறடித்ததன் மூலம் ஒரு வர்க்கம் என்ற முறையில் அதனை அழித்ததன் மூலமும் தொடர்ந்து வர்க்க நனவை நாசமாக்கியதனதும் தவிர்க்க முடியாத பெறுபேறாகும்".

குசேவ் என்ன சொல்கிறார் என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள். தொழிலாள வர்க்கம் "அழிக்கப்பட்டுவிட்டது" "அணு அளவுக்குச் சிதறடிக்கப்பட்டுவிட்டது" சோசலிசக் கொள்கைகளுக்கு கவனம் செலுத்த அதற்கு "நிலமை இல்லை" இவை பழக்கப்பட்டவை போல் ஒலிக்கின்றது? ஹோரே–சுலோட்டர் யூகோஸ்லாவியாவைப் பொறுத்த மட்டில் கிட்டத்தட்ட ஒற்றுமையான முன்னோக்கினை முன்வைக்கின்றார். பொஸ்னியாவினுள் "தொழிலாள வர்க்கம் எஞ்சியில்லை எனலாம்" யூகோஸ்லாவியாவின் தொழிலாளர்கள் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுப்பது அவநம்பிக்கைக் கிடமான "மானசீகமானதும்" "நிஜப் போராட்டத்துடன்" எது வித உறவும் இல்லாததாகும்.

தொழிலாள வர்க்கம் அழிக்கப்பட்டு தொடர்ந்தும் ஒரு புறநிலையான வர்க்கமாக இல்லாது போகின் அப்போது சமூக மாற்றத்துக்கான பயணத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் ஒரு கட்சி ஏனைய வர்க்க சக்திகளுக்கும் ஏனைய வேலைத்திடங்களுக்கும் திரும்பியாக வேண்டும் என்பது தெளிவு. யூகோஸ்லாவியாவில் இது இனக் குழு அடிப்படையிலான ஆட்சிகளுக்கும் இராணுவத் தலைமீட்டுக்குமான ஆதரவைக் குறிப்பின் முன்னைய சோவியத் யூனியனுள்ளும் அது அவ்வாறில்லையா?

ஏகாதிபத்திய வாதிகள் தேசிய வாத மோதுதல்களை சுரண்டிக் கொள்ளவும் முன்னைய சோவியத் யூனியனில் முதலாளித்துவப் புனருத்தாரணத்தினை மேலும் முன்னெடுக்க இராணுவத் தலைமீடுகள் நடத்துவதையும் நோக்கி தவிர்க்க முடியாவண்ணம் முன்செல்வர். யூகோஸ்லாவியாவில் போன்று சுலோட்டரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி இந்த எதிர்ப்புரட்சி முயற்சிகளை மேலும் முன்னெடுக்கும் பொருட்டு ஐ. நா வுடனும் நேட்டோவுடனும் அமெரிக்க, பிருத்தானிய ஏகாதிபத்தியங்களுடனும் சேர்ந்து அது தொழிற்படுவதைக் காணமுடியுமென ஒருவர் தீர்க்க தரிசனமாகக் கூறிவைக்க முடியும்.

ஹோரே, கம்யூனிச விரோதக் கூச்சல் எழுப்பியவாறு பழைய யூகோஸ்லாவியாவினுள் முதலாளித்துவத்தினதும் தேசிய வாதத்தினதும் விடுதலைப் பாத்திரத்தை பிரகடனம் செய்த வண்ணம் தனது ஆய்வினை நிறைவு செய்கிறார். "றிப்பப்ளிக்கன் அரசாங்கங்களை 'முதலாளித்துவப் புனருத்தாருணம்' எனக் கண்டனம் செய்வது அர்த்தமற்றது எனக் கண்டனம் செய்யும் ஹோரே இங்ஙனம் எழுதுகின்றார்: "1950களில் இருந்து ஆளும் யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் கட்சி அதிகரித்தவிதத்தில் பொருளாதாரத்தில் அரச கட்டுப்பாட்டைக் கைவிட்டதோடு 'சந்தை சோசலிசம்' முறையை அபிவிருத்தி செய்தது...... இதனை சேர்பியன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஆளுமைக்குட்பட்ட யூகோஸ்லாவிய அரசினால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் உறுதியான மீட்சிக்கான ஒரு அபிவிருத்தியாகக் கொள்ளாமல், அவர்கள் இதனை ஒரு 'உருக்குலைந்த தொழிலாளர் அரசின்....' பாதகமான வெடிப்பாகக் காண்கின்றனர். இந்த தோழர்களின் மாறா நிலைவாத, காலாவதியான கோட்பாட்டு நோக்குகள் அவர்களை யூகோஸ்லாவியாவின் தேசிய விடுதலைக்கான சக்திகளிடமிருந்து பழைய ஸ்ராலினிச அமைப்பை நோக்கி இட்டுச் செல்கிறது.

இந்த அசிங்கங்களைப் பிரசுரிப்பதன் மூலம் சுலோட்டர், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அரசியல், அடிமுதல் தலை வரை முதலாளித்துவ மயமானது என்பதை நிரூபித்துள்ளார். அது மார்க்சிசத்திலிருந்து அவரின் "உறுதியான விடுதலை" யையும் ஒரு பாட்டாளி வர்க்கக் கொள்கையை தாம் அடிப்படையாகக் கொண்டவர் என்ற நடிப்பின் உச்சக்கட்டத்தையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

பால்கன் நெருக்கடிக்கான ஒரு தொழிலாள வர்க்கத் தீர்வின் சாத்தியத்தினை நிராகரித்து விட்டு தொழிலாளர் புரட்சி கட்சியின் முழு முன்னோக்கும் சேர்பியர்களுக்கு எதிரான பொஸ்னிய, குரோஷிய தேசிய வாதிகளின் ஒரு இராணுவ வெற்றிக்கு ஆதரவளிப்பதிலேயே வேக்காடாகியுள்ளது.

## 'வடதிசை பாதை' க்கான இராணுவத் தலையீட்டுக்கு தொழிலாளர் புரட்சி கட்சி பிரச்சாரம்

ஹோரே—சுலோட்டரினால் விளக்கப்பட்ட கோட்பாட்டு நிலைப்பாடுகளின் கீழ் தொழிலாளர் புரட்சி கட்சியின் நடைமுறை அரசியல், பால்கனில் ஏகாதிபத்திய வாதிகளின் இலக்குகளுடன் நேரடியாக ஒருமித்துப் பயணம் செய்வது தவிர்க்க முடியாதது. தொழிலாளர் உதவி என்ற போலி மனிதாபிமான முகமூடிகளின் கீழ் பிருத்தானிய தொழிலாளர் புரட்சி கட்சி முன்னய யூகோஸ்லாவியாவில் ஏகாதிபத்திய வாதிகளின் நடவடிக்கைகளுக்கு இராணுவ உதவிகளை வழங்குகின்றது.

தொழிலாளர் புரட்சி கட்சியின் வாகன ஊர்வலம், உணவு, மருந்துகளை வெறுமனே அடையாளமாக விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை என்பது நன்கு தெரிந்ததே. "தொழிலாளர் உதவி" பொஸ்னியாவுக்குள் இஸட்பெகோவிக் ஆட்சியினதும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களதும் பாவனைக்காக செய்மதித் தொலைத் தொடர்புச் சாதனங்களையும், மற்றும் இராணுவக் கருவிகளையும் கொணர்வதில் ஈடுபட்டிருந்தது. இதன் ட்ரக்குகள் ஐரோப்பிய ஆயுத வர்த்தகர்களாலும் மற்றும் தனி ஆட்களதும் செலுத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களின் அடிப்படையியே செயல்படுகின்றன.

தம்மை ட்ரொட்ஸ்கிஸ்டுக்கள் என அழைத்துக் கொள்ளும் ஒரு இயக்கம், முதலாளித்துவ சக்திகளுக்காக இரகசியமாக துப்பாக்கி போக்குவரத்தில் ஈடுபட்டமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

இதே சமயம் தொழிலாளர் புரட்சி கட்சி தொழிலாளர் உதவியை இப்பிராந்தியத்தில் நேரடியான இராணுவ ஆத்திரமூட்டல்களை தூண்டிவிடப் பயன்படுத்துகின்றது. கடந்த அக்டோபரில் இந்த வாகன ஊர்வலம் யூகோஸ்லாவியாவை வந்தடைந்ததும் இது ருஷ்லாவுக்கு குரோஷியன் கடற்கரை நகரமான ஸ்பிளிட்டுக்குச் சென்று, பின்னர் மத்திய பொஸ்னியாவூடாகச் செல்லவேண்டும் என்ற ஐநா சிபார்சை தொழிலாளர் புரட்சி கட்சி நிராகரித்தது. தொழிலாளர் புரட்சி கட்சி ஐநா பாதுகாப்புப் படையின் இராணுவப் படைப் பிரிவின் (UNPROFOR) பிரிகேடியர் ஜெனரல் ஜெகான் செக்கால்டியுடன் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்ததோடு இது பசோவினா கொரிடோர் வழியாக "வடதிசை பாதை" யில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

இந்தப்பாதை பற்றிய தொழிலாளர் புரட்சி கட்சியின் வலியுறுத்தல் அசாதாரணமான முறையில் கடுமையானதாயும் முதல் பார்வையில் விபரிக்க முடியாததாயும் உள்ளது. தொழிலாளர் புரட்சி கட்சி பிரச்சாரத்தின் மத்திய சுலோகம் "வடதிசை பாதையை திற" என்பதாக மாறியதோடு இரண்டாவது வாகன ஊர்வலம் இத்தகைய ஒரு ஆத்திரமூட்டும் பதாகையின் கீழேயே இடம்பெற்றது. பிரச்சாரத்தில் இடம்பெற்ற இந்த விசித்திரமான திருப்பத்திற்கு ருஷ்லாவுக்கு ஊடாக உதவியைக் கொண்டு செல்கையில் முகங்கொடுக்கும் இராணுவ ரீதியான பிரச்சனைகளுடன் எதுவிதமான தொடர்பும் கிடையாது. "Socialist Outlook" குழுவினரால் வழிநடாத்தப்பட்ட அந்த உதவி வாகன ஊர்வலத்தில் ஒருபகுதி ஐக்கிய நாடுகளின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதால் அது பயணம் செய்வதில் பிரச்சனை தோன்றவில்லை.

"வடதிசை பாதையை" திறக்கும் கோரிக்கையினை தூண்டுபவர்களாக விளங்கியவர்கள் குரோஷியன், பொஸ்னியன் அரசாங்கங்கள் அன்றி வேறுயாரும் அல்லர். பிருத்தானியாவில் உள்ள மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற திரும்பி அறிக்கை சமர்ப்பிக்கும் கூட்டத்தில் (Workers Press, 1993 Nov 6) வாகன ஊர்வலத்தின் தலைவி டொட் கிப்சன் குரோஷியன் யூனியனின் இரண்டு அங்கத்தவர்களான ஜஸ்னா பெட்ரோவிக், மரியோ உகேலினியை பாராட்டினர். "அவர்கள் குரோஷியன் வெளிநாட்டு அமைச்சினதும் பொஸ்னிய ஹேர்ஸ்கோவினா அரசாங்கத்தினதும் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு எமக்கு உதவினார்கள். அங்கு நாம் உதவிப் பாதையை திறப்பது பற்றி கலந்துரையாடினோம்.

எமது வாகன ஊர்வலம் ருஷ்லாவுக்குச் செல்வதற்கு இரு சாராரினதும் உதவியைப் பெற்றோம். குரோஷியாவுக்கு வெளியே பயணம் செய்து, வடதிசை கொரிடோர் ஊடாக ருஷ்லா செல்லும் பொருட்டு நாம் சகிரேப்பில் இருந்து சுபான்சாவுக்கு செல்லவேண்டுமென குரோஷியன் வெளிநாட்டு அமைச்சின் சொமென்கா செக் பிரேரித்தார்".

தொழிலாளர் புரட்சி கட்சி வடதிசை கொரிடோர் ஊடாக அனுப்புவதற்கு முயற்சிக்கையில் அவ்விரு ஆட்சியாளரதும் உள்நோக்கத்தை விளக்க கிப்சன் முயன்றார். அந்தப் பாதை பொஸ்னியன் சேர்பியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர்கள் அதில் 8-15 கிலோ மீற்றர் தூரத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாயும் இதனை தமது பிரதான விநியோகப் பாதையாகப் பயன்படுத்துவதாயும் அவர் விளக்கினார். "இந்த வடதிசை கொரிடோர் முழு யுத்தத்திற்கும் திறவு கோலாக கொள்ளப் படுகின்றது. இது பொஸ்னியாவினதும் ஹேர்ஸ்கோவினாவினதும் பிளவைக் குறிக்கின்றது".

## மேற்கத்தைய தலையீட்டுக்கு தூண்டுதல்

இந்த பசோவினா கொரிடோர் சேர்பியர்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள மத்திய பொஸ்னியாவுக்கும் குரோஷியா உள்ளேயான சேர்பியன் பிராந்தியமான கிரஜினாவுக்கும் இடையேயான தொடுவையாக உள்ளது. இது ஐநா இராணுவ பலத்தினால் மட்டுமே திறக்கப்பட முடியும். இந்த பாதைக்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கான பொஸ்னியன், குரோஷியன் அரசாங்கங்களின் ஆதரவு, சேர்பியாவுக்கு எதிராக மேற்கத்தைய இராணுவத் தலையீட்டைத் தூண்டி விடுவதையே ஒரே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன் மூலம் தொழிலாளர் புரட்சி கட்சி தனது அரசியல் போக்கினை தர்க்க ரீதியான அதன் இறுதி முடிவுக்கு இட்டுச் சென்று கொண்டிருந்தது. அதாவது குரோஷியன் பொஸ்னியன் பிற்போக்காளர்களின் யுத்தத் திட்டங்களில் பங்கு கொள்வது. இவர்களின் "வடதிசை பாதை" உண்மையில் பொஸ்னிய, குரோஷியன் ஆளும் கும்பல்களின் திட்டவட்டமான ஏகாதிபத்திய உதவியுடன் சேர்பியாவுக்கு எதிராக திறக்க முயற்சிக்கும் வட முனைக்கான ஒரு மூடுதிரை மட்டுமே.

இம் முன்னோக்கின் ஏகாதிபத்திய வாதிகளின் தலையீட்டினை வெறிகொண்டு பிரேரிப்பவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக லிபரல் ஜனநாயகத் தலைவரும் மாஜி SAS அதிகாரியுமான (பிருத்தானிய விசேட படைகள்) படி ஆஸ்ட்ன் 1994 பெப்பிரவரி 6ம் திகதிய ஒப்சேவர் பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்: "சரஜேவோவின் பயங்கரத்துக்கு காட்டும் அக்கறை முதலில் ருஷ்லாவினுள் தோன்றவேண்டும்...... ருஷ்லாவைத் திறப்பது சேர்பியர்களும் குரோஷியர்களும் முழு மத்திய பொஸ்னியாவையும் சுற்றிப்போட்டுள்ள "சீலை" (Seal) உடைக்கும்...... நிஜ பலாத்காரத்தைப் பயன்படுத்தும் மிரட்டலின் மூலம் வாகன ஊர்வலத்துக்கு ஆதரவளிக்க வேண்டியதோடு தாக்குதல்களை தவிர்க்க வேண்டும். உதவிகளை விநியோகிப்பதற்கு எதிரான சகல தடைகளுக்கும் எதிர்ப்புக் காட்டவேண்டும், **"Socialist Outlook"** குழு தொழிலாளர் புரட்சி கட்சியின் ஆத்திரமூட்டல்களில் இருந்து பிரிந்ததைத் தொடர்ந்து ஹோரே–சுலோட்டர் அந்த அமைப்பின் தலைவர் அலன் தோர்னட்டுக்கு எதிரான கடும் பழிசுமத்தும் தாக்குதலை வரைந்து கொண்டனர். இந்தப் பத்திரம் தொழிலாளர் புரட்சி கட்சியின் ஏகாதிபத்திய ஆதரவு அரசியலின் ஒழுக்கக் கேட்டினை வெளிப்படுத்துகின்றது.

அவர்கள் பிரகடனம் செய்வதாவது: "வடதிசை பாதையை ஐ.நா திறக்க வேண்டும் எனக் கோருகையில் நாம் சக்தி வாய்ந்த முறையில் ருஷ்லாவை சூழவுள்ள மேற்கத்தைய தடையை ஒரு முடிவுக்கு கொணர வேண்டும் எனக் கோருகின்றோம். இங்கு அவர்களின் செற்னிக் சகாக்கள் சிலர் கொலை செய்யப்படின் அது ஓரளவுக்கு நல்லது". இது தமது குண்டுவீச்சு மிரட்டலை ஸ்திரப்படுத்தும் படி நேட்டோவுக்கு விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளேயன்றி வேறொன்றும் அல்ல. 15 ஜனவரி 1994 ன் வெளியீட்டில் வேர்க்கஸ் பிரஸ் "ஏகாதிபத்தியம் பொஸ்னியாவில் இருந்து வெளியேறு" என்ற தலைப்பிலான ஒரு ஆசிரியத் தலையங்கத்தை பிரசுரித்தது. இந்த வேஷதாரிக் கோலம் நேட்டோ விமானத் தாக்குதல்கள் இடம் பெற இருந்த தருணத்தில் தொழிலாளர் புரட்சி கட்சியின் பயணத் திசையை மூடி மறைக்கவே இடம் பெற்றது. இதே பத்திரிகை வெளியிட்ட டொட் கிப்சனின் ஒரு கடிதம் தொழிலாளர் புரட்சி கட்சியின் நிஜ பயணத் திசையை சுட்டிக்காட்டியது.

## பாதுகாப்பு மந்திரிக்கு முறையீடு

ஜனவரி 10ம் திகதியிடப்பட்ட கிப்சனின் கடிதம் குரோஷியன் பாதுகாப்பு அமைச்சர் கொஜ்கோ சுசக்குக்கு விலாசம் இடப்பட்டிருந்தது. "ஓராஸ்ஜேயில் இருந்து ருஷ்லா வரையிலான வடதிசைப் பாதையில் தடையை அகற்றும் பொருட்டு நீங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும் எனக்கோரவே இதனை நாம் எழுதுகிறோம்" எனக் குறிப்பிடும் இக் கடிதம் இங்ஙனம் கூறுகிறது. எமது மனிதாபிமான உதவி வாகன ஊர்வலம் இப்போது சுபன்ஜாவில் உள்ளது. அங்கிருந்து குரோஷியாவில் இருந்து வெளியேறும் அனுமதியைப் பெற்றுள்ளோம். ஆனால் நீங்கள் HVO படைகளுக்கு பாதையைத் திறந்து விட அனுமதி கொடுக்கும்வரை நாம் பயணம் செய்ய முடியாது".

HVO என்பது குரோசியன் இராணுவமாகும், யூகோஸ்லாவிய உள்நாட்டு யுத்தத்தின் போது சில படுபயங்கரமான கொலைகளை இதுவே செய்துள்ளது. மோஸ்டர் நகரில் மட்டும் இதன் படைப் பிரிவுகள் இடைவிடாத குண்டு வீச்சுக்கள் மூலம் ஆயிரக்கணக்கான முஸ்லீம்களை படுகொலை செய்துள்ளன. அரசியல் ரீதியில் இது பாசிச உஷ்டாஷேயின் பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கிறது. இதன் படைகளுக்கு "பாதையைத் திறக்கும் படி" கோருவதானது சேர்பியர்களுக்கு எதிரான முழு அளவிலான இராணுவத் தாக்குதலுக்கான ஒரு அழைப்பாக மட்டுமே அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

"வேர்க்கஸ் பிரஸ்" அதன் பெப்பிரவரி 12ம் திகதிய வெளியீட்டில் "வடதிசை பாதை" விடயம் தொடர்பாக தொழிலாளர் புரட்சி கட்சியின் திரிபு வாதக் கூட்டாளிகளை தாக்குவதற்குத் திரும்பியது. இந்த விடயத்தில் இது ருஷ்லாவுக்கான உதவியை தென்திசை பாதையூடாக விநியோகிக்க முடிவு செய்ததற்கான பிரான்சிய "லீக் கம்யூனிஸ்ட் றெவுலூசனேர்" (LCR) ஐ கண்டனம் செய்தது.

"வேர்க்கஸ் பிரஸ்" எழுதுவதாவது: ஆனால் ஓராஸ்ஜேயில் குரோஷியன் எல்லையில் இருந்து தொடங்கும் வடதிசை பாதை பிருத்தானிய அல்லது கங்கேரியன் ட்ரொட்ஸ்கிஸ்டுக்களின் கண்டுபிடிப்பு அல்ல. இதன் திறப்பு பொஸ்னியர்களாகவே செய்து கொண்ட தீர்க்கமான அரசியல், இராணுவ, புவியியல் ஆய்வுகளில் இருந்து பெருக்கெடுக்கும் தெளிவான இலக்காகும். அவர்கள் பேசுவது எதைப்பற்றி என்பதை அறிந்த சக்ராபில் உள்ள ருஷ்லாவின் பிரதிநிதிகள் அவர்களிடையே உள்ளனர்".

இது மிகவும் தெளிவானது. யூகோஸ்லாவியாவிலான தொழிலாளர் புரட்சி கட்சியின் நடவடிக்கைகள் பொஸ்னியன் முதலாளித்துவ ஆட்சியினால் செய்யப்பட்ட "தீர்க்கமான அரசியல், இராணுவ, புவியியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை". அரசியலில் எந்தவிதமான வர்க்க அணுகுமுறையையும் கைவிட்ட முழு வெக்கக் கேடான ஒரு அரசியல் கட்சி இதுவாகும். சோசலிச அடிப்படைக் கொள்கைகளும் பாட்டாளி வர்க்கத்தின் சுயாதீனமான நலன்களும் பற்றிய பிரச்சனைகள் இதன் கணிப்புக்களில் இடம் பெறுவதே கிடையாது.

சமீப வாரங்களில் சரஜேவோவிலான நேட்டோ குண்டு வீச்சுக்கான காலக்கெடுவைத் தொடர்ந்து கொராஸ்டேயைச் சூழவுள்ள சேர்பிய நிலைகளுக்கு எதிரான நிஜ விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன. நேட்டோவின் உள்ளும் ஐ.நா சபையினுள்ளும் ருஷ்லாவுக்கு குண்டு வீச்சு அச்சுறுத்தலை விஸ்தரிப்பது பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளன. சுலோட்டரும் குரோஷியன், பொஸ்னிய அரசாங்கங்களில் உள்ள அவரின் கூட்டாளிகளும் அமெரிக்க யுத்த விமானங்களின் "வடதிசை பாதை" யை திறக்கும் தமது கோரிக்கை யதார்த்தமாக்குவதை நன்கு காணமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

ட்ரொட்ஸ்கிஸ்டுக்கள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு குழு இதற்கு முன்னர் ஒருபோதுமே ஒரு ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான தாக்குதலைத் தயார் செய்வதில் முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனும் ஏகாதிபத்திய இராணுவத்துடனும் நேரடியாக இணைந்து கொண்டது கிடையாது. தொழிலாளர் புரட்சி கட்சி தன்னை ஒரு பொஸ்னியன், குரோஷியன் யுத்த அமைச்சுக்களதும் ஐ.நா நேட்டோக்களதும் இணைப்பாக மாற்றிக் கொண்டுள்ளது.

சுலோட்டரது அமைப்பின் இந்தத் திருப்பம், 1985 பிளவினுள் உச்சக் கட்டத்தினை அடைந்த தொழிலாளர் புரட்சி கட்சியின் தேசிய சந்தர்ப்ப வாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழுவினுள் இடம் பெற்ற போராட்டத்தின் புறநிலை முக்கியத்துவத்தினை தெளிவு படுத்துகின்றது. தொழிலாளர் புரட்சி கட்சியின் சந்தர்ப்பவாத மூலகங்கள் அம்பலப்படுத்தப்பட்டு நான்காம் அகிலத்திலிருந்து வெளியே ற்றப்படாது இருப்பின் அனைத்துலகக் குழுவும் ஏகாதிபத் தியத்தின் ஒரு அரசியல் முண்டுகோலாக மாறச் செய்யப் பட்டிருக்கும்.

தொழிலாளர் புரட்சி கட்சியின் பரிணாமம், ஒரு கணிசமான காலப் பகுதிக்கு ஸ்ராலினிச அதிகாரத்து வத்தின் மீதும், முதலாளித்துவ தேசிய வாத இயக்கங் களின் மீது சார்ந்து வந்த முழு குட்டி முதலாளித்துவ, இடதுசாரி தட்டினரதும் சீரழிவுப் போக்கின் ஒரு பாகமாகும். சோவியத் யூனியனின் சரிவுடனும் தேசிய விடுதலை இயக்கங்களின் உலகளாவிய ரீதியிலான அடிபணிவுடனும் இந்த சமூகத் தட்டினர் அவசர அவசரமாக ஏகாதிபத்திய முகாமினுள் நுளைந்தனர்.

அனைத்துலகக் குழுவின் பிளவின் பின்னரான 9 ஆண்டு காலத்தினுள் தொழிலாளர் புரட்சி கட்சி ஒரு பூரணமான அரசியல் பரிணாமத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன் அரசியல் போக்கும் இதன் நடைமுறை செயற்பாடுகளும் சில வினோதமான மாற்றங்களையும் திருப்பங்களையும் காட்டிக்கொண்ட போதிலும் அதன் முழு நடவடிக்கை களின் ஊடாக ஒரு திட்டவட்டமானதும் தொடர்ச்சியான துமான நூல் ஓடியுள்ளது. சுலோட்டரின் அரசியல் வழிகாட்டலின் கீழ் இந்த அமைப்பின் அங்கத்தவர்கள் இதன் அரசியலை தீர்மானம் செய்கையில் எதுவிதமான வர்க்க விமர்சனத்தையும் கைவிடும் வண்ணம் ஒழுங்கு முறையாகப் பயிற்றப்பட்டனர்.

## புரட்சிகர தார்மீக வாதத்தின் அரசியல்

பிளவு இடம்பெற்ற வேளையில் சுலோட்டர் "புரட்சிகர தார்மீகம்" என்ற சுலோகத்தை முன்வைத்ததோடு, தொழிலா ளர் புரட்சி கட்சியின் உள்ளேயான நெருக்கடி அதன் தலைமை "மனித இன தனிநபர்களின் உரிமைகளை" அங்கீகரிக்கத் தவறியதன் ஒரு பெறுபேறாகும் எனப் பிரகடனம் செய்தார். அதே சமயத்தில் அனைத்துலகக் குழு, சுலோட்டர் வர்க்கம் இல்லாத பதங்களை பயன்படுத்தி யதை சுட்டிக் காட்டியதோடு அவை அதன் உள்ளடக்கத் தில் முதலாளித்துவ லிபரல்களான கம்யூனிஸ்ட் விரோத வாயடிப்புகளுடன் ஒத்திருந்தன.

தொழிலாளர் புரட்சி கட்சி உடனடியாக ஒரு ஆத்திரம் ஊட்டும் பகிரங்கப் பிரச்சாரத்தினை அபிவிருத்தி செய்தது. இது குட்டி முதலாளித்துவ தார்மீக வாதத்திலிருந்து பெருக்கெடுத்தது இயற்கையே. 1988ல் வைல்ட் போயர் வழக்கில் (Wild Boar Trial) ஒரு வினோதமான சம்பவம் இடம் பெற்றது. அந்த வழக்கில் உதைபந்தாட்ட போட்டிகளில் கறுப்பு இன, ஆசிய தொழிலாளர்களையும் இளைஞர்களையும் வேறுபடுத்தி உடல் ரீதியாகத் தாக்கு தல் நடாத்திய பாசிச அனுதாபிகள் கும்பலின் ஒரு தலைவ னாக விளங்கிய குற்றத்தின் பேரில் சுலோட்டரின் மகன் பட்ரிக் (Patrick) குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார்.

வழக்கு விசாரணை இடம்பெற்ற சமயத்தில் தொழிலாளர் புரட்சி கட்சி இந்தக் குற்றச் சாட்டுக்களை ஒரு போதும் சவால் செய்யவில்லை. பட்ரிக்குக்கு தண்டனை வழங்கப் பட்ட ஆறு வாரங்களின் பின்னர், அனைத்துலகக் குழுவுக் கும் வேர்க்கஸ் லீக்குக்கும் எதிரான ஒரு சேறடிப்புப் பிரச்சாரத்தை அனைத்துலக ரீதியில் ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் அனைத்துலகக் குழுவின் எந்த ஒரு பகுதியும் இந்த விவகாரம் தொடர்பாக ஒரு வரியும் எழுதாது இருந்த வேளையில், சுலோட்டர் தனது மகனின் நிலையை மீட்டு போதுமான அனுதாபம் காட்டாமைக்காக ட்ரொட்ஸ் கிச இயக்கத்தைக் கண்டனம் செய்தார்.

ஆச்சரியமான முறையில் அவர் இந்த Wild Boar வழக்கின் பிரதிவாதிகளை– இதில் பேர்போன பாசிஸ்ட்டுக்கள், தேசிய முன்னணி (N.F) அனுதாபிகள் அடங்குவர்.– "முதலாளித் துவத்தினதும், டோரிகளதும் சமூக நெருக்கடியின் பலிக்கடாக்களாக வேட்டையாடப்பட்டுள்ள ஒரு இளைஞர் குழுவாக அவர்களை வருணித்தார்.

இறுதியில் அவர் "அவரினால் நாசமாக்கத் தீர்மானிக்கப் பட்ட ஆட்களின் தனிப்பட்ட குண இயல்புகளையும் நேர்மையையும் நிர்ப்பந்திப்பதாகவும்" "ஒடுக்குவோரின் எதிரில் புறநிலமைக்காகவும் மனித கௌரவத்துக்காகவும் கொள்கைப் பிடிப்பான போராட்டத்தினை" பகிஷ்கரிப்பதென அவர் குறிப்பிட்டுக் கொள்வதன் பேரில் வேர்க்கஸ் லீக் தேசிய செயலாளர் டேவிட் நோர்த்தை கண்டனம் செய்தார். இவை எல்லாம் வன்முறை இனவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டம் மத்திய தர வர்க்கக் குண்டர்களையும் பாசிச காடையர்களையும் பேணுவதற்கு மறுத்தமைக்காகவே!

பின்னர் 1990ல் தொழிலாளர் புரட்சி கட்சி முதலாளித்துவ தேசிய வாத சுவாப்போ (SWAPO) இயக்கத்துக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்ட ஒரு வலதுசாரி மனித உரிமைகள் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. நமீபியாவின் முதலாவது தேர்தல் இடம்பெற இருந்த சமயத்தில் தொடுக்கப்பட்ட இந்த பிரச்சாரத்தின் புறநிலையானது நமீபியன் தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு அரசியல் சுதந்திரத்தினை உருவாக்கிக் கொடுப்பதற்காக அன்றி, உள்நாட்டு ஒடுக்குமுறை பற்றிய பெரிதும் பூதாகரப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்ப டையில் "சுவாப்போவை" தூஷிப்பதாக விளங்கியது. இந்த பிரச்சார இயக்கம் தென்னாபிரிக்க உளவுச் சேவையான Boss இனால் தொடுக்கப்பட்ட இத்தகைய செய்முறைக ளுடன் ஒத்துப்போகும் விதத்தில் தெளிவாக தயார் செய்யப் பட்டது.

இந்த நிலைப்பாடுகளின் நிஜ முக்கியத்துவம் இப்போது பெரிதும் தெளிவாகியுள்ளது. இது ஒரு புறத்தில் கட்சியின் அரசியலையும் மறுபுறத்தில் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க நலன்களுக்கும் மார்க்சிசத்தின் கொள்கைப் பிடிப்பான நிலைப்பாடுகளுக்கும் இடையே எந்தவிதமான உறவும் இருப்பதை நிராகரிக்க, சிந்தனாமுறையில் அதன் அங்கத்த வர்களை சீரழியச் செய்து, அதன் மூலம் அரசியல் ரீதியில் தைரியம் இழக்கச் செய்ய உதவியது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## ஏகாதிபத்திய குற்றங்களுக்கு உடந்தை

பால்கனில் யுத்தத் திசையில் கட்டவிழ்க்கப்பட்ட சக்தி வாய்ந்த தேசிய அழுத்தங்களின் கீழ் தொழிலாளர் புரட்சி கட்சி அவ் அரசியல் பரிணாமத்தினை பூர்த்தி செய்து கொண்டுள்ளது. பால்கன் அரசுகளின் முதலாளித்துவ அமைச்சுக்களுள் வரவேற்கப்பட்ட ஒரு கட்சி– பாசிச இராணுவத்தின் சேவைகளுக்கு பேரம் பேசுகின்றதும் முதலாளித்துவ அரசாங்களுக்கு இராணுவத் தளபாடங் களை போக்குவரத்துச் செய்கின்றதும், அவ்வாறே ஏகாதி பத்திய இராணுவத் தலைமீடுகளுக்காக பிரச்சாரம் செய்கின்ற துமான ஒரு கட்சி உண்மையில் மறுபக்கத்தைச் சென்ற டைந்துள்ளது.

தொழிலாளர் புரட்சி கட்சியை இன்று ஒரு மத்தியவாத அமைப்பாக வரைவுலக்கணம் செய்ய முடியாது. இது சீர்திருத்தத்துக்கும் புரட்சிக்கும் இடையே எங்கோ ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள கட்சியல்ல. இது தொடர்ந் தும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை வழக்காறான முறையில் தன்னும் ஏற்றுக் கொள்ளும் ஒரு குழு அல்ல. இது ஒரு முதலாளித்துவ வேலைத்திட்டத் தினை யதார்த்தமாக்கும் நோக்கில் ஏனைய முதலாளித்துவ வர்க்க சக்திகளின் மேல் சார்ந்து கொள்வதன் அவசி யத்தை அழுத்தம் திருத்தமாக பிரகடனம் செய்துள்ளது.

பால்கனின் சமுதாயத்தை சோசலிச மறுசீரமைப்பு செய்யும் ஏஜன்டாக இது தொழிலாள வர்க்கத்தை நிராகரிப்பின், இது இங்கிலாந்திலும் அதனை நிராகரித்தே ஆகவேண்டும். பால்கனிலான அதன் இலக்குகளை அடைய இது முதலாளித்துவ அரசபடைகளை பயன்படுத்துமாயின் இது அதனை பிரிட்டனிலும் செய்யும்.

பொஸ்னியாவில் தொழிலாளர் புரட்சி கட்சி தேசிய பாதுகாப்பின் ஒரு தேசாபிமானக் கட்சியாகவும், படு பிற்போக்கு தேசியவாதப் படைகளின் விசுவாசத்துக்குரிய ஒரு கூட்டாளியாகவும் தொழிற்பட தான் தயார் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. பிருத்தானியாவில் இதே பாத்திரத் தினை இட்டு நிரப்புவதை தடைசெய்ய அடியோடு எதுவும் இல்லை. இது ஏற்கனவே தொழிற்சங்கங்களி னதும் தொழிற்கட்சி அதிகாரத்துவங்களினதும் இணைப் பாகவும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான அரசியல் சூழ்ச்சியின் ஒரு வாகனமாகவும் தொழிற்பட்டு வருகின்றது. எதிர்காலத்தின் ஒரு கட்டத்தில் இது தேசிய மீட்சியின் ஒரு முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் ஒரு பாகமா கவும் மாறலாம்.

சுருங்கச் சொன்னால் தொழிலாளர் புரட்சி கட்சியை நான்காம் அகிலத்தில் இருந்து பிரிக்கும் கோடுகள், புரட்சியை எதிர்ப்புரட்சியில் இருந்து பிரிக்கும் கோடுகளா கும். இக் கட்சி நீண்ட தேசியவாத சந்தர்ப்பவாத சீரழிவின் விளைவாக ஒரு முதலாளித்துவப் போக்காக மாறியுள்ளது.

தொழிலாளர் புரட்சி கட்சியின் அரசியல் பரிணாமம், உலகளாவிய ரீதியில் வர்க்க உறவுகளில் இடம்பெறும் மிகமுக்கியமான பெயர்ச்சிகளின் கட்டியக்காரனாக உள்ளது. புரட்சிகர கிளர்ச்சி எழுச்சிகளின் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் முன்னோடியாக அத்தகைய அரசியல் மாற்றங்களும், மறுகூட்டுக்களும் இடம்பெறுகின்றன. எதிர்வரும் வர்க்கப் போராட்டத்தினுள் இட்டுநிரப்பும்படி அழைக்கப்படும் பாத்திரத்துக்காக அரசியல் கட்சிகள் தம்மை தயார் செய்கின்றன. குட்டி முதலாளித்துவ மத்திய வாத இயக்கங்களின் அத்தகைய பரிணாமங்கள் 1930 களிலும் 1940 களிலும் அடிக்கடி தரிசிக்கப்பட்டன.

சுலோட்டரும் அவரது தொழிலாளர் புரட்சி கட்சியும் தமது நிலைப்பாட்டை எடுத்துள்ளன. ருஷ்லா வழியாக அவர்கள் ஏகாதிபத்திய முகாமை சென்றடைந்துள்ளனர்.

முதலாளித்துவ ஆட்சியின் அத்திவாரம் குழிபறிந்து போய்க் கொண்டுள்ள நெருக்கடிக் காலப்பகுதியில் முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தினுள் தீர்க்கமான பாத்திரத்தினை வகித்த ஆட்களிடமிருந்து உதவி வேண்டுவதாக, சுலோட் டர் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் தலைமை உறுப்பினராக விளங்கியபோது அடிக்கடி சுட்டிக் காட்டியதுண்டு. இரண்டாம், மூன்றாம் அகிலங்களைப் பொறுத்த மட்டில் அது அப்படியே இருந்தது. அதேபோலவே லங்கா சமசமாஜ கட்சி இலங்கையில் திருமதி பண்டார நாயக்காவின் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டது பற்றிய சொந்த அனுபவமும் நான்காம் அகிலத்துக்கு உண்டு.

அனைத்துலகக் குழுவினுள் சந்தர்ப்பவாதப் போக்குகள் தோன்றுமாயின் அதன் தலைவர்கள் ஏகாதிபத்தியத்தின் சார்பில் நேரடிச்சேவை செய்ய இழுக்கப்பட்டுள்ளதை விரை வாகக் காண்பார்கள் என தீர்க்கதரிசனம் கூறும் அளவுக் கும் அவர் சென்றார்.

அந்த நாட்களில் கிளிவ் சுலோட்டர் அத்தகைய ஒரு போக்கின் தலைவராக தானே மாறுவார் என்பதையும், ஒரு ஏகாதிபத்தியத்தின் இரத்தம் தோய்ந்த குற்றங்களின் சக பாடியாகத் திரட்டப்படுவார் என்பதையும் கற்பனை செய்திருக்க முடியுமா?

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்